
கல்கி
KALKI
13.9.1970
40 காசு



போட்டோ பிடிக்க மிகச் சிறந்த காமிரா ஆக்பா க்ளிக்-III

தொடங்கவும், தொடர்ந்து படமெடுக்கவும் தலைசிறந்தது!

- கையாளுவது எளிது. எதையும் அட்ஜஸ்ட் செய்யவேண்டிய அவசியமில்லை.
- ஒவ்வொரு 120 ரோல் பிலிமிலும் 12 பெரிய (6 × 6 செ.மீ.) படங்கள் எடுக்கலாம்.
- தனி விலைக்கு வசதியான லெதர் கேஸ், ஏ 1 ஃப்ளாஷ் கன் மற்றும் போர்ட்ரெய்ட் லென்ஸ் கிடைக்கும்.

பளபளப்பான பிரிண்டுகளுக்கும் என்லார்ஜ்மெண்டுகளுக்கும் ஆக்பா போட்டோ பேப்பர்களையே வாங்குங்கள்.

அங்கீகாரம் பெற்ற எல்லா ஆக்பா வியாபாரிகளிடமும் கிடைக்கின்றன.
ஆக்பா கேவார்ட் கூட்டுறவுடன் தயாரிப்போர்:
தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.



ரூ. 46.50 (வரிகள் தனி)

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய், புது டில்லி, கல்கத்தா, சென்னை



ஆக்பா க்ளிக்—இந்தியாவில் மிகவும் பிரபலமான காமிரா.

® இது போட்டோகிராபி பொருள்களைத் தயாரிக்கும் ஆக்பா கேவார்ட், ஆண்ட்வர்ப்-லெவர்குஸன்-ன் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.

CHAG-139-203R Tam

கல்கி

பொருளடக்கம்

சாதாரண, ஆவணி 28 :: 1970 செப்டம்பர் 13

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


நக்ஸல்பாரி விஷம் பரவுகிறது!

1967ல் மேற்கு வங்கத்தில் நக்ஸல்பாரி என்ற இடத்தில் வன்முறை அக்கிரமம் தோன்றியது. இது 'நக்ஸல்பாரி பாணி' என்றே பெயர் பெற்றது. அதன்பின் அது பரவி, இப்போது ஹரியாணா, குஜராத், ராஜஸ்தான், மைசூர் நீங்கலாக நாடெங்கிலுமே சுற்றிச் சூழ்ந்து விட்டது.

மேற்கு வங்கம், பிஹார், நேபாள–இந்திய எல்லை, ஆந்திரப் பிரதேசம், கேரளம் முதலிய இடங்களில் நக்ஸல்பாரியர் மிகத் தீவிரமாக உள்ளனர். ஜம்மு—காச்மீரம், பஞ்சாப், ஹிமாசலப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய ராஜ்யங்களில் இவர்கள் வேரூன்றி வருகின்றனர்.

பயங்கர முறைகளைக் கையாண்டு சமூக ஒழுங்கைக் குலைப்பதே நக்ஸல்பாரிக்காரர்களின் மதம். கொலை, கொள்ளை, தீ வைப்பு, ஆக்கிரமிப்பு முதலியவையே அவர்களது செயல்திட்டம். மக்களின் வாழ்க்கைக்கும் சொத்துக்கும் அவர்கள் பயங்கர விரோதிகளாவர்.

கீழே உள்ள தேசப் படம் நாட்டில் நக்ஸல்பாரிகளின் நிலைமையை விளக்குகிறது.



1. ஸ்ரீநகர் (நக்ஸல்பாரியினர் வேர் பிடிக்கின்றனர்.) 2. பஹ்ரைச் மலை (மிகத் தீவிரமாக உள்ளனர்.) 3. நேபாள - இந்திய எல்லை (நக்ஸல்பாரியினர் மறைந்து வாழும் ஒளிவிடங்கள் உள்ளன.) 4. வட பிஹார் (மிகத் தீவிரம்.) 5. 1967ல் நக்ஸல்பாரி இயக்கம் இங்குதான் தோன்றியது. 6. திரிபுரா (தீவிரம்.) 7. கல்கத்தா (காங்கிரஸின் பிளவுக்குப்பின் நக்ஸல்பாரி இயக்கம் வளர்ந்து விட்டது. கொலையும், கொள்ளையும், தீ வைப்பும் ஆதிக்கம் செலுத்துகின்றன.) 8. சோடா நாகபுரி (தீவிரம்.) 9. ஸ்ரீகாகுளம் (மிகத் தீவிர கோஷ்டி உள்ளது.) 10. ஹைதராபாத் (நக்ஸல்பாரிக் கொள்கைகளின் கேந்திர ஸ்தானம்.) 11. தஞ்சாவூர் ('சம்பிரதாய' கம்யூனிஸ்டுகளுடன் நக்ஸல்பாரியினரும் தீவிரமாக உள்ளனர்.) 12. மதுரை (தீவிரம்.) 13. கேரளம் (மிகத் தீவிரமான கோஷ்டிகள் உள்ளன.) 14. மகாராஷ்டிரம் (வேர் பிடிக்கின்றனர்) 15. பஞ்சாப் (வேர் பிடிக்கின்றனர்.) 16. ஜம்மு நகர் (தீவிரம்.)

நன்றி: "இந்தியன் எக்ஸ்பிரஸ்"

மலர் 30

இதழ் 7

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மூர்த்தி வழிபாடு

விளக்கவொண்ணாத பரம்பொருளின் தத்துவத்தை உலகின் மற்ற மகத்தான புராதன மதங்களைச் சேர்ந்தவர்களைவிட அதிகமாக உட்புகுந்து ஆராய்ந்தவர்கள் ஹிந்து சமய ஞானிகள். உலகின் மற்றப் பெருமதங்கள் ஒரே ஒரு கடவுளை வழிபடுபவை. (இவை 'மோனோ — தீஸ' மதங்கள் எனப்படும். ஹிந்துக்கள் பல தெய்வம் கொள்வதாகவும், ஹிந்து மதம் 'பாலி — தீஸம்' என்றும் சொல்வதுண்டு.) ஆனால் அடிப்படையில் ஹிந்து மதமும் ஒன்றேயான கடவுளைத்தான் பல ரூபங்களில் வழிபடுகிறது என்று பொதுவாகச் சொல்லிவிடலாம்.

ஹிந்து வேதாந்தம் இவ்விஷயத்தில் இன்னும் ஆழமாகச் செல்கிறது. 'எல்லையற்ற பரம்பொருளை அளக்க முடியாது, எடைபோட முடியாது' என்பது போலவே, 'அந்தப் பரம்பொருளை ஒன்று என்றோ பல என்றோ எண்ணவும் முடியாது' என்கிறது. 'எண்ணிக்கையில் அடங்காதவன்' (அஸங்க்யேய:) என்பது விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் ஒரு நாமமாகும். அவனை 'ஒன்றேயானவன்' (ஏக:) என்றும் 'பலவானவன்' (அநேக:) என்றும் ஸஹஸ்ரநாமம் அழைக்கிறது. எனவே, கடவுளை நம்மால் அளவிட முடியாது, அவனது உருவை நம்மால் கிரகிக்க முடியாது என்றெல்லாம் கூறுவது போலவே, கடவுள் ஒருவனா அல்லது பலவா என்பதையும் நமக்கு அப்பாற்பட்டதாகக் கருத வேண்டும். கடவுள் என்று கூறி எந்த எல்லையற்ற அனந்தத்தை நாம் வழிபடுகிறோமோ, அதனை எண்ணிக்கை என்ற அடிப்படையிலிருந்தும் அப்பாற்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

இல்லதும் உள்ளதும் அல்லது அவன்உரு
எல்லையில் அந்நலம் புல்கு பற்றற்றே

என்று வைணவ முனிவர் நம்மாழ்வார் பாடினார். நாம் பார்த்துள்ள, அல்லது கற்பனை செய்துள்ள, பொருள் எதைப் போன்றதும் அல்ல அவனது ரூபம்; இவ்விதம் எல்லை கடந்த அந்த நலத்தை, ஆசையனைத்தும் விட்டுப் பற்றுவாயாக என்கிறார்.

கடவுள் தத்துவம் அனைத்துக்கும் அப்பாற்பட்டது என்று ஒப்புக்கொண்டு விட்டு, கடவுளை ஒரே ஒரு வடிவத்தில் தான் கொள்ள வேண்டும் என்று 'மோனோ தீஸ'வாதம் செய்வது அபத்தமாகும். 'கடவுளை எடை போட முடியாது, அவரை அளந்து பார்க்க முடியாது, அவரது உருவத்தை விளக்க முடியாது' என்றெல்லாம் ஒப்புக் கொள்ளும் அறிவாளிகள், 'கடவுளை ஒருவராகத்தான் கொள்ள வேண்டும், பலவாக அல்ல' என்று எண்ணிக்கையில் மட்டும் அவரைக் கட்டுப்படுத்துவது, சித்தாந்த ரீதியில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஓர் அபத்தம் என்றே சொல்லலாம்.

சித்தாந்த ரீதியில் அபத்தமாயிருப்பது ஒருபுறமிருக்கட்டும். வேறுவிதத்தில் இப்பிரச்னையைப் பார்க்கலாம். அனந்தமான பரம்பொருளை உருவமற்ற ஒன்றாகத்தான் தியானிக்க வேண்டுமா, அல்லது வழிபாட்டில் நமக்குத் துணை புரிவதற்காக, அப்பரம்பொருளுக்கெனப் பல பெயர்களையும் ஸ்தூல மூர்த்திகளையும் உபயோகித்துக்கொண்டு இவ்வழியே அந்தப் பரம்பொருளைப் பக்தியுடனும் பணிவுடனும் போற்றித் துதிக்கலாமா?

இக் கேள்விக்கு விடை சொல்லுமுகமாக ஓர் உவமை காட்டுகிறேன். ஸ்தூலமாக உள்ள பொருட்களைக் கணித சாஸ்திரம் வெறும் இலக்கங்களாலேயே குறிப்பிடுகிறது. அதாவது ஸ்தூலப் பொருட்களுக்கு இலக்கங்கள் மூர்த்தியாகின்றன. உதாரணமாக, $4+3=7$ என்றால் அது, 4 பசுக்களும் 3 பசுக்களும் சேர்ந்தால் 7 பசுக்கள் என்பதைக் குறிக்கலாம்; அல்லது 4 கஜம் துணியும் 3 கஜம் துணியும் சேர்ந்தால் 7 கஜம் துணியாகும் என்பதைக் குறிக்கலாம். கணக்குப் போடும்

போது, பசு, துணி முதலிய எந்த ஸ்தூலப் பொருளையும் நம் மனத்தில் கொண்டு வராமலே, எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு முடிவு காண்கிறோம். 'அல்ஜிப்ரா'வில் இதற்கும் ஒரு படி மேலே போகிறோம். இலக்கங்களுக்கும் மூர்த்தியாக a, b, x, y முதலியவற்றைக் கையாள்கிறோம். எப்படியாயினும் கணக்குப் போடுகையில் எது மூர்த்தி, எது மூர்த்தி குறிப்பிடும் வஸ்து என்று குழப்பிக் கொள்வதில்லை. மூர்த்தியையே வஸ்துவாக வைத்துக்கொண்டு கணக்குப் போடுகிறோம். இவ்விதமே ஹிந்து ஒருவன் ஒரு புல்லை வைத்துப் பூஜை செய்யும்போது அந்தப் புல்லைக் கடவுளாகவே பார்க்கிறான்; 'இந்தப் புல் வெறும் மூர்த்தியே — இம்மூர்த்தி குறிப்பிடும் பொருள் மகா சக்தியான பரம்பொருள்' என்று அவன் மனத்தில் குழப்பிக் கொள்வதில்லை. 'இந்த மூர்த்தி பரம்பொருள் அல்ல; அதற்காக வைத்துக் கொண்ட சின்னமே' என்ற எண்ணம் வழிபாட்டின்போது இருக்குமாயின் அது மூர்த்திக்கு அளிக்கப்பட்ட மதிப்பையே போக்கிவிடும். 'லிங்க நாசம்' என்று சொல்லப்படுவது போல், அந்த மூர்த்தியையே அழித்ததாகும்.

கணக்கில் சின்னங்களை வைத்துக் கொள்வதை விட, வழிபாட்டில் சின்னங்களை வைத்துக்கொள்வதில் இன்னோர் அம்சமும் உண்டு. மூர்த்தியாக வழிபடப் பெறுகின்ற புல் அல்லது விக்கிரகத்திலும், **உண்மையாகவே சர்வாந்தர்யாமியான கடவுள் குடிகொண்டிருக்கிறான்.** கடவுள் ஒன்றே என்னும் கொள்கையுடையவர்களும், அவன் எல்லாப் பொருட்களிலும் உள்ளுறைவதாக ஒப்புகிறார்கள். எனவே ஹிந்து தொழுகின்ற மூர்த்தியுள்ளும் அவன் இருக்கவே செய்கிறான். கடவுள் சர்வ வியாபகன் என ஒப்புக் கொண்டுவிட்டு, 'அவன் எங்குமிருக்கிறான்; ஆனால் ஹிந்து வழிபடும் மூர்த்தியில் மட்டும் இல்லை' என்றால் அது தவறு. ஹிந்து பூஜிக்கும் புல்லும், விக்கிரகமும் அனந்தப் பரம்பொருளுக்கு மூர்த்தி மட்டுமல்ல; வழிபடுபவனைப் பொறுத்த மட்டில் அதில் பரம்பொருளே உள்ளது.

இவையெல்லாம் ஹிந்துக்களின் 'பல தெய்வக் கொள்கை'க்குச் சிரமப்பட்டுச் சொன்ன சமாதானமாகப் பழைய காலத்தைச் சேர்ந்த, பக்தி வாய்ந்த கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஒதுக்கிவிடலாம். ஆனால் ஒரே பரம்பொருளைத்தான் பல வடிவங்களில் ஹிந்துக்கள் வணங்குகிறார்களே யன்றி, பல கடவுள்கள் இருப்பதாகக் கொள்ளவில்லை என்பதற்குப் புராதனமான ரிக் வேதத்திலேயே சான்று இருக்கிறது.

இந்த்ரம் மித்ரம் வருணம் அக்னிம் ஆஹு:
அதோ திவ்ய: ஸ ஸுபர்ணோ கருத்மான்
ஏகம் ஸத் விப்ரா: பஹுதா வதந்(தி)
அக்னிம் யமம் மாதரிச்வானம் ஆஹு:

''ஒன்றேயான சத்தியத்தைத்தான் ஞானிகள் இந்திரன், மித்திரன், வருணன், அக்னி, இறகு கொண்ட திவ்விய கருத்மான், யமன், மாதரிச்வன் என்றெல்லாம் பல பெயரிட்டு அழைக்கிறார்கள்.''

(ரிக்வேதம் 1–164–46)

இது ஸாயணாச்சாரியாரோ, வேறு பண்டிதரோ எழுதிய பாஷ்யம் அல்ல.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

மக்கட் சபையில் ராஜ மானிய ஒழிப்பு மசோதாவைத் தோல்வியுறச் செய்வதற்கு எதிர்க் கட்சிகளின் வாக்குப் பலம் சிறிதே குறைந்த போதிலும், ராஜ்ய சபையில் மசோதா தேவைப்படும் பெரும்பான்மை வாக்கைப் பெறத் தவறிவிட்டது. இவ்விதம் அச்சேறும் தறுவாயில் (செப்டம்பர் 5 மாலை) ராஜ்ய சபையில் வாக்கெடுப்பு முடிந்து, மசோதா நிறைவேறவில்லை என சபாநாயகர் அறிவித்துவிட்டார்.

ராஜ்ய சபை, மக்கள் சபை இரண்டும் சேர்ந்து கூடி மசோதாவை நிறைவேற்றலாம் என்று விதி எதுவும் இல்லை. எனவே ராஜ மானிய நீக்க மசோதா காலாவதியாகிவிட்டது என்றே கொள்ளலாம்.

ராஜ மானியத்தை ரத்து செய்யும் மசோதாவை இந்திரா காந்தி அரசாங்கம் மக்கள் சபையில் திக்கித் திணறி நிறைவேற்றியது. மாறாக வாக்குப் போடுபவர்களின் மீது கண்டிப்பாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயமுறுத்தியும், ஏழு அல்லது ஒன்பது வாக்கு வித்தியாசத்திலேயே மக்கள் சபையில் ஜயிக்க முடிந்திருக்கிறது. வாக்குப் பதிவு பற்றிச் சில புகார்கள் எழுந்துள்ளன. நான்கு ஆளும் காங்கிரஸ் அங்கத்தினர்களும் ஒரு எஸ். எஸ். பி. அங்கத்தினரும் இரட்டை வோட்டுகள் போட்டிருப்பதாயும், சபைக்கு வந்திராத ஓர் ஆளும் கட்சி அங்கத்தினரின் வாக்குப் பதிவாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது. புகார்கள் எழுகையில் அவை குறிப்பிடப்பட்ட அளவோடு நிற்கும் என்று சொல்வதற்கில்லை.

உடன்படிக்கையில் ஒரு தரப்பினராகிய மன்னர்கள் தாம் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்த பின், இந்திய அரசாங்கம் பிரதிக்ஞையை முறிப்பதற்கு முற்பட்டது கௌரவக் குறைவானது; சட்டவிரோதமானது. மன்னர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு வலுத் தருவதற்காகவே அது குறித்து அரசியல் சாஸனத்திலும் ஷரத்துகள் சேர்க்கப்பட்டன. சாஸனம் தந்த காப்பை ரத்து செய்து விட்டால், மன்னர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் ரத்தானதாக ஆகாது. மன்னர்கள் உடன்படிக்கையில் தமது பங்கை ஆற்றி, அதன் பயனை யூனியன் அரசு அநுபவிக்கையிலேயே, உடன்படிக்கையின்படி சர்க்காருக்கு ஏற்பட்ட கடமையை மறுத்து சட்டம் செய்திருந்தால் அதுசரித்திரத்திலேயே ஒப்புவமை காட்ட முடியாத மோசடியாகி யிருக்கும். இரு தரப்பினர் செய்து

கொண்ட உடன்படிக்கையை சாஸனத்தில் இணைத்துவிட்டு, பின்னர் பார்லிமென்டைக் கொண்டு ஒரு தரப்பினர் மட்டும் அதை ரத்து செய்து விட முடியும் என்பது சட்டத் துறையில் ஓர் ஏமாற்று வித்தையாகும். இவ்வாறு நடக்காமல் பார்லிமென்டின் கௌரவத்தையும் தேசத்தின் கௌரவத்தையும் ராஜ்ய சபை காப்பாற்றியது குறித்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

'சமத்துவ சமூக அமைப்பு'க்கு விரோதமாக இருப்பதால் ராஜ மானியம் நிறுத்தப்படுவதாக மசோதா கூறியது — ராஜமானியம் பற்றிய சாஸனத்தின் 291ம் பிரிவையும், 362ம் பிரிவையும் நீக்கினால்தான் 'சமத்துவ சமூக அமைப்பு' ஏற்படும் என்று சொல்லும் படியாக இப்போது ஒன்றும் நேர்ந்துவிட வில்லை. மேற்படி மசோதா, சர்தார் வல்லப பாய் படேல், ஜவாஹர்லால் நேரு, மகாத்மா காந்தி, மவுன்ட்பாட்டன் பிரபு ஆகியோரின் ஆய்ந்த முடிவை முறிக்க முயன்றது.

★

அரசியல் சாஸனத்தின் 291ம் பிரிவும் 362ம் பிரிவும் ராஜ மானியம் குறித்தவை. சாஸனத்தின் 363ம் பிரிவு, பழைய உடன்படிக்கைகளின் விஷயத்தில் ஸுப்ரீம் கோர்ட்டும் மற்ற நீதி மன்றங்களும் தலையிடுவதற்கு இல்லை என்கிறது. மானிய நீக்க மசோதாவில் இந்தப் பிரிவு பற்றிய பிரஸ்தாபம் இல்லை. இது ஸ்ரீ மொரார்ஜி தேசாய் சுட்டிக் காட்டியது போல், மோசடியாகும். எனவே, இவ்விஷயம் எப்போதாகிலும் ஸுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லுமாகில் 363ம் பிரிவுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற பிரிவுகள் நீக்கப்பட்டிருக்கையில், இப்பிரிவின் கீழ் ஸுப்ரீம் கோர்ட் கட்டுப்பட வேண்டியதில்லை என முடிவாகும் என்று நம்புகிறேன்.

★

மக்கள் சபையில் ராஜ மானிய நீக்க மசோதா மிகச் சிறிய மெஜாரிட்டியில் நிறைவேறியதற்குத் தமிழக ஆளும் கட்சி நேரடியாகப் பொறுப்பாகும். இதிலிருந்து நான் தி. மு. க. வின் மீதோ, அதன் தலைவர்கள் மீதோ தார்மீக ரீதியில் எவ்விதச் செல்வாக்கும் பெற்றிருக்கவில்லை என்றும் எனவே, தி. மு. க.விடமிருந்து இனி பிரிந்துவிட வேண்டும் என்றும் என்னிடம் வலியுறுத்தப்படும். பிரதமரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்யூனிஸ, நாச வேலைக்காரர்கள் முன்னேறும் இச்சமயத்தில் ஒரு ஜனநாயக முன்னணி அமைக்கப்பட வேண்டும் என்று நாட்டின் நன்மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் விரும்பி வருகின்றனர். இப்படிப்பட்ட ஒரு ஜனநாயக முன்னணி அமைக்கப்படுவதற்குத் தன்னால் முடிந்தஅளவு இடையூறை உண்டாக்கிவிட்டது தி. மு. க.

★

ராஜ்யக் கொடி விஷயமாக திரு கருணாநிதி தமிழகச் சட்ட சபையின் ஆலோசனையைப் பெறப் போவதாகக் கூறியிருக்கிறார். இது பற்றி மகிழ்ச்சி யடைகிறேன். அநேகமாக எல்லா முதன் மந்திரிகளும், பார்லிமென்ட் அங்கத்தினர்களும், பொதுவில் பத்திரிகைகள் அனைத்தும் தனிக் கொடி யோசனையை ஆட்சேபித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, இவ்விஷயத்தை விட்டுவிடுமாறு திரு கருணாநிதிக்குச் சட்ட சபை யோசனை கூறுமென நம்புகிறேன்.

★

சட்டத் துறையில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு தீபமாக விளங்கிய ஸ்ரீ எஸ். வரதாச்சாரியார் அவர்கள் மறைந்துவிட்டார்.

தேசத்தின் உச்ச நீதி பீடத்தில் ஸ்தானம் பெறுபவருக்குத் தேவையான கல்வியறிவும், சமநிலை குலையாப் பண்பும் அவரிடம் இருந்தன. அவற்றோடு, அவர் ஒரு பெரியவராக, நல்லவராக, பக்திமானாக இருந்தார். நான் மிகவும் மதித்த மௌனமான அன்பைச் செலுத்திய தலைசிறந்ததொரு நண்பரை இழந்து விட்டேன்.

க்ளாக்ஸோ மில்க் ஃபுட் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கிறது





ஓங்கள் செல்வமும் ஒரு க்ளாக்ஸோ குழந்தை தானே?

குழந்தையின் ஆரம்ப வாழ்வை ஆரோக்கியமாகத் துவக்குகிறது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்; காரணம், குழந்தைக்கு ஊட்டமளிப்பதற்கான எல்லாச் சத்துக்களையும் கொண்டது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்... அவனது எலும்புகளை உறுதியாக்கி, தசைகளையும் இரத்தத்தையும் வளர்க்கிறது அது. இந்தியாவில் முதன் முதலாகக்குழந்தைகளுக்கான பாலுணவைத் தயாரித்தவர்கள் அளிப்பது—க்ளாக்ஸோ மில்க் ஃபுட்

Creative Unit-160 Tam



பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

அத்தியாயம் இருபத்தொன்று

பல்லக்கு ஏறும் பாக்கியம்

அந்த ஆண்டில் வழக்கமாக மாரிக் காலம் ஆரம்பிக்க வேண்டிய காலத்தில் ஆரம்பிக்கவில்லை.

இரண்டு தடவை மழை தொடங்குவது போல் தொடங்கிச் சட்டென்று நின்று விட்டது.

காவேரி ஆற்றிலும் அதன் கிளை நதிகளிலும் தண்ணீர்ப் பிரவாகம் வர வரக் குறைந்து வந்தது.

புது நடவு நட்ட வயல்களுக்குத் தண்ணீர் வரத்து இல்லாமல் பயிர்கள் வாடத் தொடங்கின.

''எல்லாம் வால் நட்சத்திரத்தினால் வந்த விபத்து!'' என்று மக்கள் பேசிக் கொள்ளலானார்கள்.

''நாட்டுக்கு எல்லா விதத்திலும் பீடை வரும் போலத் தோன்றுகிறது! இராஜ்ய காரியங்களில் குழப்பம்; இளவரசரைப் பற்றிய தகவல் இல்லை; அதற்குமேல் வானமும் ஏமாற்றி விடும் போலிருக்கிறது'' என்பவை போன்ற பேச்சுக்களை வழி நெடுகிலும் சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கேட்டுக் கொண்டே வந்தார்கள்.

மழை பெய்யாமல் இருந்தது அவர்களுடைய பிரயாணத்துக்கு என்னமோ சௌகரியமாகத்தான் இருந்தது.

அன்று காலையிலிருந்து வெயில் சுளீர் என்று அடித்தது. பிற்பகலில் தாங்க முடியாத புழுக்கமா யிருந்தது. இராஜ பாட்டையில் மரங்களின் குளிர்ந்த நிழலில் சென்ற போதே அவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

''இது ஐப்பசி மாதமாகவே தோன்றவில்லையே? வைகாசிக் கோடை மாதிரியல்லவா இருக்கிறது?'' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு போனார்கள்.

பழுவேட்டரையரின் அரண்மனைப் பல்லக்கு அவர்களைத் தாண்டிச் சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகு திடீரென்று குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது.

சாலை மரங்களின் இலைகள் காற்றில் அசைந்தாடிச் சலசலவென்ற சத்தத்தை உண்டாக்கின.

வடகிழக்குத் திக்கில் இருண்டு வருவது போலத் தோன்றியது.

வானத்தின் அடிமுகட்டில் இருண்ட மேகத் திரள்கள் தலைகாட்டின.

சிறிது நேரத்துக்குள்ளே அந்த மேகக் கூட்டங்கள் யானை மந்தை மதங் கொண்டு ஓடி வருவது போல் வானத்தில் மோதி அடித்துக் கொண்டு மேலே மேலே வரலாயின.

இளங்காற்று பெருங்காற்முக மாறியது. பெருங் காற்றில் சிறிய மழைத் துளிகள் சீறிக்கொண்டு வந்து விழுந்தன.

சிறு தூற்றல் விழத் தொடங்கிக் கால் நாழிகை நேரத்தில் 'சோ' என்ற இரைச்சலுடன் பெருமழை கொட்டலாயிற்று.

காற்றிலும் மழையிலும் சாலை ஓரத்து விருட்சங்கள் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. சடசடவென்று மரக்கிளைகள் முறிந்து விழத் தொடங்கின. அப்போது அவற்றில் அடைக்கலம் புகுந்திருந்த பட்சிகள் கீச்சிட்டுக் கொண்டு நாலா திசைகளிலும் பறந்தோடின.

சாலையில் போய்க் கொண்டிருந்த ஜனங்களும் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

காற்று மழையிலிருந்து தப்புவதற்காகச் சிலர் ஓடினார்கள். மரக் கிளைகள் தலையில் விழுந்து சாக நேரிடுமோ என்ற பயத்தினால் மற்றவர்கள் ஓடினார்கள்.

அண்ட கடாகங்கள் வெடிப்பது போன்ற இடி முழக்கத்தைக் கேட்டு அஞ்சி வேறு சிலர் ஓடினார்கள்.

மழை பிடித்துக் கொண்ட சிறிது நேரத்துக் கெல்லாம் பகற்பொழுது சென்று இரவு நெருங்கி வந்தது.

அன்றிரவே தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தைச் சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கைவிட்டு விட்டார்கள்.

சேந்தன் அமுதனின் நந்தவனக் குடிலுக்கு அன்றிரவு போய்ச் சேர்ந்தால் போதும் என்று தீர்மானித்தார்கள்.

மழைக்கால இருட்டில் ஒருவரையொருவர் தைரியப்படுத்திக் கொண்டு, ஜாக்கிரதையாக நடந்தார்கள்.

''பூங்குழலி! நடுக் கடலில் எவ்வளவோ புயல்களையும் பெருமழையையும் பார்த்தவளாயிற்றே நீ! மலை போன்ற அலைகளுக்கு மத்தியில் படகு விட்டுக்கொண்டு போகிறவள் ஆயிற்றே! இந்த மழைக்கு இவ்வளவு பயப்படுகிறாயே?'' என்றான் சேந்தன் அமுதன்.

''நடுக் கடலில் எவ்வளவுதான் புயல் அடித்தாலும் மழை பெய்தாலும் தலையில் மரம் ஒடிந்து விழாதல்லவா? விழுந்தால் இடிதானே விழும்?'' என்றாள் பூங்குழலி.

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள் அவர்களுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் சடசடவென்று மரம் முறிந்து விழும் சத்தம் கேட்டது.

சேந்தன் அமுதன் பூங்குழலியின் கையைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு மேலே செல்வதை நிறுத்தினான்.

''இனி அவசரப்பட்டுக் கொண்டு போவதில் உபயோகமில்லை. சாலை ஓரத்தில் இங்கே சில மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் சிறிது நேரம் தங்கி மழையின் வேகம் குறைந்த பிறகு மேலே போகலாம்!'' என்றான் சேந்தன் அமுதன்.

''அப்படியே செய்யலாம். ஆனால் மண்டபத்தை இந்த இருளில் எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்றாள் பூங்குழலி.

''மின்னல் மின்னும் போது பார்த்தால் தெரிந்து விடும். இருபுறமும் கவனமாகப் பார்க்க வேண்டும்!'' என்றான் சேந்தன் அமுதன்.

வானத்தையும் பூமியையும் பொன்னொளி மயமாக்கிக் கண்களைக் கூசச் செய்த ஒரு மின்னல் மின்னியது.



''அதோ ஒரு மண்டபம்!'' என்றான் சேந்தன் அமுதன்

பூங்குழலியும் அந்த மண்டபத்தைப் பார்த்தாள். அதே மின்னல் வெளிச்சத்தில் அவர்களுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய மரம் விழுந்து கிடப்பதையும் பார்த்தாள். விழுந்த மரத்தினடியில் சிலர் சிக்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

''அமுதா! விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்தாயா? அதனடியில்...''என்றாள்.

''ஆமாம், பார்த்தேன். அந்தக் கதி நமக்கும் ஏற்பட்டுவிடப் போகிறது. சீக்கிரம் மண்டபத்துக்குப் போய்ச் சேரலாம்!'' என்று கூறிவிட்டு அமுதன் பூங்குழலியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மண்டபம் இருந்த திசையைக் குறி வைத்து விரைந்து சென்றான்.

இருவரும் மண்டபத்தை அடைந்தார்கள். சொட்ட நனைந்திருந்த துணிகளிலிருந்து தண்ணீரைப் பிழிந்தார்கள். துணியைப் பிழிந்த பிறகு பூங்குழலி தன் நீண்ட கூந்தலையும் பிழிந்தாள்.

பிழிந்த ஜலம் மண்டபத்தின் தரையில் விழுந்து சிறு கால்வாய்களாக ஓடியது.

''அடாடா! மண்டபத்தை ஈரமாக்கி விட்டோமே?'' என்றாள் பூங்குழலி.



''மண்டபத்துக்கு அதனால் தீங்கு ஒன்றுமில்லை. ஜலதோஷம், காய்ச்சல் வந்து விடாது! நீ இப்படிச் சொட்டச் சொட்ட நனைந்துவிட்டாயே?'' என்றான் அமுதன்.

''நான் கடலிலேயே பிறந்து வளர்ந்தவள். எனக்கு இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி'. என்னை மழைத் தண்ணீர் ஒன்றும் செய்து விடாது'' என்றாள் பூங்குழலி.

அவளுடைய உள்ளம் அப்போது தஞ்சாவூர்க் கோட்டைக்கு அருகிலிருந்த சாலை ஓர மண்டபத்திலிருந்து நாகைப் பட்டினத்துச் சூடாமணி விஹாரத்துக்குப் பாய்ந்து சென்றது. 'சமுத்திர குமாரி' என்று அவளை முதன் முதலாக அழைத்தவர் அந்தச் சூடாமணி விஹாரத்தில் அல்லவா இருந்தார்?

''பூங்குழலி! என்னுடைய நந்தவனமும் குடிசையும் சிறிது தூரத்திலேதான் இருக்கின்றன. மழை விட்டதும் அங்கே போய் விடலாம். என் தாயார் உன்னைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுவாள்!'' என்று அமுதன் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் காதில் அரை குறையாக விழுந்தன.

மறுபடியும் பளிச்சென்று கண்ணைப் பறித்தது ஒரு மின்னல்.

அதன் ஒளியில் அவர்கள் முன்னம் அரைகுறையாகப் பார்த்த காட்சி நன்றாகத் தெரிந்தது. இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

சாலையில் ஏறக்குறைய அந்த மண்டபத்துக்கு எதிரே ஒரு பெரிய ஆலமரம் வேரோடு பறிக்கப்பட்டு விழுந்து கிடந்தது. விசாலமாகப் படர்ந்திருந்த அதன் கிளைகளும் விழுதுகளும் தாறுமாறாக முறிந்தும் சிதைந்தும் கிடந்தன.

அவற்றுக்கடியில் இரண்டு குதிரைகளும் ஐந்தாறு மனிதர்களும் அகப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்படி அகப்பட்டுக் கொண்டிருந்தவர்களை விடுதலை செய்து காப்பாற்றுவதற்காக வேறு சிலர் முயன்று கொண்டிருப்பது தெரிந்தது. அவசரம் அவசரமாக அவர்கள் முறிந்துகிடந்த கிளைகளை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

''ஐயோ!'' ''அப்பா!'' ''இங்கே!'' ''அங்கே!'' ''சீக்கிரம்!'' என்பவை போன்ற குரல்கள் மழைச் சத்தத்தினிடையே மலினமாகக் கேட்டன.

இவற்றையெல்லாம்விட அதிகமாகச் சேந்தன் அமுதன் — பூங்குழலியின் கவனத்தை வேறொன்று கவர்ந்தது. விழுந்து கிடந்த மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பல்லக்கு தரையில் வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் இரண்டு ஆட்கள் மட்டும் நின்றார்கள். மற்றவர்கள் விழுந்த மரத்தினடியில் அகப்பட்டுக் கொண்டவர்களைக் காப்பாற்றுவதில் முனைந்திருந்தார்கள் போலும்.

''அமுதா! பல்லக்கைப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் பூங்குழலி.

''பார்த்தேன். பழுவூர் இளையராணியின் பல்லக்கு போல இருந்தது.''

''விழுந்த மரம் அந்தப் பல்லக்கின் மேலே விழுந்திருக்கக் கூடாதா?''

''கடவுளே! ஏன் அப்படிச் சொல்கிறாய்? பழுவூர் ராணியைப் பார்த்து அவள் மூலமாக ஏதோ காரியத்தைச் சாதிக்கப் போகிறதாகச் சொன்னாயே?''

''ஆமாம்; இருந்தாலும், அந்தப் பழுவூர் இளைய ராணியை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை!''

''பிடிக்கா விட்டால், அவள் பேரில் மரம் முறிந்து விழவேண்டுமா, என்ன?''

''சாதாரணப் பட்டவர்களின் தலையிலேதான் மரம் விழவேண்டுமா? ராணிகளின் தலையிலே விழக் கூடாதா?.... அது போனால் போகட்டும். இப்போது நாம் பல்லக்கினருகில் சென்று பழுவூர் ராணியைப் பார்த்துப் பேசலாமா? கோட்டைக்குள் போவதற்கு அவளுடைய உதவியைக் கேட்கலாமா?''

''அழகுதான்! ராணியைப் பேட்டி காண்பதற்கு நல்ல சமயம்; நல்ல இடம். பல்லக்கின் கிட்டப் போனால் மழைக்கால இருட்டில் திருட வருகிறோம் என்றெண்ணி நம்மை அடித்துப் போட்டாலும் போடுவார்கள்.''

''ராணியை நான் பார்த்துவிட்டால், அப்புறம் காரியம் எளிதாகிவிடும்...''

''அது எப்படி?''

''என் அண்ணியின் பெயரைச் சொல்வேன். அல்லது மந்திரவாதி ரவிதாஸன் அனுப்பினான் என்பேன்.''

''நல்ல யோசனைதான்! ஆனால் ராணியின் அருகில் நெருங்க முடிந்தால் அல்லவோ?...அதோ பார், பூங்குழலி!''

மீண்டும் ஒரு மின்னல் மின்னியது. அதன் வெளிச்சத்தில் இரண்டு பேர் பல்லக்கைத் தூக்குவது தெரிந்தது. ஆகா! கிளம்பி விட்டார்களா? இல்லை, இல்லை! மண்டபத்தை நோக்கியல்லவா பல்லக்கு வருவது போலக் காண்கிறது?

ஆம்; சிறிது நேரத்தில் பல்லக்கு மண்டபத்தின் முகப்புக்கு வந்து சேர்ந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதை இறக்கி வைத்தார்கள்.

''பழுவூர் இளையராணி நம்மைத் தேடிக் கொண்டல்லவா வருகிறாள்?'' என்றாள் பூங்குழலி.

அமுதன் அவளுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு மண்டபத்தின் உட்புறத்தை நோக்கி நகரமுயன்றான். ஆனால் பூங்குழலி அவ்விதம் நகர மறுத்தாள்.

இதற்குள், ''யார் அங்கே?'' என்று ஓர் அதட்டும் குரல் கேட்டது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்களில் ஒருவனின் குரல் என்பதைத் தெரிந்து கொண்டு, ''பயப்படாதே, அண்ணே! உங்களைப் போல் நாங்களும் வழிப்போக்கர்கள் தான். மழைக்காக மண்டபத்தில் வந்து ஒதுங்கியிருக்கிறோம்!'' என்று சொன்னாள் பூங்குழலி.

''சரி, சரி! பல்லக்கின் அருகில் வர வேண்டாம்!'' என்றது அதே குரல்.

''நாங்கள் ஏன் பல்லக்கின் அருகில் நெருங்கப் போகிறோம்? பல்லக்கில் ஏறுவதற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டாமா?'' என்றாள் பூங்குழலி.

சேந்தன் அமுதன், ''வள்ளுவர்பெருமான்கூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். முற்பிறப்பில் செய்த வினைப் பயனைப் பற்றிக் கூறும் போது'' என்று தொடங்கினான்.

''போதும், போதும்! வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கள்! நீங்கள் எத்தனை பேர் ?''

''நாங்கள் இரண்டு பேர்தான். இன்னும் இரண்டு நூறு பேர் வந்தாலும் இந்த மண்டபத்தில் மழைக்கு ஒதுங்கலாம்!....'' என்றான் அமுதன்.

தான் உண்மை என்று நம்பியதையே அமுதன் சொன்னான். அதே மண்டபத்தின் உட்புறத்தில் தூணின் மறைவில் மூன்றாவது மனிதன் ஒருவன் நின்றது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பல்லக்குச் சுமந்தவன், ''நான் அப்போதே சொன்னேன். மழை வந்ததும் மண்டபத்தில் போய் ஒதுங்கலாம் என்றேன்; கேட்கவில்லை. அதனால் இந்தச் சங்கடம் நேர்ந்தது !'' என்று தன் தோழனிடம் சொன்னான்.

''இப்படி ஆகும் என்று யார் அப்பா கண்டது? மழை வலுப்பதற்குள் கோட்டைக்குள் போய்விடலாம் என்று எண்ணினோம். இந்த மட்டும் பல்லக்கின் மேல் மரம் விழாமல் போச்சே !'' என்றான் அவன் தோழன்.

இச்சமயம் இன்னொரு பிரகாசமான மின்னல் மின்னியது.

சேந்தன் அமுதன் — பூங்குழலி இவர்களுடைய கண்களும் கவனமும் பல்லக்கின் பேரிலேயே இருந்தன.

ஆகையால் அந்த மின்னல் வெளிச்சத்தில், பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு ஒரு பெண்மணி தாங்கள் நின்ற திசையை உற்று நோக்கிக் கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தார்கள். அப்படி நோக்கிய பெண்மணியின் முகம் அவர்களைப் பார்த்து இன்னார் என்று தெரிந்து கொண்டு புன்னகை புரிந்ததையும் கவனித்தார்கள்.

மறு விநாடி மண்டபத்திலும் வெளியிலும் இருள் சூழ்ந்தது.

மிக மெல்லிய குரலில் பூங்குழலி, ''அமுதா! பார்த்தாயா?'' என்றாள்.

''ஆம். பார்த்தேன்.''

''பல்லக்கில் இருந்தது யார்?''

''பழுவூர் இளையராணிதானே?''

''உனக்கு என்ன தோன்றியது?''

''பழுவூர் ராணியைப் போலேதான் இருந்தது. ஆனால் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது.''

''சந்தேகமில்லை; நிச்சயந்தான்.''

''எது நிச்சயம்?''

''பழுவூர் ராணி அல்ல; பித்துப் பிடித்த என் அத்தை ராணிதான் பல்லக்கில் இருக்கிறாள்!''

''உஷ்! இரைந்து பேசாதே!''

''இரைந்து பேசாவிட்டால் காரியம் நடப்பது எப்படி?''

''என்ன காரியம்?''

''எதற்காக இத்தனை தூரம் வந்தோமோ அந்தக் காரியம்தான். அத்தையைக் கண்டுபிடித்து விட்டோம். அவளை விடுவித்து அழைத்துப் போக வேண்டாமா?''

''இப்போது அது முடியாத காரியம், பூங்குழலி! பல்லக்கு எங்கே போய்ச் சேருகிறது என்று பார்த்துக் கொள்வோம். பிறகு யோசித்து விடுதலை செய்வதற்கு வழிகள் தேடலாம்.''

''தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க வேண்டும் என்கிறாயே? அதெல்லாம் முடியாது. இப்போதே அத்தையை விடுதலை செய்தாக வேண்டும். உனக்குப் பயமாக இருந்தால் நீ சும்மா இரு!''

''விடுதலையாவதற்கு உன் அத்தை சம்மதிக்க வேண்டாமா? பல்லக்கில் ஏறி ஜாம் ஜாம் என்று போய்க் கொண்டிருக்கிறாள், எங்கே போகிறாள், எதற்காக, யார் அவளைப் பிடித்து வரச் செய்தது என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?''

''பாதாளச் சிறைக்குக் கொண்டு போகிறார்களோ, என்னமோ? அப்புறம் நம்மால் என்ன செய்ய முடியும்?''

''ஏன் முடியாது? பாதாளச் சிறையில் நானே இருந்து வெளி வந்தவன் தான். அரண்மனைகளில் எனக்கும் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. உன் அத்தையை எப்படியாவது நான் விடுதலை செய்கிறேன். நீ சும்மா இரு !''

பூங்குழலியும் அச்சமயம் பொறுமையுடன் சும்மா இருக்கத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்போது அவர்கள் சிறிதும் எதிர்பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது.

மூடு பல்லக்கின் விலகிய திரை இன்னும் நன்றாய் விலகுவது போலிருந்தது. அதன் உள்ளிருந்து ஓர் உருவம் வெளியே வந்தது. சத்தம் சிறிதுமின்றிப் பூனை நடப்பதுபோல் நடந்தது. அடுத்த விநாடி அவர்கள் அருகில் வந்து விட்டது.

இவ்வளவும் நல்ல இருட்டில் நடந்தபடியால், மண்டபத்தின் அடிப்படிகளில் நின்ற காவலர்கள் கண்ணில் படவில்லை.

பல்லக்கிலிருந்து வெளி வந்தவள் ஊமை ராணிதான் என்பதைப் பூங்குழலி அந்த இருளிலும் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டாள்.

ஊமை ராணி அந்த இரண்டு பேரின் கைகளையும் பிடித்து இழுத்துக் கொண்டு அம் மண்டபத்தின் பின் பகுதிக்கு விரைந்து சென்றாள்.

பூங்குழலியைத் தழுவிக் கொண்டு உச்சி முகர்ந்து, அவளைப் பார்த்ததில் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

பின்னர் அத்தைக்கும் மருமகளுக்கும் சமிக்ஞை பாஷையில் சிறிது நேரம் சம்பாஷணை நடந்தது. அந்தக் காரிருளில் ஒருவர் கருத்தை ஒருவர் எவ்வாறுதான் தெரிந்து கொண்டார்களோ?

பூங்குழலி சேந்தன் அமுதனிடம், "அத்தை என்னைப் பல்லக்கில் ஏறிக் கொண்டு போகச் சொல்கிறாள். அவளை உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகச் சொல்லுகிறாள்!" என்றாள்.

"உன் சம்மதம் என்ன பூங்குழலி?" என்று அமுதன் கேட்டான்.

"அத்தை சொல்லுகிறபடி செய்யப் போகிறேன். அவளைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னவர்கள் இன்னார் என்று தெரிந்து கொள்வதற்குச் சரியான உபாயம் அல்லவா?"

"யோசித்துச் சொல்லு, பூங்குழலி! உபாயம் சரிதான்! அதில் என்ன அபாயம் இருக்குமோ!"

"அமுதா! நீ கவலைப்படாதே! அத்தை சொன்னபடி செய்வதினால் எனக்கு ஓர் அபாயம் ஏற்படாது. அப்படி ஏற்படுவதாயிருந்தால், என் இடுப்பில் இந்தக் கத்தி இருக்கவே இருக்கிறது!" என்று சொன்னாள் பூங்குழலி.

அத்தையை மறுபடியும் ஒருமுறை தழுவிக் கொண்டு விட்டுப் பூங்குழலி அவளைப் போலவே சத்தம் செய்யாமல் நடந்து சென்று பல்லக்கில் புகுந்து திரையையும் விட்டுக் கொண்டாள்.

அத்தியாயம் இருபத்திரண்டு

அநிருத்தரின் ஏமாற்றம்!

முதல் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் சில தினங்களாகத் தலைநகரிலேயே தங்கியிருந்தார். அவரைக் காண்பதற்கு அரசாங்க அதிகாரிகள், சிற்றரசர்கள், சேனைத் தலைவர்கள், அயல் நாட்டுத் தூதுவர்கள், வர்த்தகக் குழுக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகிகள், தென்மொழி, வடமொழி வித்வான்கள் முதலியோர் வந்த வண்ணமிருந்தார்கள். ஆதலின் அவருடைய மாளிகையின் வாசலில் ஜே ஜே என்று எப்போதும் ஜனக் கூட்டம்.

அநிருத்தர் தமக்கென்று தனியாகக் காவல் படை வைத்துக்கொள்ளவில்லை. பரிவாரங்களும் மிகக் குறைவாகவே வைத்துக் கொண்டிருந்தார். ஆகையால் பழுவேட்டரையர்களோடு அவருக்குத் தகராறு எழுவதற்குக் காரணம் எதுவும் ஏற்படாமல் இருந்தது.

ஆனபோதிலும், சின்னப் பழுவேட்டரையர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். முதன் மந்திரி தஞ்சை நகரில் தங்க ஆரம்பித்ததிலிருந்து கட்டுக்காவல் குறைந்து போயிருந்தது. முதன்மந்திரியைக் காண வேண்டுமென்ற வியாஜத்தில் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைந்து கொண்டேயிருந்தார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையை அடுத்து முதன் மந்திரியின் மாளிகை இருந்தபடியால், அரண்மனை வட்டாரத்திலும் ஜனக் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. முதன் மந்திரியின் பெயரைச் சொல்லிக் கொண்டும் அவருடைய இலச்சினையைக் காட்டிக்கொண்டும் அநேகம் பேர் அங்கே வந்து அவரைப் பார்த்த வண்ணம் இருந்தார்கள்.

இதையெல்லாம் ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும் என்று சின்னப் பழுவேட்டரையர் விரும்பினார். ஆனால் நேரில் முதன் மந்திரியிடம் போய்ச் சண்டை பிடிப்பதற்கு வேண்டிய துணிச்சல் அவருக்கு இல்லை. பெரிய பழுவேட்டரையரும் இருந்தால், இருவருமாக யோசித்து ஏதேனும் செய்யலாம். இந்தச் சமயம் பார்த்துப் பெரிய பழுவேட்

டரையர் கடம்பூருக்குப் போய்விட்ட தனால், சின்னவரான காலாந்தக கண்ட ருக்கு ஒரு கை ஒடிந்தது போலிருந்தது.

கோட்டைக்குள் ஜனக் கூட்டத்தைச் சேர்த்துக் கட்டுக் காவலுக்கு ஊறு விளை விப்பது போதாது என்று, முதன் மந்திரி அநிருத்தர் அடிக்கடி ஏதாவது சின்னப் பழுவேட்டரையரிடம் உதவி கேட்கும் பாவனையில் அவருக்குக் கட்டளை அனுப் பிக்கொண்டிருந்தார்.

சில நாளைக்கு முன்பு கோடிக்கரைக்கு அனுப்புவதற்குச் சில வீரர்கள் வேண் டும் என்று கேட்டார். காலாந்தக கண் டரும் ஆட்களைக் கொடுத்து உதவினார். பிறகு நேற்றைக்கு, உயர் குலத்துப் பெண்மணி ஒருவரைத் திருவையாற்றி லிருந்து அழைத்து வரவேண்டுமென்றும் அதற்குப் பழுவூர் அரண்மனையின் மூடு பல்லக்கு ஒன்றும், சிவிகை தூக்கிகளும் வேண்டும் என்றும் சொல்லி அனுப்பி னார். சின்னப் பழுவேட்டரையர் இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றினார். ஆனால் மனத்துக்குள், "இந்தப் பிரம்ம ராயன் ஏதோ சூழ்ச்சியில் ஈடுபட்டிருக் கிறான். அவ்விதம் மூடு பல்லக்கில் வைத்து வரவழைக்கக்கூடிய உயர் குடும் பத்துப் பெண்மணி யார்? எதற்காக இங்கே வருகிறாள்? இதை எப்படியும் கண்டு பிடிக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில் தமையனார் இங்கே இல் லாமற்போய்விட்டாரே?" என்று அவர் மனசு சஞ்சலப்பட்டது.

முதன் மந்திரி அநிருத்தரின் மாளி கைக்கு மூடு பல்லக்கில் வந்தது யார் என்று தெரிந்து கொள்ள இன்னொரு மனிதனும் ஆவல் கொண்டிருந்தான். அவன் வேறு யாரும் இல்லை; அநிருத்தப் பிரம்மராயரின் அருமைச் சீடனான ஆழ் வார்க்கடியான்தான்.

பெருமழை பெய்த அன்றைக்கு மறு நாள் காலையில் அநிருத்தப் பிரம்மராயர் ஸ்நான பானம், ஜபதபம், பூஜை புனஸ் காரம் ஆகியவற்றை முடித்துக்கொண்டு மாளிகையின் முன் முகப்புக்கு வந்து சேர்ந்தார். தம்மைக் காண்பதற்கு யாரார் வந்து காத்திருக்கிறார்கள் என்று சேவகனைப் பார்த்துக் கொண்டு வரச் செய்தார். காத்திருந்தவர்களில் ஆழ் வார்க்கடியான் ஒருவன் என்று தெரிந் ததும், அவனை உடனே கூட்டிவரும்படி ஆக்ஞாபித்தார்.

ஆழ்வார்க்கடியான் தன் குருநாதரின் முன்னால் விரைந்து வந்து பயபக்தி வினயத்துடன் நின்றான்.

"திருமலை! போன காரியம் என்ன ஆயிற்று?" என்று அநிருத்தர் கேட்டார்.

"குருவே! மன்னிக்க வேண்டும். தோல்வி யடைந்து திரும்பினேன்."

"ஒருவாறு நான் எதிர்பார்த்தது தான். ஆதித்த கரிகாலரைச் சந்திக் கவே முடியவில்லையா?"

"சந்தித்தேன், ஐயா! தாங்கள் சொல்லச் சொன்ன செய்திகளையும் சொன்னேன். ஒன்றும் பயனில்லை. இள வரசரைக் கடம்பூர் அரண்மனைக்குப் போகாமல் தடுக்க முடியவில்லை..."

"இளவரசர் இப்போது கடம்பூரில் தான் இருக்கிறாரா?"

"ஆம், குருவே! சம்புவரையரின் மாளிகையில் அவர் பிரவேசித்ததைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். இள வரசருக்குச் சம்புவரையர் இராஜோப சார வரவேற்பு அளித்தார். சுற்றுப் புறத்து மக்கள் காட்டிய உற்சாகத் தையோ வர்ணிக்க முடியாது."

"அதெல்லாம் எதிர்பார்க்கக்கூடியது தான். கடம்பூர் மாளிகைக்கு இன்னும் யார் யார் வந்திருக்கிறார்கள்?"

"இளவரசருடன் பார்த்திபேந்திரனும் வந்தியத் தேவனும் வந்திருக்கிறார்கள். இங்கிருந்து பெரிய பழுவேட்டரையர்



மண்ணின் மாண்பு

வராக வேட்டை

காஞ்சிபுரத்தில் நந்திசோழ ராஜா அரசாண்டு வந்தார். அந்த மன்னர் வரதராஜ சுவாமிகளிடம் பக்தி பூண்டவர். அவர் பெருமாளுக்கு அர்ச்சனைக்கு ஒரு நந்தவனத்தை உருவாக்கினார். அங்கே பூச்செடி வைக்கும்போது இரவில் காட்டுப் பன்றிகள் வந்து அழித்து விட்டுச் சென்றன. சேவகர்கள் என்ன முயன்றும் அவற்றைத் தடுக்க முடியவில்லை.

கடைசியில் நந்தி சோழ அரசரே ஈட்டியுடன் வேட்டையாட வந்தார். அவர் வந்த பொழுது ஒரு பெரிய பன்றி பூச்செடியைக் கிளறிக் கொத்திக் கொண்டிருந்தது. அரசர் அடாத சினத்துடன் அதன் மீது பாய்ந்தார். பன்றி ஒரு பூங்கொத்துடன் தரையைக் கீறிக் கொண்டே வேகமாக ஓடியது. நந்தி சோழ மன்னரும் விடாமல் பன்றியைத் தொடர்ந் தார். சிங்கபுரம் மலையின் மேல் ஏறியது காட்டுப் பன்றி. பூங்கொத்துடன் வந்த காட்டுப் பன்றி அம் மலையில் விஸ்வரூபமாய்ப் பள்ளிகொண்டதைக் கண்டார் நந்தி சோழமன்னர்.

இப்படிப்பட்ட திருக்கோலம் காஞ்சிபுரம் வரத ராஜர்தான் கொண்டாரென்று மன்னர் நந்திசோழர் உணர்ந்தார். காட்டுப் பன்றி கொம்பாலே கீறின வழியே தண்ணீர் பெருகி வந்து வராக நதியாயிற்று.

ஆதாரம்: கர்நாடக ராஜாக்கள் சரித்திரம்

...பி. எஸ். மணி

இளைய ராணியுடன் வந்திருக்கிறார். இன்னும் நடுநாட்டையும் திருமுனைப் பாடி நாட்டையும் சேர்ந்த சிற்றரசர்களையும் அழைத்திருப்பதாகக் கேள்வி.''

''திருக்கோவலூர் மலையமான்?...''

''மணிமுத்தா நதி வரை இளவரசருடன் வந்து திரும்பிப் போய் விட்டார்!''

''அந்த வீரக் கிழவன் சும்மா இருக்க மாட்டான். இதற்குள் சைன்யம் திரட்டத் தொடங்கி யிருப்பான். தெற்கே யிருந்து கொடும்பாளூர்ப் பெரிய வேளான் பெரிய சைன்யத்துடன் வருவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த ராஜ்யத்துக்குக் கேடு ஒன்றும் வராமல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். திருமலை! நீ வரும் வழியில் சோழ நாட்டு மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள்? ஏதேனும் காதில்விழுந்ததா?''

''சின்ன இளவரசருக்கு நேர்ந்த கடல் விபத்தைப் பற்றியே அதிகம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாக இருக்கிறார்கள். சிலர் தங்களையும் சேர்த்துக் குறை கூறுகிறார்கள்...''

''ஆம், ஆம்; குறை கூறுவதற்கு அவர்களுக்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. திருமலை! சீக்கிரத்தில் இந்த முதன் மந்திரி உத்தியோகத்தை விட்டு விட எண்ணி யிருக்கிறேன்...''

''குருவே! தாங்கள் அப்படிச் செய்தால் எனக்கும் விடுதலை கிடைக்கும். ஆழ்வார்களின் பாசுரங்களை நாடெங்கும் பாடி யாத்திரை செய்து ஆனந்தமாய்க் காலம் கழிப்பேன். எப்போது உத்தியோகத்தை விடப் போகிறீர்கள்?''

''இராஜ்யத்துக்கு விபத்து நேராமல் பாதுகாக்கக் கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்கப் போகிறேன். அது முடிந்ததும் விட்டுவிடப் போகிறேன்.''

''அது என்ன முயற்சி குருவே?''

''அந்த முயற்சியில் மிக முக்கியமான முதற்படி ஏறியாகி விட்டது. திருமலை! உன்னால் முடியாது என்று நீ கைவிட்டு விட்ட ஒரு காரியத்தில் நான் வெற்றி பெற்று விட்டேன்....''

''அதில் வியப்பு ஒன்றுமில்லை, ஐயா! அது என்ன காரியமோ?''

''ஈழத் தீவில் பித்துப் பிடித்தவள் போலத் திரிந்து கொண்டிருக்கும் ஓர் ஊமை ஸ்திரீயைத் தேடிப் பிடித்து அழைத்து வரச் சொன்னேன் அல்லவா? உன்னால் அந்தக் காரியம் முடியவில்லை என்று திரும்பி வந்து கூறினாய் அல்லவா?'' என்று அநிருத்தர் கேட்டார்.

''ஆம், ஐயா! அந்த ஊமை ஸ்திரீ...''

''நேற்றிரவு நம் அரண்மனைக்கு அவளைக் கொண்டு வந்தாகி விட்டது.''

''ஆகா! அதிசயம், அதிசயம்! இதை எப்படிச் சாதித்தீர்கள்?''

''சின்ன இளவரசர் தப்பிப் பிழைத்தாரா இல்லையா என்று தெரிந்து கொள்ள அந்த ஊமைப் பெண் கோடிக்கரைக்கு வருவாள் என்று எதிர்பார்த்தேன். வந்தால் அவளைப் பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பியிருந்தேன். நல்ல வேளையாக, அவள் அதிகத் தொந்தரவு கொடுக்காமலே வந்துவிட்டாள். இந்த வேடிக்கையைக் கேள் திருமலை! திருவையாற்றிலிருந்து அவளை மூடு பல்லக்கில் வைத்து அழைத்து வரச் செய்தேன். இதற்காகப் பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கையே அனுப்பி வைத்தேன்..''

''ஐயா! நேற்று மாலை பெரும் புயலும் மழையும் அடித்ததே!''

''ஆம்; அதனால் வழியில் தடங்கல் ஏற்பட்டது. எனக்குக் கூடக் கவலையாகத்தானிருந்தது. நேற்றிரவு நள்ளிரவு நேரத்துக்குப் பல்லக்கு வந்த பிறகுதான் நிம்மதியாயிற்று.''

''ஓகோ! நள்ளிரவு ஆகிவிட்டதா? தாங்களும் அத்தனை நேரம் விழித்திருந்து வரவேற்பு அளித்தீர்களா?''

''விழித்திருந்தேன். ஆனால் வரவேற்புக்கு நான் போகவில்லை. வீட்டுப் பெண்களை விட்டே வரவேற்கச் செய்தேன். வெறி பிடித்தவளாயிற்றே என்ன தகராறு செய்கிறாளோ என்று கவலையாகத்தானிருந்தது. நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நன்றாகச் சாப்பிட்டு விட்டு உடனே உறங்கிவிட்டாள். திருமலை! உண்மையைச் சொல்லப் போனால் இன்னமும் அவளைப் பார்க்கும் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் பயமாய்த்தான் இருக்கிறது. நீ இச்சமயம் வந்தது நல்லதாய்ப்போயிற்று.''

''குருவே! நானும் அப்பெண்மணியைப் பார்க்க ஆவலாயிருக்கிறேன்...''

''அப்படியானால், வா! அந்தப்புரத்துக்குப் போகலாம். உன்னை ஏற்கனவே அவளுக்குத் தெரியுமல்லவா? நீ சின்ன இளவரசருக்கு வேண்டியவன் என்பதும் தெரியும். ஆகையால் உன்னிடம் சிறிது சுமுகமாக இருக்கக் கூடும்.''

குருவும் சீடனும் மாளிகையின் பின் கட்டுக்குச் சென்றார்கள். தாதிமார்களிடம் நேற்றிரவு வந்த பெண்மணியை அழைத்து வரும்படி அநிருத்தப் பிரம்மராயர் கட்டளை யிட்டார்.

தாதிமார்கள் அந்த ஸ்திரீயை அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அநிருத்தர் அவளைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றார்.

ஆழ்வார்க்கடியானின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. (தொடரும்)

கல்கி

1970 தீபாவளி மலரை இலவசமாகப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும்?





இலவசம் உண்மைதான்!

☐ தபால் செலவு உள்பட ரூபாய் ஆறு பெறுமானமுள்ள கல்கி தீபாவளி மலர் உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறது.

☐ ரூபாய் கணக்கில் அதன் மதிப்பு ஒருபுறமிருக்கட்டும். இலக்கிய நோக்கில் — கலைக் கண்ணோட்டத்தில் அதன் மதிப்பை அளவிடுவதென்ன சாத்தியமா? எத்தனை எத்தனை மூவர்ணப் படங்கள்! எத்தனை இரு வர்ணப் படங்கள்! எவ்வளவு கதைகள், கட்டுரைகள், நகைச்சுவை அம்சங்கள், புகைப்படங்கள்! அது சரி, இதை விவரிக்கப்போவானேன்? கல்கி தீபாவளி மலரின் தரம் தமிழர்கள் அறியாத ஒன்று என்ன?

☐ இந்த விலைமதிப்பற்ற மலரை நீங்கள் இலவசமாகப் பெற என்ன செய்ய வேண்டும்?

☐ கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தாவாக ரூபாய் நாற்பது மணிஆர்டர் அனுப்ப வேண்டும். நேரடியாக மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை — 31 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

☐ நினைவிருக்கட்டும்! நீங்கள் இத்தொகைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு 104 கல்கி இதழ்களைப் பெறுவதுடன் தபால் செலவு உள்பட ரூ. 6- விலையுள்ள 1970ம் ஆண்டு கல்கி தீபாவளி மலரை இலவசமாகப் பெறுகிறீர்கள்!

☐ கல்கிக்கு ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்களும் மேலும் இரண்டாண்டுகளுக்கு ரூ. 40- சந்தா அனுப்பி இந்த அன்பளிப்புத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கை நேயர்கள் (இலங்கை நாணயப்படி) ரூ. 42-ம் மற்ற வெளிநாட்டு நேயர்கள் ரூ. 80-ம் அனுப்ப வேண்டும்.

☐ உங்கள் மணிஆர்டர் அக்டோபர் 15ந் தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு அப்பால் இந்தச் சலுகையை நீடிப்பதற்கு இயலாது.

☐ வழக்கம் போல் ஏஜண்டுகளிடம் கல்கி தீபாவளி மலரை வாங்க விரும்பும் உள்நாட்டு நேயர்கள் ரூ. 5-ம் இலங்கை நேயர்கள் அந்நாட்டுக்குரிய விலையையும் ஏஜண்டுகளிடம் செலுத்தி முன்னதாகவே பதிவு செய்து கொள்ளலாம்.

ராமாயணம்

ராஜாஜி

"இதுவென்ன தகாத பேச்சுப் பேசு கிறாய்? நம்முடைய குடும்பங்களைக் கிஷ்கிந்தையில் விட்டு விட்டுக் குகைக் குள் உண்டு குடித்துத் தூங்கி உயிருடன் வாழ்வதில் என்ன சந்தோஷம்? சுக்ரீவ னுக்கு அங்கதன் பேரில் துவேஷமில்லை. சுக்ரீவன் மிக நல்லவன். நாம் அவனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. உண்மையில் சுக்ரீவனுக்கு நம் பேரில் கோபம் உண்டாகி நம்மைத் தண்டிக்க எண்ணம் கொண்டானானால் இந்தக் குகையில் நாம் எப்படி க்ஷேமமாக இருக்க முடியும்? லக்ஷ்மணனுடைய கோபத்தை அந்தக் குகை தாங்குமா? அதைப் பொடிப் பொடியாக்கி நிர் மூலம் செய்து விடுவான். ஆனபடியால் இந்த யோசனையில் நான் ஒன்றும் நன்மை காணவில்லை. நாம் திரும்பிப் போய் சுக்ரீவனிடம் உள்ளதைச் சொல்லி அவன் தயவைக் கேட்டு க்ஷேமம் அடையலாம்" என்றான் ஹனுமான்.

"ஹனுமான் சொல்லுவது சரி யல்ல" என்றான் அங்கதன். "சுக்ரீவ னுக்கு என் பேரில் கொஞ்சமும் இரக்கம் கிடையாது. என்னை அவன் கொல்லு வது நிச்சயம். அவன் மகா குரூர சுபாவம் கொண்டவன். வாலியை எப் படிக் கொன்றான்? யோசித்துப் பாருங்கள். நான் உயிருடன் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. எப்படியா வது ஏதோ காரணம் வைத்து என்னை ஒழிப்பதே அவன் எண்ணம். அவனும் அவனுடைய மக்கள்மாரும் வானர ராஜ்யத்தை அடைந்து இடையூறின்றி வைத்துக் கொண்டு ஆளுவதற்கு நான் ஒரு தடை என்றே அவன் எண்ணு வான். செய்த பிரதிக்ஞையை மறப் பதே அவன் சுபாவம். சீதையைத் தேடித் தருவேன் என்று ராமனுக்குச் சொல்லிவிட்டு அந்த வாக்குறுதியை மறந்தவன் அல்லவா? பிறகு லக்ஷ்மண னுடைய வில்லுக்குப் பயந்தல்லவா எங் களை அனுப்பினான்? என் தாயோ தன் பர்த்தாவை இழந்து துக்கப்பட்டும் கஷ்டப்பட்டும் சுக்ரீவனைக் கண்டு பயந்து அவனுடைய வசத்தில் அடங்கிப் போயிருக்கிறாள். என் மேல் தன் பிராணனை வைத்திருக்கிறாள். நான் இறந்தேன் என்று அவள் அறிந்தால் உயிரை நீப்பாள். எனக்காகத்தான் அவள் உயிரை வைத்திருக்கிறாள். ஐயோ, நான் என்ன செய்வேன்?"

"மறுபடியும், கிஷ்கிந்தை திரும்பினா லும் என் மரணம் நிச்சயம். இங்கே உயிர் நீப்பதே மேல். பிராயோபவேசம் செய்து உயிர் நீப்பதே நலம்" என்று தீர்மானமாகச் சொல்லித் தரையில் முறைப்படி தருப்பைப் புல் பரப்பி, தெய்வங்களையும் பெரியோர்களையும் வணங்கி விட்டு, உயிர் நீக்கும் சங்கற்பம் செய்து, கிழக்கு முகம் பார்த்து உட் கார்ந்தான்.

யுவராஜனான அங்கதன் இவ்வாறு பிராயோபவேச விரதம் பூண்டதும் மற்ற வானரர்கள் எல்லாம், "ஓ!" என்று கதறி அழுது அவர்களும் அப் படியே உயிர் நீத்துவிட நிச்சயித்து உப வாச சங்கற்பம் செய்து கிழக்கு நோக்கி உட்கார்ந்தார்கள்.

* * *

'இப்படி நம் கதி ஆயிற்றே' என்று உட்கார்ந்த வானரர் கூட்டத்தைக் கழுகரசனான சம்பாதி, பக்கத்தில், ஒரு மலை மேலிருந்து பார்த்துக் கொண்டிருந் தான். இறகுகள் இழந்து பறக்க முடி யாமல் வெகு காலம் பட்டினியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சம்பாதி, 'இத்தனை வானரர்கள் ஒரே இடத்தில்




இறந்து போகப் போகின்றனர். எனக்கு உணவு கலபமாகக் கிடைத்துவிட்டது'' என்று எண்ணி சந்தோஷமடைந்தான்.

அதே சமயம் வானரர்கள் மரணத்தை எதிர்பார்த்துத் தங்கள் துக்கத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ''கைகேயியினுல் அல்லவோ தசரதன் இறந்தான். தசரதன் இறந்து விட்டதால் அல்லவோ ராமன் காட்டில் இருக்க வேண்டியதாயிற்று. ராமன் காட்டில் இருந்ததால் அன்றே சீதையை ராவணன் தூக்கிப் போனுன். வீரனுன ஜடாயு சீதைக்காக உயிர் நீத்தான். இன்னும் கொஞ்ச நேரம் ஜடாயு பறவைக்குச் சக்தியிருந்து யுத்தத்தை நடத்தியிருந்தால் ராம லக்ஷ்மணர்கள் வந்து விட்டிருப்பார்கள். சீதையை மீட்டிருப்பார்கள். ஆனுல், விதி இப்படியெல்லாம் செய்து விட்டது. முடிவில் நாம் மரணமடைய வேண்டியதாயிற்று.'' இப்படித் தங்களுடைய துக்கத்தை ஒருவரோடொருவர் பேசிக் கொண்டும் பிரலாபித்துக் கொண்டும் இருந்தார்கள்.

இதைக் கேட்ட சம்பாதி, ''என்ன! என் அருமைத் தம்பி ஜடாயு இறந்தானு?'' என்று விஷயத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

சம்பாதி மிகக் கிழப் பறவை. கருடனும் அருணனும் அண்ணன்



தம்பிகள். அருணனுக்கு இரண்டு குமாரர்கள். ஜடாயுவும் சம்பாதியும். ஜடாயுவும் சம்பாதியும் சிறு வயதில் தாங்கள் பெற்ற அபார சக்தியை அநுபவித்துக் கொண்டு ஒரு நாள் ஆகாயத்தில் போட்டி போட்டுக் கொண்டு உயரக் கிளம்பினார்கள். சூரியனை நெருங்க நெருங்க, வர வர வெப்பம் அதிகரித்து ஜடாயுவைக் கொளுத்தி விடும் போலிருந்தது. சம்பாதி தன் சிறகுகளை விரித்து ஜடாயுவைச் சூரியனுடைய நெருப்பின் வேகத்திலிருந்து காப்பாற்றினான். இதனால் ஜடாயு பிழைத்தான். ஆனால், சம்பாதியின் சிறகு எரிந்து போயிற்று. சம்பாதி பறக்க முடியாமல் கீழே மலை மேல் விழுந்தான். அது முதற் கொண்டு பறக்க முடியாமல் ஒரே இடத்தில் பசியினால் வாட்டப்பட்டான். ஆயினும் உயிர் இழக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான்.

''அன்புக்குரிய என் தம்பி ஜடாயுவைப் பற்றித் துக்க சமாசாரம் யார் இங்கே பேசுவது? வானரர்களே! ஜடாயு இறந்தானா? சக்கரவர்த்தி தசரதனுடைய குமாரன் ராமன் ஏன் காட்டுக்குப் போனான்? எப்படி மனைவியை இழந்தான்? ஜடாயு ராவணனால் கொல்லப்பட்டானா? எனக்கு விவரம் சொல்லுங்கள்'' என்று வருந்திக் கூக்குரலிட்டான்.

வானரர்கள் பிராணனை நீப்பதற்கு உபவாசம் இருக்கவும், அந்த வானரப் பிணங்களைக் கஷ்டமில்லாமல் உணவாக அடைவேன் என்று சிறகு இழந்த கிழக் கழுகு ஆசைப்படவும் ஆரம்பித்த இந்த நிகழ்ச்சியானது முடிவில் வேறு விதமாக வடிவம் எடுத்தது.

வானரர்கள் எழுந்து சம்பாதியை அணுகி மெதுவாக அந்தக் கிழப் பறவையைக் கீழே நடத்தி வந்தார்கள். பிறகு விஷயங்களை ஒருவருக்கொருவர் சொல்லி அறிவித்தார்கள்.

சம்பாதி தன் கதையைச் சொன்னான். அங்கதன் கிஷ்கிந்தை வரலாற்றைப் பூர்ணமாகச் சொல்லி எப்படி ராமனுக்கு உதவலாம் என்று கேட்டான். சம்பாதிக்குத் தன் கண்களின் தூரதிருஷ்டிச் சக்தி குறையவில்லை. இலங்கையில் சீதை சிறையில் இருப்பதைத் தான் அங்கிருந்து பார்க்க முடியும் என்று கூறித் தான் காணும் காட்சியை யெல்லாம் விவரமாகச் சொன்னான்.

லங்கையைப் பற்றியும் ராவணனுடைய ஐசுவரியத்தைப் பற்றியும் ஜானகி ராக்ஷசிகளின் காவலில் இருப்பதைப் பற்றியும் எல்லாம் கண்டு சொன்னான்.

வானரர்களுக்கு உற்சாகம் உண்டாகி, ''சீதையைப் பற்றி அறிந்துவிட்டோம். இனி நமக்குப் பிராண பயமில்லை. ராம காரியம் வெற்றி பெறும்'' என்று மகிழ்ச்சிப் பரவசமாகத் துள்ளிக் குதித்தார்கள்.

சம்பாதிக்கு ஏற்பட்ட கஷ்டமும் நீங்கிற்று. ''ராம காரியத்தில் நீ உதவுவாய். அப்படி உதவியபோது உன் சிறகுகள் மறுபடியும் முளைக்கும்'' என்று தான் பெற்ற வரம் அப்போது உண்மையாயிற்று. பேச்சு நடக்கும் போதே இளஞ் சிறகுகள் உடலில் முளைக்க ஆரம்பித்து, சம்பாதி மிக அழகுடன் பிரகாசித்தான்.

சிறகுகளை மறுபடியும் அடைந்த சம்பாதி ஜடாயுவுக்குச் சமுத்திரத்தில் ஜலக்கிரியையும் செய்து திருப்தி அடைந்தான்.

63. வாயு புத்திரன்

சீதை சிறையில் கிடந்த இடமும், அரக்கன் இருந்த தேசமும் சம்பாதி சொல்ல வானரர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆயினும் சுக்ரீவனிடம் போய்ச் சொல்லுவதற்கு இது போதாதல்லவா? தாங்களே பார்த்தறியாமல் பிறர் சொன்னதை எடுத்துக் கொண்டு, தேடும் காரியத்தை நிறுத்திவிடுவது சரியல்ல. நேரில் கண்டு சம்பாதி சொன்னதெல்லாம் உண்மை என்று காண வேண்டும். அதன்பின் தானே ராம காரியத்தைச் செய்து தீர்க்க முடியும்? கடலைத் தாண்டினால் அல்லவோ நேரில் பார்க்க முடியும்? இதற்கென்ன செய்வது என்று தெரியாமல் அங்கதன் திகைத்தான்.

கடலோரம் சென்று வானரர்கள், ''இந்தக் கடலை நாம் எவ்வாறு தாண்டி லங்கைக்குள் பிரவேசித்துச் சீதையைக் கண்டு திரும்புவது?'' என்று மறுபடியும் கவலையிலும் பயத்திலும் மூழ்கினார்கள்.

அங்கதன் சொன்னான்: ''எந்தக் காரியம் எப்படிச் சாதிக்க வேண்டியதானாலும் தைரியத்தை இழக்கலாகாது. தைரியமே முயற்சிக்கு அடிக்கட்டு. அதைரியம் எவ்வித முயற்சிக்கும் சத்துருவாகும்.''

பிறகு தன் படையிலுள்ள வீரர்களையெல்லாம் அவரவர்களுடைய தாவும் சக்தியைப் பற்றி உண்மையைச் சொல்லும்படி வேண்டினான். (தொடரும்)

இவருக்கு இதுவும் தெரியும்



திருமுருக கிருபானந்தவாரியார் தமது ஒன்பதாம் வயதில், சொந்த ஊரான காங்கேய நல்லூரில் முதன் முதலாகச் சொற்பொழிவு ஆற்றினாராம்! இன்று திரு கிருபானந்த வாரியாரின் விரிவுரை சிறப்பு பற்றிப் பரிந்துரைக்க வேண்டிய அவசியம் இல்லைதான். எல்லாருக்கும் தெரிந்த விஷயம் அது. இமயம் முதல் குமரிவரை எத்தனையோ திவ்விய ஸ்தலங்களுக்குச் சென்று வந்துள்ள பரம பக்தர்.

தமது விரிவுரைகள் மூலம் கிடைக்கும் தொகை கொண்டு எத்தனை எத்தனையோ கோயில்களைப் புதுப்பித்திருக்கிறார்; பக்திப் பணிகளுக்கும் அறப் பணிகளுக்கும் உதவியிருக்கிறார் வாரியார். அரிய நூல்கள் பல எழுதி வெளியிட்டிருக்கிறார். அவரது சொற்பொழிவுகளிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்தும் நூல்கள் வெளி வந்துள்ளன.

வாரியார், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக, மாதந்தோறும் வெளிவரும் 'திருப்புகழமிர்தம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருக்கிறார்! ''பத்திரிகைப் பணியைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்'' என அவரிடம் கேட்டேன்.

வீணை வாசிக்கும் வாரியார்

'திருப்புகழுக்குத் தகுந்த உரை யாரும் எழுதாமல் இருந்ததால், அப்பணியினை மேற்கொண்டு, தாது வருடம், வடலூர் சத்திய ஞான சபையில் வைத்து உரை எழுதத் தொடங்கினேன். அதைப் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டேன்!''

''பத்திரிகையில் எழுத உங்களுக்கு அவகாசம் எப்போது கிடைக்கிறது?''

''சொற்பொழிவுகளுக்காக அதிக நாட்கள் வெளியூர் பயணம் போய் விடுகிறேன். இருந்த போதிலும் எழுதுவதை நிறுத்த வழியில்லை. 'பேசுவது உபகாரம், எழுதுவது மகோபகாரம்' என்பது என் கொள்கை. பின்வரும் சந்ததியினருக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்! அதற்காக இரவில் கண் விழித்தேனும் எழுதி முடித்து விடுகிறேன்!''

மயிலை சம்ஸ்கிருதக் கல்லூரியில் ஒரு மாதம் வரை அமுத மழை பொழிந்து வந்த வாரியார் ஒரு நாள், தமக்கு வீணை வாசிக்கவும் தெரியும் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்த ஞாபகத்தில், ''நீங்கள் வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டதைப் பற்றி அறிய விருப்பம்!'' என்றேன்.

''இளமையில் தகப்பனார் மல்லையதாச பாகவதரிடம் இசை பயின்றேன். வீணை கற்றுக் கொள்ள விரும்பினேன். மைசூர் வீணை சேஷண்ணாவிடம் வீணை வாங்கினேன். சென்னையில் மூன்று ஆசிரியர்களிடம் வீணை பயின்ற பிறகு, முடிவில் இசைமேதை தென்மடம் வரதாச்சாரியாரிடம் ஏழு ஆண்டுகள் வீணைப் பயிற்சி பெற்றேன். அவரிடம்தான் ராகம், தானம், பல்லவி, பஞ்சரத்னக் கீர்த்தனைகள் முதலியவற்றை முறையாக அறிந்து கொண்டேன்!''

''வீணைக் கச்சேரி செய்திருக்கிறீர்களா?''

''சென்னையில்தான் சில வீணைக் கச்சேரிகளை நிகழ்த்தியிருக்கிறேன்!....'' என்றார்.

''இப்போதும் வீணை வாசிக்கிறீர்களா?''

''கொண்டு வாங்க!'' எனக் கூறும் முகமாக இரு கைகளையும் வீணை வாசிப்பது போல அபிநயித்து, ''ஊம், பேஷாக!'' என்றார்.

இன்னொரு ரகசியமும் இந்தப் பேட்டியின் போது தெரிய வந்தது.

சொற்பொழிவுகளிலே அறுசுவை பதார்த்தங்களைத் தயாரிக்கும் பக்குவத்தைக் கேட்போர் நாவில் ஜலம் ஊறச் சொல்லுவார் வாரியார். அதை அவர் அநுபவபூர்வமாகத்தான் சொல்லுகிறார்!

''எல்லாம் என் தந்தையிடம் கற்றதுதான்! நான் சின்னப்பிள்ளையாயிருக்கிறபோது கூடப் போவேன். வெளியூர் போனால், அவரே சமையல் செய்வார். கூட இருந்த எனக்கும் சமையல் கலை தெரிந்து கொள்ள முடிந்தது.

''என் சமையலை ஒரு தரம் ருசி பார்த்தவர்கள் ஆயுசுக்கும் மறக்க மாட்டார்கள்!... தண்ணீர் தேவையில்லாமல் குழம்பு செய்வேன்! தக்காளிப் பழச் சாறும் வெங்காயமும், புளியும் போதும்!... மலேயா போனபோது நானே சமையல் செய்து கொண்டேன்!....

''சமீபத்தில் தஞ்சாவூரில் பதினேழு நாட்கள் கந்த புராணச் சொற்பொழிவு... அங்கே ஒரு வீட்டு மாடியில் பிரஷர் குக்கர் வைத்துச் சமையல் செய்து கொண்டிருந்தேன். ஒரு நாள் சாயந்திரம், தஞ்சாவூர் பப்ளிக் பிராசிக்யூட்டர் ராஜ ராஜேசுவரனும், அட்வகேட் சிவசங்கர பட்டும் வந்தார்கள், நான் இருந்த மாடிக்கு. நான் சொந்தச் சமையலில் ஈடுபட்டிருப்பதைக் குறித்து அவர்களுக்குச் சற்று வருத்தம். அதைப் போக்க அவர்களுக்கு 'சாம்பிள்' உப்புமா கொடுத்தேன். உப்புமாவையும், பாகற்காய் சாம்பாரையும் பரிமாறினேன். என்னவோ மாதிரி இருந்தவர்கள் சாப்பிட்டதும் முகம் மலர்ந்துபோனார்கள்!'' என வாரியார் கூறி முடித்தார். —ஏ. சுவாமிநாதன்



இவரால் முடியுமா?

வண்டியோட்டிச் செல்லும் வேளையில் ஒவ்வொரு டிரைவரும் எந்த நிமிஷமும் உஷாராக இருந்து, சரியான முடிவுகளைச் சட்டென எடுப்பது அவசியம்.

ஸதர்ன் ரோட்வேஸின் மற்றவர்களின் தரத்திற்கேற்ப இவர் இருக்கவேண்டுமானால், இவரிடம் மெய்யான தரம் இருந்தாக வேண்டும்; முடிவுகளை உடனுக்குடன் எடுத்தாக வேண்டும்.


அதனால்தான் வேலைக்கு நியமிக்கு முன் ஒவ்வொரு டிரைவரையும்நாங்கள் நன்கு சோதிக்கிறோம். பிறகும் அவ்வப்போது இவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்.

உடலியலையும், உளவியலையும் பொறுத்து நாங்கள் நடத்தும் பூரணப் பரிசோதனைகள், தூரத்தைப்பற்றிய துல்லியமான மதிப்பீடு, பக்கவாட்டில் முழுமையாக பார்க்கும் திறன், வண்ணங்களை நன்கு பகுத்தறியும்பான்மை, பிரகாசமான ஒளியால் கூசும்கண்களை விரைவில் மறுபடி இயக்கும் வல்லமை, கண்—கால்களிடை கச்சிதமான ஒத்துழைப்பு ஆகிய அனைத்தும் டிரைவரிடம் பொருந்தியிருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன.

தனது திறமையான சேவையானது தனது டிரைவர்களின் திறமையையும் சார்ந்துள்ளது என்பதை ஸதர்ன் ரோட்வேஸ் எப்போதும் உணர்ந்து இருக்கிறது.

இதன் லாரிகள் இரவு 11-மணியிலிருந்து அதிகாலை 4-மணிவரை ஓட்டப்படுவதில்லை — ஏனெனில், இந்த நேரம்தான் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரும் நேரம்; இந்த சமயத்தில் தான் பெரும்பாலான சாலை விபத்துகள் நடக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெரு நம்பிக்கை பெற்றிருப்பதற்கான காரணங்களில் இது ஒன்று.



மகாத்மா காந்தி

ரகுபதி ராகவ

தமிழாக்கம்: ராஜாஜி

44

காந்திஜி ஒரு கிறிஸ்துவப் பாதிரியாரிடம் பேசி வந்த சம்பாஷணை :

எந்தச் சமயத்திலுமே சரி, ஏதேனும் ஒரு லிங்கத்தை வைத்துத்தான் கடவுளை வழிபட வேண்டும். முஸல்மான்களைப் பாருங்கள். மசூதியைக் கடவுள் குடியிருக்கும் வீடாகப் பாவிக்கிறார்கள். அந்தக் கட்டடத்தைக் காப்பதற்கு உயிரைக் கொடுக்க அவர்கள் தயார். கிறிஸ்தவர்கள் ஏன் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள்? பிரமாணம் செய்யும்போது ஏன் பைபிள் புஸ்தகத்தைத் தொட்டுச் சத்தியம் செய்கிறார்கள்? இந்தச் சம்பிரதாயங்களைப் பற்றி நான் குறை கூறவில்லை. ஏதேனும் ஒரு சின்னம் வழிபாட்டுக்கு அவசியம் என்பதற்காகத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். மசூதிகள் கட்டவும், சமாதிகள் கட்டவும் லட்சக்கணக்கில் ஏன் பணம் செலவு செய்கிறார்கள்? அதுவும் ஒருவித மூர்த்தி பூஜைதானே! ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மேரி அம்மை முதலிய விக்கிரகங்கள் முன் ஏன் மண்டியிட்டு வணங்குகிறார்கள்? கல்லில் செதுக்கிய விக்கிரகமாயினும் சரி, படங்களாயினும் சரி, கண்ணாடியில் எழுதிய சித்திரமாயினும் சரி, பல வடிவங்களின் முன் விழுந்து நமஸ்கரிக்கவில்லையா ?

பாதிரியார் : அது வேறு விஷயம். என்னுடைய தாயாரின் படம் ஒன்றை நான் வைத்துக் கொண்டு அன்பு காட்டுவது போலத்தான் நீங்கள் சொல்லுவதெல்லாம். என்னைப் பெற்றவர்களின் படத்தை நான் முத்தமிட்டு அன்பு காட்டினேனானால் அது மூர்த்தி பூஜையாகாது. கிறிஸ்தவ முனிவர்களையாவது, முனிவர்களின் உருவங்களையாவது நாங்கள் வணங்குவது கடவுள் பூஜையல்ல. நாங்கள் பூஜிப்பது ஆண்டவன் ஒருவனையே. அவன்தான் ஆதிகர்த்தா ; ஈசன். வேறொருவருமல்ல.

காந்திஜி: நாங்கள் பூஜிப்பதும் கல்லையும், செம்பையும் அல்ல. கல்லிலும் செம்பிலும் உள்ள கடவுளைத்தான் நாங்கள் பூஜிப்பது. விக்கிரகம் அழகாக இருந்தாலும் சரி, கரட்டு லிங்கமாயினும் சரி, அது ஒரு லிங்கமே ஒழிய கடவுள் அல்ல.

பாதிரியார் : ஆனால் கிராமத்திலுள்ள பாமரர்கள் கல்லைத்தானே கடவுள் என்று எண்ணுகிறார்கள்.

காந்திஜி: மன்னிப்பீராக. அவர்கள் செலுத்தும் பூஜை கல்லுக்கு அல்ல. நீங்கள் வழிபடும் ஆண்டவனையேதான் அந்தக் கல்லின் வழியாக அவர்கள் வழிபடுகிறார்கள். மேரி அம்மையின் விக்கிரகத்தின் முன் அல்லது சித்திரத்தின்முன் நீங்கள் மண்டி போட்டு வணங்கும்போது உங்களுடைய உத்தேசமென்ன? ஏசுநாதனைப் பெற்ற தாயை உங்களுக்காகப் பரிந்து பேசி ஆண்டவனிடம் அருள் பெறக் கோருகிறீர்கள். அம்மையைக் கொண்டு ஈசனை அடையப் பிரார்த்தனை செய்கிறீர்கள். ஈசனுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள மேரி அம்மையை வணங்குகிறீர்கள். ஹிந்துக்களும் அவ்வாறே ஆண்டவனுக்கும் தங்களுக்கும் ஒரு தொடர்பு வேண்டும் என்று கல்லில் செதுக்கிய மூர்த்தியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மேரி அம்மையை வணங்குவது கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. அதைப் போலவே ஹிந்து சம்பிரதாயத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். முஸல்மான்கள் ஒரு மசூதிக்குள் செல்லும் போது அவர்களுடைய உள்ளத்தில் பக்தியும் பயமும் ஆனந்தமும் காண்கிறோம். உலகமெல்லாம் ஒரு மசூதியல்லவா ? பூமிக்கு மேல் வளைந்து நிற்கும் வானமும் ஒரு மசூதியல்லவா? அந்தப் பெரிய மசூதியிருக்க ஒரு கட்டடத்துக்குள் புகும்போது ஏன் இந்தத் தனிப்பட்ட பக்தியும் பயமும்? அதை நான் அறிவேன். முஸல்மான்களுடைய கருத்தும் உணர்ச்சியும் எனக்கு நன்றாகத் தெரியும். அதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆண்டவனை அண்டுவதற்கு அவர்கள் கண்ட வழி இது. ஹிந்துக்கள் ஆண்டவனை அணுகுவதற்குக் கண்ட வழி அவர்கள் அனுசரிக்கும் மூர்த்தி பூஜை. முறை வேறுபட்டாலும் எல்லாருமே ஒரே ஆண்டவனைத்தான் அவரவர் முறையில் அணுக முயல்கிறார்கள்.

பாதிரியார் : கத்தோலிக்கருடைய கொள்கை என்னவென்றால், ஆண்டவன் உண்மை மார்க்கத்தைத் தங்களுக்குக் காட்டிவிட்டான் ; ஆனபடியால் மற்ற மார்க்கங்கள் தவறாகும். அவர்கள் அவற்றை ஆதரிக்க இயலாது என்பது.

காந்திஜி: ஆண்டவனுடைய கருத்துக்கள் ஒரே ஒரு புஸ்தகத்தில்தானா இருக்க வேண்டும்? பைபிள் என்னும் திருநூலில் மட்டுமே ஆண்டவன் பேச வேண்டுமா ? ஆண்டவனுடைய ஆட்சியையும் சக்தியையும் ஏன் வரம்பிட்டு உரைக்கப் பார்க்கிறீர்கள் ?


பாதிரியார்: ஏசுநாதர் அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தித் தம்முடைய தெய்விகத்தை நிரூபித்து விட்டார். ஆண்டவனிடமிருந்து பெற்ற சக்தியை ஏசுநாதர் உபதேசித்தார். ஆகையினால் அவருடைய வாக்கு நமக்குப் பிரதானம்.

காந்திஜி: முகம்மது நபியும் அப்படித்தானே உபதேசித்தார். கிறிஸ்தவ சாஸ்திரத்திலும், இஸ்லாமிய சாஸ்திரத்திலும், ஹிந்து சாஸ்திரத்திலும் எல்லாவற்றிலுமே தெய்விகச் சான்று சொல்லப்படுகிறது. ஒன்றைத் தள்ளி ஒன்றை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? எல்லாவற்றையுமே மதிப்போம்.

பாதிரியார்: முகம்மது நபி அற்புத நிகழ்ச்சிகள் தன்னால் நிகழ்த்திக் காட்ட முடியாது என்றாரே.

காந்திஜி: உண்மை. ஆண்டவனிடம் பக்தி செலுத்துவதற்கு அற்புத நிகழ்ச்சிகள் என்னத்திற்கு வேண்டும்? அந்த முறையில் பக்தியும் நம்பிக்கையும் தோற்றுவிக்க முகம்மது நபி பிரியப்படவில்லை. ஆயினும் ஆண்டவனுடைய செய்தியை நான் சொல்லுகிறேன் என்றுதான் முகம்மது நபி உபதேசித்தார்.

[ஹரிஜன் 13-3-1937]



சென்ற ஆறு ஆண்டுகளில், 'நூலில் என்ன என்ன சேர்க்கலாம்' என்ற முதல் படி வேலையை இப்போது முடித்திருக்கிறது.

☐ மங்களூரிலும் கள்ளிக்கோட்டையிலும் 'மங்களூர் ஓடு' வீடுகள் சகஜம். அந்தப் பகுதி மண் வளம்தான் எவ்வளவு செழிப்பு! கோடைப் புழுதி கூரையில் ஒட்டினால் மாரி நாளில் புல் முளைத்து விடுகிறது. சிவந்த ஓட்டுக் கூரை நிறம் மாறி, பசுந் தரையாய், முழ உயர 'ரூஃப் கார்டன்' கொண்டிருப்பது சாதாரணம்.

☐ நாகர்கோவிலிலுள்ள 'முருகன் உணவு விடுதி'யில் தினசரி பகல் சாப்பாட்டுடன் ஏதேனும் பாயசம் தருவது ஒரு வழக்கமாம். எனக்குக் கிடைத்தது தேங்காய்ப் பாயசம்.

☐ மங்களூர் 'லாவரின் டைல்ஸ்' நிறுவனத்தார் உள்ளங்கை அகலத்தில் சுட்ட மண்ணால் அழகான மங்களூர் ஓடு செய்து அன்பளிப்பாக அளிக்கிறார்கள். — அலுவலகத்து மேஜைகளில் பேப்பர் வெயிட்டாகப் பயன்படுத்த.

மேலைக் கடல் ஓரம்

☐ வட கேரளத்திலும் மங்களூரிலும் ஆட்டோ ரிக்ஷாக்களில் பெட்டி படுக்கைகள் வைக்க 'டிக்கி' வசதி இருக்கிறது. மற்றொன்று 'புகை பிடிக்காதீர்' என்ற அறிவிப்பும் வண்டியுள்ளே உண்டு.

☐ நாகர்கோவில் தொடங்கி, மேலைக் கடலோர நகர்களில் காலையில் பெண்கள் விரிந்த கூந்தலுடன்தான் காட்சி யளிக்கிறார்கள். தினம் தலை முழுகும் பழக்கமாதலால் கல்லூரிக்கும் அலுவலுக்கும் ஈரம் உலர வாய்ப்பாய், தளர்ந்த பின்னலே காலை முடியணி.

☐ குருவாயூரில் கண்ணனை அபிஷேகம் செய்த தைலம் கோவிலில் கிடைக்கிறது. ஆனால் அதை ஏந்த ஒரு பாட்டில் உடனே கிடைக்கவில்லை. திருவனந்தபுரத்திலும் எர்ணாகுளத்திலும் திருச்சூரிலும் நமக்கு முன்னே வந்தவர்கள் ஹோட்டலில் விட்டுச் சென்ற பலரக பல வடிவ காலி 'பாட்டில்'களைத் தொடாமல் வந்துவிட்டோமே என்று இப்போது ஏங்குகிறோம்.

☐ மலையாள மொழியில் ஒன்றல்ல, மூன்று கலைக் களஞ்சிய முயற்சிகள் சேர்ந்தாற்போல் நடைபெறுகின்றன. தனியொருவர் முயற்சியாக மாத்யூ குழுவேலி எட்டுத் தொகுதிகளில் பதினைந்து ஆண்டுகளாக உழைத்தார். பணி அண்மையில் பூர்த்தியடைந்தது. ஜனாதிபதி கிரி கடைசித் தொகுதியை வெளியிட்டார். கேரள எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் பரபரப்பாக இரண்டு ஆண்டுகளில் பன்னிரண்டு தொகுதியாக வெளியிடத் தொடங்கியிருக்கும் நூலில் முதல் இரண்டு பகுதிகள் வெளிவந்துவிட்டன. அச்சாகும் பத்தாயிரத்தில் எட்டாயிரம் பிரதிகள் வெளியாகு முன்பே விற்பனையாகி விட்டன! (விலை ரூ. 60) அரசே அமைத்துள்ள பல ஆசிரியர்கள் கொண்ட கலைக் களஞ்சிய அலுவலகம்

☐ கேரளமெங்கும் ரயிலடியிலும் சரி, கோவில், ஹோட்டல் வாசல்களிலும் சரி, அபூர்வமாகத் தெரிபவர்கள் பிச்சைக்காரர்கள்.

☐ எர்ணாகுளத்திலிருந்து திருச்சூர் செல்லும் வழியில் ஓர் ஆற்றின் மீது குறுகிய ரயில் பாலம். ரயில் போனால் வந்தால் சாலையில் வண்டி நெரிசல். அதோடு இந்த வண்டிகளும் அதே எட்டடிப் பாலத்தில்தான் தண்டவாளச் சாலை மீது ஆற்றைக் கடக்க வேண்டும். ஆதலால் எதிர்ப்புறமிருந்து நாற்பது ஐம்பது வண்டி வரும்வரையில் இந்தப்புறம் அத்தனை வண்டிகள் காத்திருக்கும். இது தேசியப் பெருஞ்சாலை 47ல் ஒரு பகுதி.

☐ மங்களூர் போகும் எக்ஸ்பிரஸில் விடியற்காலை சுமார் மூன்று மணிக்கு முஸ்லிம் பெண்கள் கூட்டம் ஒன்று ஏறிற்று. சற்று நேரத்தில் பாட்டும் கும்மாளமும். இந்த



நேரத்தில் என்ன பஜனை இது என்று தூக்கம் கலைந்தவர்கள் பார்த்தால், விஷயம் புரிந்தது: அது ஒரு கல்யாணக் கோஷ்டி. புது மணப் பெண்ணையும் பிள்ளையையும் பற்றி வேடிக்கையான நாட்டுப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். மணமகள் முகம் எவ்வளவு சிவந்ததோ — பர்தா மறைத்துவிட்டது.



□ மற்ற இடங்களைப் போலவே கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியமும் தமது மாணவர்களை உயர் பட்டம் பெறப் பல ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபடுத்துகிறார். ஆனால் இங்கு ஒரு விசேஷம். திறமையான 'தீஸிஸ்'களைத் தனி நூலாக வெளியிட உதவியும் ஊக்கமும் அளிக்கிறார். 'அலை ஓசை'யைப் பற்றி ஒரு மாணவரும் கவிமணியின் குழந்தைக் கவிதைகள் பற்றி மற்றொருவரும் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றனராம்.

□ கேரளக் கோவில்களின் தனிச் சிறப்பு அவற்றின் எளிமையும் தூய்மையுமே. திருவனந்தபுரம் கோவில் உள்ளே நெய் விளக்கு அன்றி மின்சாரம் இல்லை. அதன் விஸ்தாரமான பிராகாரத்தில் மணல் வெளியைப் பெருக்கிச் சீராக வைக்கும் பணியிலேயே இருபது முப்பது பெண்கள் ஓயாமல் ஈடுபட்டுள்ளார்கள். அண்மையில் கேரளத்தில் இருந்த ராஷ்டிரபதி "கேரளக்காரர் போல நாடெங்கும் மக்கள் சுத்தமாயிருக்கக் கற்றுக்கொண்டால் போதுமே" என்று குறிப்பிட்டார் அல்லவா?

□ சுசீந்திரத்திலும், கன்னியாகுமரியிலும் 'போத்தி'கள்தான் ஏற்போர் உள்ளங்கைபடாமல் பிரசாதத்தை எட்டியிருந்து வீசுவார்கள் என்பதில்லை. கன்னியாகுமரி செல்லும் பஸ்ஸில் கண்டக்டரும் கூட, டிக்கட்டுகளை இவ்வாறு எட்டி நின்று தூவியது வேடிக்கையாக இருந்தது. எல்லாம் தரையில் விழுந்தும் யாரும் டிக்கட்டுகளை எடுத்துக் கொள்ளவில்லை.

□ ஃபிலிம் கிளப்பின் ஆறுவது ஆண்டுவிழா. முதலமைச்சர் (முன்னாள்) அச்சுத மேனன் மலையாளத்தில் பேசுகிறார். "சினிமா விவசாயத்தை அபிவிருத்திக்கான் வேண்டி" என்றெல்லாம் திரும்பத் திரும்ப விவசாயம் என்ற சொல்லைக் கூறுகிறார். படத்தொழிலில் விவசாயம் எங்கே வந்தது? பிறகு தெரிகிறது. 'விவசாயம்' என்று அமைச்சர் குறிப்பிடுவது தொழில். அதாவது, இன்டஸ்ட்ரி என்ற பொருளில். அப்போது விவசாயத்துக்கான மலையாளச் சொல்? 'கிருஷி'.

□ கேரள ரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றில் விளம்பரம் கேட்க வந்தார் ஒருவர். பேச்சு சாதகமாக முடிந்த பிறகு, "உங்கள் பத்திரிகைக்கு விளம்பரம் தருவதே தப்பு. எங்களுக்குப் போட்டியல்லவோ நீர்?" என்றார் அதிகாரி. இவர் என்ன சொல்கிறார் என்று திகைத்து நிற்கையில், வேடிக்கையாக விளக்கினார்: "பத்திரிகை பழசாய்ப் போனால், அதையும் மக்கவைத்து உரமாக்கி விடுகிறார்களே! எங்கள் உரத்துக்குப் போட்டியல்லவா அது?"

□ 'திருசூர்' என்கிறார்கள் அந்த ஊரினர். 'திருச்சூர்' என்கிறார்கள் மற்றவர்கள். ரயிலடியிலோ மலையாளத்தில் மட்டும் 'திரிச் சிவப்பேரூர்' என்று இருக்கிறது. இவ்வாறே மற்றவர்களுக்கும் உள்ளூர்க்காரர்களுக்கும் மங்களூராயிருப்பது கேரளத்தாருக்கு 'மங்களாபுரம்' ஆகிறது.

□ திருசூரில் இடம் பெற்றுள்ளது "கேரள சாகித்திய அகாதெமி". முன்னாள் ஜில்லா கோர்ட் இருந்த இடம். அரண்மனை போன்ற மாளிகை. ஆதிநாள் தொடங்கி இன்றுவரை தலைசிறந்த மலையாள இலக்கிய விற்பன்னர்களின் தைல வண்ண ஓவியங்கள் சுமார் நாற்பது மாளிகை எங்கும் நிறைந்துள்ளன. இதன் சார்பில் அண்மையில் ஜனதிபதி, மகாகவிஜி சங்கரகுருப்பையும் எண்பத்திரண்டு வயது முதுபெரும் எழுத்தாளர் கே. பி. கேசவ மேனனையும் முதல் கௌரவ அங்கத்தினர்களாகச் சேர்க்கும் வைபவத்தை நிகழ்த்தினர்.

□ கேரள சாகித்திய அகாதெமி புறநானூறு முழுவதையும் மலையாள எழுத்திலும் மலையாள மொழிபெயர்ப்பிலும் விளக்கங்களுடன் வெளியிட்டுள்ளது. அகநானூறும் வருமாம்.

□ மொழிதெரியாததைவிட அரைகுறையாகத் தெரிவது ஆபத்து! இல்லாவிட்டால் ஷொரனூர் உணவு விடுதியில் வாங்கிய இட்டிலியில் கைவைக்கும் போது சர்வர் ஏதோ சொல்ல, புரிந்தது போல் ஜன்னல் கதவைத் திறந்



திருப்பேனா? பிறகு அவர் சொல்ல வந்தது 'ஈர பெயிண்ட்' ஜாக்கிரதை, என்ற எச்சரிக்கைதான் என்பதைப் புரிந்துகொண்டிருப்பேனா? பிறகு, பெயிண்டை மட்டும் அழுந்தத் துடைக்கவில்லை — முகத்தில் வழிந்த அசடையும்தான்.

☐ கோட்டயத்தில் தலைமையகம் கொண்டுள்ள எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் தினம் ஒரு புது நூலை வெளியிடுகிறது. ஆம், நாள் ஒன்றுக்கு ஒரு நூல். சொந்த அச்சகமும் வைத்திருக்கிறது. மாவட்டத் தலைநகர்களில் விற்பனைப் பிரிவுகள். இங்கெல்லாம் எந்த ஆசிரியர் எழுதி, எந்தப் பதிப்பாளர் வெளியிட்ட எந்த மலையாள நூலும் கிடைக்கும். இந்த ஸ்தாபனத்தின் புதுக் கட்டிடக் கால்கோல் விழாவிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

☐ திருச்சூர் மங்களூர் ரயில் பாதை கடலோரம் செல்கிறது. செழிப்பும் அழகும் அமைதியும் நிறைந்த பகுதிகள். செம்மண்ணே தெரியாத வண்ணம் அடர்த்தியாக வளர்ந்த தோட்டங்களும், அப்பால் மெல்லிய கீற்றாக மணல் வெளியும், நூறு இருநூறு கஜம் சந்தன வண்ணத்தில் அலைகடலும், அதற்கும் அப்பால் அமைதியான நீல மேற்கடலும் பார்த்தபடி இருக்கலாம். இடையிடையே சிறு கிராமங்கள். இங்கெங்கோதான் செம்மீன் கருத்தம்மாவையும் பழனியையும் பரிக்குட்டியையும் கண்டாரோ தகழி?


☐ கவிதையில் ஈடுபாடுள்ள கேரள எழுத்தாளர்கள் "உங்கள் பாரதியார் கவிதைகளில் எங்களுக்கு விசேஷச் சிறப்புத் தெரியவில்லையே?" என்கிறார்கள். விசாரித்தால் ஓர் உண்மை புலப்படுகிறது. இதுவரையில் மலையாள மொழிபெயர்ப்பில் வந்து, அவர்கள் படித்ததெல்லாம் 'யாமறிந்த மொழிகளிலே' போன்றவைதாம். மற்றும் சில தேச பக்திப் பாடல்கள். ஊழிக் கூத்தும், கண்ணன் பாட்டும், குயிலும், ஞானரதமும் பிற மொழிகளில் வந்தால்தான் பாரதியை மற்றவர்களும் மகா கவியாகப் பார்க்க இயலும் போலும்.

— தம்பி சீனிவாசன்

நட்சத்திர மீன்!

கடலில் வாழும் விந்தையான உயிரினங்களில் ஒன்றான இம்மீன் பார்ப்பதற்கு நட்சத்திர வடிவத்துடன் தோன்றுவதால் இதற்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

சிறு தட்டுப் போன்ற நடுப் பாகத்திலிருந்து ஐந்து கைகள் போன்ற உறுப்புகள் கிளம்புகின்றன. ஒவ்வொன்றும் ஆரம்பத்தில் சற்றுத் தட்டையாகவும் முடிவில் கூர்மையாகவும் காணப்படும். இந்த மீனின் அடிப்பகுதியில்தான் தட்டுப் போன்ற பாகத்தின் நடுவில் வாய் அமைந்துள்ளது. அதற்கு நேர் பின்புறம் அதாவது மேல் பகுதியில்தான் மலவாய் அமைந்திருக்கும். இந்த மீனை எடுத்து மல்லாக்கப் போட்டு விட்டால் தன் கைகளை வில்போல் வளைத்துக் கரணம் போடுவது போல் குப்புறக் கவிழ்த்துக் கொள்ளும். இதன் உடம்பெங்கிலும் சிறு சிறு முட்கள் நிறைந்திருக்கும்.



வாய் இருக்கும் பக்கத்தில் ஐந்து கைகளிலும் ஒவ்வொரு கையின் நடுவிலும் நீண்ட குழாய் போன்ற பிளவு ஒன்று காண்கிறது. ஒவ்வொரு பிளவிலும் ஆரஞ்சு வர்ணத்தில் ஆயிரக் கணக்கான சிறுசிறு குழாய்க் கால்கள் காணப்படுகின்றன. இவற்றின் உதவியால்தான் நட்சத்திர மீன் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு நகர்ந்து செல்கிறது.

இந்த நட்சத்திர மீன் சுத்த அசைவம். இதைப் "பெருந்தீனிப் புலாலுண் பிராணி" என்று அழைப்பார்கள். இதன் முக்கிய உணவாகப் பயன்படுவது மெல்லுடலிகளான ஆளி, மட்டி, சிப்பி, ஊமைச்சி ஆகியவையே. எங்காவது ஒரு சிப்பியைப் பார்த்துவிட்டால் போதும், உடனே தன் ஐந்து கைகளுக்கும் நடுவில் இது சிப்பியைச் சிறைப்படுத்திக் கொள்ளும். பின்னர் தன்னுடைய குழாய்க் கால்களின் உறிஞ்சிகளைச் சிப்பியின் வாய்ப்பக்கம் ஒட்ட வைத்து, மிகுந்த முயற்சியுடன் பிரித்துவிடும். சாதாரணமாக மனிதனுக்குக்கூட ஒரு சிப்பியின் வாயைத் திறப்பது என்பது கடினமான செயலே. அதை இந்த நட்சத்திர மீன் எளிதில் செய்து விடுகிறது! சிப்பியின் வாயைத் திறந்தவுடன் தன் வாய் வழியாக உணவுப் பையை வெளியே எறிந்து உள்ளிருக்கும் தசையை அப்படியே விழுங்கிவிடும். பின்னர் உணவுப் பை மீண்டும் உள்ளே இழுக்கப்பட்டு விடும். சிப்பியின் மேல் ஓட்டைத் தூக்கி எறிந்துவிட்டுப் புறப்பட்டுவிடும், அடுத்த இரையைத் தேடி!

நட்சத்திர மீன்கள் மிகுதியாகக் கூட்டம் கூட்டமாகக் காணப்படும் இடங்களில் மீனவர்கள் இதை ஒரு தொந்தரவாகக் கருதி, இதனைக் கொல்ல எண்ணுகிறார்கள். நட்சத்திர மீன் கைக்குக் கிடைத்த பொழுதெல்லாம் அதை இரண்டாகவோ மூன்றாகவோ கிழித்து எறிந்து விடுவார்கள். ஆனால் கிழிக்கப்பட்ட ஒவ்வொரு துண்டும் வெகு சீக்கிரத்திலேயே வளர்ந்து முழு மீனாக உருவெடுக்கும்! கையை மட்டும் சிதைத்துவிட்டாலும் விரைவிலேயே அந்த இடத்தில் புதுக் கை முளைத்துவிடும். நமக்கு நகம் வளர்வதுபோல், இம்மீனுக்கு உறுப்புக்களே வளர்கின்றன.

ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தொண்டி முதலிய கடற்கரைப் பகுதிகளில் நட்சத்திர மீன்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. பகல் முழுதும் தண்ணீருக்கடியில் சும்மா குப்புறப் படுத்திருக்கும் இம்மீன் இரவில்தான் பெரும்பாலும் இயங்கித் தன் இரையைத் தேடும்.


— எஸ். சாரதாம்பாள்





"வாழைத்தோலி வாழ்க"

எஸ். மணியன்





* செம்பூர்ச் சாலையிலே அன்று ஒரே தேக்கம் - ஒரு
  சேயிழையாள் வந்தாள் அந்தப் பக்கம்
எம்பி எம்பி நடைபோட்டு வந்தாள்
  என்ன என்ன கவர்ச்சியோ அதிலே!

திடீரென்று கீழே விழுந்தாள்
  திக்கென்றது என் நெஞ்சம்
அடிகிடி பட்டு விட்டதோ என்று
  அறியவே ஆவலது பூண்டேன்





அருகே சென்றேன் மெல்ல - அந்த
  அழகிக்கு ஆறுதல் சொல்ல
ஒரு பக்கம் பயம் ஒரு பக்கம் தயை
  ஒன்றும் புரியாமல் விழித்து நின்றேன்

எழுந்துவிட முயன்றாள் அந்த எழிலரசி - ஆனால்
  எழுந்து கொள்ள அவளால் முடியவில்லை
அழுகை அவள் நெஞ்சைப் புடைத்தது
  அதைக்கண்ட எனக்கு நெஞ்சில் வேதனை
                                                  அடைந்தது

கைகொடுத்து அவளை எழுப்ப நினைத்தேன் - ஆனால்
  கைகொடுக்க எனக்குத் தைரியம் இல்லை
மைவிழியால் என்னை அவள் பார்த்தாள்
  மெல்ல மெல்ல ஏதோ சொல்ல நினைத்தாள்

அக்கம் பக்கம் பயத்தோடு பார்த்தேன் - துணிவோடு
  அவளுக்கு என் கையைக் கொடுத்தேன்
மிக்க நன்றி என்று குரல் கொடுத்தாள் - அதில்
  மின்னியது காதல் என்னும் ஜோதி

எழுந்து நின்றாள் அவள் வணக்கம் என்றாள்
  என்னையறியாமல் நானும் வணக்கம் என்றேன்
முழுநிலவு போன்ற அவள் பால் முகத்தில்
  முளைத்தது காதல் என்னும் மூன்றெழுத்து!

நன்றிப் பெருக்குடனே நான் பார்த்தேன் - அந்தப்
  பாதையிலே கிடந்த வாழைப் பழத்தோலை
தரையோடு தரையாகத் தேய்ந்தாலும் - அது
  எங்கள் காதலுக்கு வாழ்வளித்த பொருளல்லவோ!

---

* பம்பாய் நகரின் ஒரு பகுதி.





சித்திர ரகசியம்
கதை: கோமதிசுவாமிநாதன்
சித்திரம்: ராமு
7
மாடியில் பூட்டியிருந்த அறையை ஆராயப் போன ரங்கதுரைக்குத் திகில்.
சரி, சரி, நாளைக்கு வந்து இந்தக் காரியத்தைத் தொடரணும்.
மாடிப்படி இறங்கியதும், அந்தப் பக்கமாகப் பதுங்கிப் போகும் ஒரு உருவத்தைப் பார்த்து...
திருட்டு ராஸ்கல்! என்னத்தைத் திருட வந்தே?
முகத்தில் கரியைப் பூசிக் கொண்டிருந்த பட்டப்பா, உத்தரவுக்குப் பணிந்ததும்...
ஐயோ பிசாசு! நான் செத்தேன்!
ரங்கதுரை அதிர்ச்சியில் மயங்கி விழ, மாடிப்படிக்குக் கீழே மறைந்திருந்த சின்னச்சாமி வெளியே வருகிறான்.
இவன் ஏன் என்னைக் கண்டு இப்படி மிரண்டான்?
பட்டப்பா முகத்தைக் கழுவிக் கொள்ள விரைகிறான். சின்னச்சாமி ரங்கதுரையை அலாக்காகத் தூக்கி அறைக்குக் கொண்டு போய் மூர்ச்சை தெளிவிக்கிறான்.
ரகுராமன் அறை அருகே...
மோகனா! நிசப்தமான இரவு; நீலத் தாமரை போன்ற உன் முகம்; கருவண்டுக் கண்கள்...
சீ! நீங்க என்ன பழங் காலத்துப் பாவலர் தானா?



ஆஹா ஆஹா! மாடர்ன் உவமைகள் தானே தேவை? உதிர்க்கிறேன். ... ஐஸ்கிரீம் போன்று நெஞ்சைக் குளிர்விக்கும் இனிமையான பேச்சு...
எங்க அண்ணா வந்துட்டா, உங்க முகமும் அடிச்சுத் துப்பப்பட்ட சூயிங்கம் போல ஒரு மாதிரிடும். அவர் ஒரு மாதிரி ஆசாமி! நான் வரேன்!
மோகனா! மனசிலே என்னைப் பத்தி ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் இன்னைக்குத் தோல்வித்தா! நானொக்கும் அவள் தூக்கத்திலே நடந்து வரவேண்டும், பகவானே!
மோகனா தன் அறைக்குத் திரும்பிய போது...
என்ன ரங்கதுரை? பெட்டி படுக்கை யெல்லாம் 'பாக்' பண்ணறீர்?
காலையில் முதல் ரயிலுக்கு நாம் கிளம்பறோம். சொத்து வேண்டாம். செத்தும் போகாமலிருந்தால் போதும். நான் அந்தப் பிசாசை நேருக்கு நேரா பார்த்துட்டேன்!...
ஓ.... படு பயங்கரம்!
நான் கிளம்பலே! உன்னை நம்பலே! மாடி அறையில் நடந்தது என்னா? நீ சொல்லலே!
பூட்டைத் திறக்கவே முடியலே மோகனா! சகி நீ என்னை நம்பமாட்டே.. நானே இரவு நான் மாடிப்படி அருகே காவல் இருக்கேன். நீ அறையைத் திறக்க முயற்சி பண்ணு.
அவசியமில்லே; அந்த ஐடியாவை ஒத்திப் போடலாம். முதல்லே இந்த ரகுராமனை விரட்ட ஒரு திட்டம் தேவை!
ஏன் அவன் உன்னை என்ன பண்ணுறான்?
நாலு பேர் மத்தியில் இருக்கறா அவன் கண்கள் பச்சையா இருக்கு; நாம ரெண்டு பேரும் தனிச்சு இருக்கிறப்போ ... காட்டுது!
புரிஞ்சுக் கிட்டேன்.
தொடரும்


அருமையான சுவை என்பது
ஒரு விஷயம், சக்திமிக்க போஷாக்கு
என்பது மற்றொரு முக்கியமான விஷயம்
அந்தப் போஷாக்கைப் பெறுவதற்குத்தான்
எவ்வளவு கரகரப்பான, சுவைமிக்க வழி!
பார்லே க்ளுகோ பிஸ்கெட்டுகளில் பால்,
கோதுமை மற்றும் சர்க்கரையின் நல்ல
அம்சங்கள் எல்லாம் நிரம்பியுள்ளன—
புரதங்களும் வைட்டமின்களும்
அபரிமிதமாக அடங்கியுள்ளன.
Gluco
எனவே
பார்லே க்ளுகோ
பிஸ்கெட்டுகள்
இந்தியாவின்
மிக அதிகமாக
விற்பனையாகும்
பிஸ்கெட்டுகள்
குழந்தைகளுககு விசேஷமாக சிறந்து விளங்குவதில் வியப்பில்லை



7. கலாசாரத்தில் கலப்படம்

மாலை ஆறு மணிக்கு எல்லோரும் பிரிந்து போய் விட்டார்கள். சிவராமன் வீட்டுக்குக் கிளம்பியபோது நல்லதம்பி அவனை நெருங்கினான்.

''உன்னைத் தலைவர் பார்க்க விரும்புகிறார். இரவு ஒன்பது மணிக்குக் காரியாலயத்துக்கு வா. தலைவர் இரவு இங்குதான் தங்குகிறார்'' என்றான், இரகசியமாக. சிவராமன் தலையை அசைத்துவிட்டு நடந்தான். நல்லதம்பி சிறிது தூரம் அவனோடு நடந்து சென்றான்.

''நீ தலைவருக்கு எதிராகப் பேசியிருக்கக்கூடாது'' என்றான் நல்லதம்பி மெதுவாக.

''எதிராக என்ன பேசினேன்? நடக்க வேண்டியதைத்தானே சொன்னேன்.''

''தலைவர் ஒரு விஷயத்தைப் பற்றி முடிவு எடுத்து விட்டால் பிறகு மாற்ற முடியாது.''

''ஏன் முடியாது? தேர்தல் என்றால், அவருடைய விருப்பப்படி நடப்பது என்று அர்த்தமா நல்லதம்பி?''

''உன்னைத்தானே அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார்?''

''அதை நான் பெரிதாக நினைக்கவில்லை... நமக்குள்ள உரிமையை நிலை நாட்ட முடியாமல் போனால்?...''

''உனக்கு இன்னும் அனுபவம் போதாது. நீ கூறுகிறபடி கட்சியில் உரிமை பற்றிய பிரச்னை தீவிரமானால் கட்சிக்குப் பலம் இருக்காது. நீ கட்சியின் முழு நேரத் தீவிர அங்கத்தினனாக ஆகிக் கொஞ்ச நாள்தானே ஆகிறது. சீக்கிரம் கட்சியின் உள் விஷயங்களைப் புரிந்து கொள்வாய்'' என்று கூறிவிட்டுச் சென்றான் நல்லதம்பி.

சிவராமன் ஒன்றும் புரியாமல் மனக் குழப்பத்துடன் நடந்து கொண்டிருந்தான். தனக்கு மாநிலத் தலைவர் பதவி கிடைத்ததைப் பற்றிக்கூட மகிழ்ச்சி இல்லாமல் சோர்ந்து போய் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

* * *

மாலை ஆறு மணிக்குப் பிறகுதான் 'எங்மென்ஸ்' கிளப்பில் பரபரப்பு இருக்கும். அதனுடைய ஆட்ட பாட்டமெல்லாம் இரவு ஒரு மணி அல்லது இரண்டு மணி வரை நீடித்து, பிறகு மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்துவிடும். நகரில் மிகவும் முக்கியமான ஒரு பொழுது போக்குக் கழகம் அது. ஓரளவு பண வசதி படைத்தவர்கள் மட்டுமே அங்கத்தினர்களாக இருக்க முடியும். ஆகையால் பணச் செருக்கில் ஏற்படும் பலவித நடவடிக்கைகளையும், அந்தக் கிளப்பில் மாலை ஆறு மணியிலிருந்து நடுநிசி வரைக்கும் காணலாம்.

அங்கத்தினர்களாகச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அங்கு சேர்ந்ததற்கு ஏதாவது ஒரு காரணம் உண்டு. வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமே சேர்ந்திருப்பவர்கள், ஒருசில ரிடயரான கண்ணியமான அதிகாரிகள்தாம். மற்றவர்களெல்லாம் இரவு நேரத்தை 'ரசனை'யுடன் அங்கு கழிக்க வசதியிருந்ததால் சேர்ந் திருந்தார்கள். அங்கு வரும் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆதாயம் தேடும் நோக்கத்துடன் பலர் அந்தக் கிளப்பில் சேர்ந்திருந்தார்கள். சிலர் தம் பணத்தின் ஓசையை அங்கு ஒலிக்கச் செய்வதற்காகவே சேர்ந்திருந்தனர்.

இப்படிப் பல ரகத்தினர், இருட்டிய பிறகு ஊரை விட்டுச் சற்று விலகியிருந்த அந்தக் கிளப்பில் கூடும் போது, கிளப்பின் கட்டடம் முழுவதும் புத்

துணர்வு பெற்று விடும். நேரம் ஆக, ஆக, ஊர் உறக்கத்தில் ஒடுங்க ஒடுங்க, கிளப்பில் விறுவிறுப்பு ஏறிக் கொண்டிருக்கும்.

கண்ணாடித் தம்ளர்கள் உருளும் ஓசை, சீட்டாட்டத்தில் பணத்தை இழப்பவர்களின் பெருமூச்சு, பெரிய மனிதர்களின் வாயிலிருந்து உதிரும் மட்டமான, காமரசம் ததும்பி வழியும் சொற்கள்.... இத்தியாதி.... இத்தியாதி இதுதான் 'எங்மென்ஸ்' கிளப்!

இங்கு முரளி தினமும் வருவான். 'பிரிட்ஜ்' விளையாடுவான். பலரோடு உரையாடுவான். பலரகப் பட்டவர்களின் விசித்திரமான நடவடிக்கைகளை விலகியிருந்தே பார்த்து ரசிப்பான். பத்து மணிக்குப் போய் விடுவான். அன்றாட வாழ்க்கையின் அலுப்புச் சலிப்பிலிருந்து விடுபட்டு, ஓய்வை நாடித் தினமும் அங்கு வருவான்.

அன்று மாலை அவன் கிளப்புக்குச் செல்லும் போது, உற்சாகத்துடன் இல்லை. 'பாரத மணி'யின் பொருளாதார நிலையில் நெருக்கடி ஏற்படக்கூடிய அறிகுறிகளை உணர்ந்திருந்தான். 'காலைக் குரல்' பத்திரிகை வந்த பிறகு, 'பாரத மணி'யின் விற்பனையைப் பெரும் அளவுக்குப் பாதித்து விட்டது. அதே நினைவில் மனம் குழம்பியவனாய், கிளப்பை அவன் அடைந்தபோது, வழக்கம் போல் கிளப், கலகலப்புடன் இருந்தது. வராந்தாவை அடுத்த பெரிய அறையில் கிடந்த ஐந்து மேஜைகளையும் சுற்றி, மேஜைக்கு ஆறு பேர்கள் வீதம் அமர்ந்து 'ரம்மி' ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சீட்டாடுபவர்களைச் சுற்றி வேடிக்கை பார்ப்பவர்களும் பலர் கூடியிருந்தனர். அவ்வளவு கூட்டம் அங்கிருந்தும் அறைக்குள் மௌனமே நிலவியிருந்தது! அவ்வளவு ஆழ்ந்த லயிப்புடன் அனைவரும் 'ரம்மி' விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். ஆட்டத்தில் பணத்தை இழந்து கொண்டிருந்தவர்கள், இழந்தவற்றை மீட்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தனர். வெற்றி பெற்றுக் கொண்டிருந்தவர்கள் இன்னும் பணத்தைப் பிடுங்கும் வெறியில் மூழ்கியிருந்தார்கள். அடுத்த பெரிய அறையில் இருவர் பில்லியர்ட்ஸ் ஆடிக் கொண்டிருந்தனர். வராந்தாவின் தெற்கு மூலையில், ரிடையரான கிழவர்களின் சீட்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. மேல் பக்கத்து அறையில் நாலைந்து பேர்கள் எதையோ சாப்பிட்டுக் கொண்டு அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். டியூப் லைட்களின் ஒளி, கட்டடம் முழுவதும் பரந்து கிடந்தது. ஒன்றிலும் கவனம் செலுத்தாமல், வராந்தாவில் ஒதுக்கமான இடத்தில் கிடந்த ஒரு சோபாவில் போய்ச் சாய்ந்தான் முரளி. ஒரு பணியாளிடம் வெஜிடபிள் கட்லெட்டுக்கும் காப்பிக்கும் உத்தரவிட்டு விட்டு, சாய்ந்தபடியே கண்களை மூடிக் கொண்டான்.

''ஓ....! மிஸ்டர் முரளி. ஆர் யூ ஹியர்...!'' என்று இரைந்து கேட்டுக் கொண்டே ராஜரத்தினம் அவனை நெருங்கி வந்து பக்கத்தில் இருந்த சோபாவில் சாய்ந்தார். அவரைக் கண்டதும் முரளி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''என்ன, உடம்பு சரியில்லையா? ரொம்பச் சோர்வாக இருக்கிறீர்களே!'' என்றார் ராஜரத்தினம்.



''அப்படி ஒன்றும் இல்லை'' என்று கூறிவிட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டான் முரளி.

'''பாரதமணி'யில் புது சினிமாவைப் பற்றிய விமரிசனத்தைப் படித்தேன். உங்கள் கருத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சினிமாவில் மட்டுந்தானா ஆபாசம் இருக்கிறது?'' என்று கேட்டார், அவர்.

''மற்ற விஷயங்களிலும் ஆபாசம் இருக்கிறது என்பதால், சினிமாவிலும் அது இருக்கட்டும் என்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தான் முரளி.

''ஒரு வகையில் பார்த்தால் இந்த மாதிரியான விஷயங்களும் மனிதனுக்குத் தேவைப்படுகிறது'' என்றார் அவர்.

வாயிலிருந்த பைப்பை ஒரு முறை உறிஞ்சி, புகையை ரசித்துவிட்டு, பைப்பைக் கையில் எடுத்துக் கொண்டார். வாழ்க்கையில் எத்தனையோ பிரச்னைகளைப் புதிது புதிதாக மனிதன் ஏற்படுத்திக் கொள்கிறான். அதிலிருந்து விடுபட அவனுக்கு ஓர் 'அவுட்லெட்' தேவைப்படுகிறது. மலிவாகவும், ரசமாகவும் இருக்கிற விஷயத்தில் மனத்தைச் செலுத்துகிறான். அதுதான் இன்றைய சினிமா.''

''அதற்காக சினிமாவில் ஆபாசங்களைக் காட்ட வேண்டுமா, என்ன?''

களைத் தேடி ஓடுகிறார்கள். இவையெல்லாம் மனிதனுடைய அடிப்படை 'க்ரேவிங்ஸ்'. இதைத் திருப்திப்படுத்துகிறார்கள் சந்திரமோகனும், சசிரேகாவும். அவர்களிடம் நடிப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால் எத்தனையோ பேர்களுடைய இரகசிய நப்பாசைகளைத் தீர்த்து வைக்கிறார்கள்'' என்று கூறிவிட்டு மீண்டும் பைப்பை வாயில் வைத்துக் கொண்டார். பணியாள் ஒரு பீங்கான் தட்டில் கட்லெட்டுகளையும் கோப்பையில் காப்பியும் கொண்டு வந்து மேஜையின்மீது வைத்தான்.



''யூ ஸீ.... யாருமே பாடம் கற்பதற்காகவோ, அறிவைப் பெறுவதற்காகவோ சினிமாவுக்குப் போவதில்லை. அன்றைய மன உளைச்சலிலிருந்து விடுபட, மனத்தைச் சுண்டி இழுத்துக் கிண்டி விடும் ரசமான காட்சிகளைக் கண்டு சில நிமிஷங்கள் மகிழ்ச்சியாக இருக்கத்தான் சினிமாக் கொட்டகை

''நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று முரளி கேட்டான்.

''இல்லை, நன்றி!..... எனக்கு இன்னும் கொஞ்ச நேரம் ஆகும்'' என்று கூறிவிட்டுப் பணியாளைப் பார்த்து,

ஒரு தம்ளரும், சோடாவும் கொண்டு வரும்படி உத்தரவிட்டார் ராஜ ரத்தினம்.

''என்னதான் காரணங்களைக் காட்டினாலும் ஆபாசம், ஆபாசம்தான். மனிதனுக்கு எத்தனையோவிதமான மன அரிப்புக்கள் இருக்கும்; அந்தரங்கத் தேவைகள் இருக்கும். எல்லாவற்றையும் நியாயம் என்றோ, அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றோ ஒப்புக் கொள்ள முடியாது'' என்றான் முரளி.

''சமூகத்தின் போக்கு திசை மாறிக் கொண்டிருக்கும் போது, நாம் எதையும் எதிர்த் திசையில் செலுத்திவிட முடியாது. மிஸ்டர் முரளி! நீங்கள் இவ்வளவு தூரம் இதைப் பற்றிப் பிடிவாதமாக இருப்பதற்குக் காரணம் இது, 'மொரானிடி'யைப் பற்றிய விஷயம் என்பதால்தான் இல்லையா...?''—அவர் கேட்டு விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். முரளி தலையை அசைத்தான்.

''இந்த விஷயத்தில்தான் நீங்கள் இன்னும் தெளிவு பெற வில்லை....'' என்றுகூறி விட்டு, பணியாள் மேஜையின் மீது வைத்த கண்ணாடித் தம்ளரையும் சோடாவையும் தம் பக்கத்தில் இழுத்தார். பிறகு பக்கத்திலிருந்த ஓர் அழகிய தோல் பையிலிருந்து ஒரு சிறு பாட்டிலை எடுத்துத் திறந்து அதிலிருந்த விஸ்கியைத் தம்ளரில் ஊற்றினார். பாதித் தம்ளர் நிறைந்ததும் பாட்டிலை மூடிப் பைக்குள் வைத்தார். பணியாள், சோடா பாட்டிலின் மூடியைத் திறந்து அந்தத் தம்ளரில் ஊற்றினான். குபீரென்று நுரை பொங்கி எழுந்தது. அதை வேடிக்கை பார்த்தபடியே காப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தான் முரளி. தம்ளர் நிரம்பியதும் சோடா பாட்டிலை மேஜையின்மீது வைத்துவிட்டு விலகிச் சென்றான் பணியாள். வாயிலிருந்த பைப்பை எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு வலது கையால் தம்ளரை எடுத்து வாயில் வைத்து ரசித்து உறிஞ்சினார் ராஜரத்தினம். இரண்டு மடக்குக் குடித்து விட்டு மேஜையின்மீது வைத்தார். பிறகு சொன்னார்:

''ஒழுக்கத்தைப் பற்றிய தத்துவம் இப்போது மாறியிருக்கிறது. முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னால் எந்த நோக்குடன் ஒழுக்கம் கவனிக்கப்பட்டதோ, அந்தப் போக்கு இப்போது இல்லையே! பெண்கள் பணத்துக்காக வேலை தேடித் தெருவில் இறங்கத் தொடங்கி விட்டார்கள்! எத்தனையோ ஒழுக்கக் கேடான அசம்பாவிதங்கள் நடைபெறத் தகுந்த சூழ்நிலைகள் உருவாகத் தொடங்கி விட்டன. சூழ்நிலை மாறுகிற போது, எண்ணங்களும், கொள்கைகளும், தாமாகவே மாறத் தொடங்கி விடும். கற்பைப் பற்றிய கொள்கைகூட மாறிவிடும்....''

முரளி குறுக்கிட்டான் —

''அப்படி மாறிவிடக் கூடாது என்று நினைப்பது தவறு என்கிறீர்களா? நமக்கென்று தனிப்பட்ட கலாசாரம் உண்டு. பண்பாடு உண்டு. அது சிறுகச் சிறுக நலிந்து மறைந்துவிடத் தான்வேண்டும் என்கிறீர்களா?'' என்று படபடப்புடன் கேட்டுவிட்டு, அவரை உற்றுப் பார்த்தான். அவர், தம்ளரைக் கையில் வைத்துக் கொண்டு அதில் வரையப்பட்டிருந்த வர்ணக் கோடுகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அது நம்முடைய கையில் இல்லை, மிஸ்டர். அணையை உடைத்துக் கொண்டு வெள்ளம் சீறிப் பாய்கிறது. எதிர்நீச்சல் போட முடியுமா? தண்ணீரின் இழுப்போடு நாமும் போகத்தான் வேண்டும். அப்போதுதான் பிழைக்க முடியும்.......''

திடீரென்று ராஜரத்தினத்தின் கவனம் முரளிக்குப் பின்னால் சென்றது.

''அதோ, பேராசிரியர் வந்துவிட்டார்'' என்றார். முரளி திரும்பிப் பார்த்தான். பின்னால் பேராசிரியர் கமலசாமி வந்து கொண்டிருந்தார். அவரை வரவேற்று ஒரு சோபாவில் அமரச் செய்தார், ராஜரத்தினம். சோபாவில் அமர்ந்தவாறே ராஜரத்தினத்தின் கையிலிருந்த தம்ளரை வெறிக்கப் பார்த்தார் பேராசிரியர் கமலசாமி.


''உங்களுக்கு இது பிடிக்காது.... உங்கள் ரசனையே வேறு....'' என்று கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தார் ஜட்ஜ். பேராசிரியரும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டார். இதைக் கேட்டு முரளி நெஞ்சம் கூசினான். ஓரக் கண்ணால் பேராசிரியரைக் கவனித்தான். அவருடைய முகத்தில் எந்த மாறுதலும் இல்லாமல் மலர்ச்சியுடன்தான் இருந்தார்.

இது எவ்வளவு பச்சையான கேலி!

இவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்கள்! பேசக் கூச வேண்டிய விஷயத்தை விளையாட்டுப் போல் ஒளிவு மறைவின்றிப் பேசி ரசிக்கிறார்களே...!

முரளிக்கு உள்ளம் கூசியது. அவனுடைய மனத்தளவில் மிக உயர்ந்த பீடத்தில் இருப்பவர்கள் அப்படிப் பேசுவதைக் கேட்டு அவன் வியப்புற்றான். மற்ற இடங்களில் பேச முடியாத விஷயங்களைச் சுதந்திரமாகப் பேசி ரசிக்கத் தான் இக் கிளப்புக்கு வருகிறார்களோ?

கீதைக் கதைகள்



'மோட்சம் அடைவதற்கு மானிடர் முன் மூன்று மார்க்கங்கள் உள. அவரவர் யோகத்தைப் பொறுத்தது அவரவர் மார்க்கம்...'

7. திரி

அன்றைக்கு வெள்ளிக்கிழமைச் சமய வகுப்பு. நாவலர் பிரசங்கம் செய்தார்.

'நாம் இந்த உடலைப் பெற்றதன் பயன் இறைவனைச் சேவிப்பதுவே. இறை பக்தி மோட்சம் அடைவதற்கான நிச்சய பயணச் சீட்டு. பிறவிப் பெருங் கடல் நீந்தி, இறைவனுடன் இரண்டறக் கலத்தலே மோட்ச நிலை. மோட்சம் அடைவதற்கு மூன்று மார்க்கங்கள் உள எனக் கூறுகின்றது பகவத்கீதை. அவரவர் யோகத்தைப் பொறுத்தது அவரவர் மார்க்கம். கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் என....'

• • •

'யானே கர்ம யோகத்தின் திருட்டாந்தம். என் கடமையைச் செய்கின்றேன். பயனை ஈசுவரார்ப்பணமாக்கிவிட்டேன். எனவே மோட்சமடைவதற்குச் சிறந்த வழி கர்ம யோகமே....' எனக் கூறியது அக்கினியில் எரிந்து கொண்டிருந்த நிலக்கரி.

'கர்மம் இயற்றாமலே ஞான வழி நின்று ஈசனைச் சார்ந்து மோட்சமடைவதிலுள்ள இன்பம் பிறிதுண்டோ? ஞானமும் ஞான விருத்தியுமே என் யோகமாக அமைந்தது...' என்றது அறிஞனின் கையிலிருந்த காரீய எழுதுகோல்.

நிலக்கரியும் காரீய எழுதுகோலும் பேசியவற்றைக் கேட்டு ஈசனின் செவியில் ஜொலித்த வைரம் சிரித்தது.

'நான் வைரம். என் மதிப்புத் தெரியுமா? என் மேனியிலிருந்து வீசும் ஒளியைப் பார்க்க உங்கள் கண்கள் கூசவில்லையா? நான் பக்தியின் வடிவம். அதனாலேதான் இந்த ஒளியும் ஈசன் செவிகளிலே வீற்றிருக்கும் பேறும்!'

• • •

விஞ்ஞான ஆசிரியர் விநோதியின் இரவு வகுப்பிலே போதித்துக் கொண்டிருந்தார்.

'முன்னர் தொண்ணூற்றிரண்டு மூலகங்கள் இருப்பதாகவே விஞ்ஞானிகள் நம்பிக்கொண்டிருந்தார்கள். விஞ்ஞான அறிவு இப்பொழுது எவ்வளவோ வளர்ச்சியடைந்துவிட்டது. இன்றை வரை நூற்றியேழு மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்றைக்குக் கரியம் என்ற மூலகத்தைப் பற்றிப் படிப்போம். நிலக்கரி இன்னமும் முக்கிய எரிபொருள்களுள் ஒன்றாக உபயோகப்பட்டு வருகின்றது.... காரீயம் எழுதுகோல்களின் உள்ளீட்டுக் கூர்கள் செய்யவும் உபயோகிக்கப்படுகின்றன.... வைரம் அதிக பிரகாசமானது; அதிக விலையுள்ளது. இவை மூன்றும் மூன்று வெவ்வேறு பொருள்களாகத் தோன்றினாலும் உண்மை அதுவல்ல. மூன்றும் கரியம் என்ற ஒரே மூலகப் பொருள்களே.....!'

— எஸ். பொன்னுத்துரை

''நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று ராஜரத்தினம் கேட்டார்.

''ஒன்றும் வேண்டாம்'' என்று மறுத்தார் கமலசாமி. பிறகு முரளியின் பக்கம் திரும்பி, ''என்ன முரளி, எதைப் பற்றித் தர்க்கம்?'' என்று கேட்டார்.

'' 'பாரத மணி'யில் எழுதியிருந்த சினிமா விமரிசனத்தைப் பற்றித் தான்'' என்றான் முரளி.

''ரொம்ப நன்றாக இருந்ததே'' என்றார் கமலசாமி.

''ஓ....! நீங்கள் அதை வரவேற்கிறீர்களா?'' என்று கேட்டு விட்டுத் தம்ளரில் இருந்த அனைத்தையும் குடித்துவிட்டு, மேஜையின்மீது வைத்தார் ராஜரத்தினம். பிறகு, கமலசாமியைப் பார்த்து, ''நீங்கள் வரவேற்கிறீர்கள்!'' என்று இன்னொரு தடவை 'நீங்கள்' என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்துச் சொன்னார். அதிலிருந்த கேலி முரளிக்குப் புரியாமல் போகவில்லை. ''நீங்கள் அதை ஒப்புக் கொண்டு என்ன செய்ய? ஒப்புக் கொள்ள வேண்டியவர்கள், ஒரே சினிமாவை வெறியோடு பத்துத் தடவையாவது பார்த்துத் தீர்க்கும் ரசிகர்கள் அல்லவா? அந்தப் பைத்தியங்களை நம்பி அல்லவா சினிமாத் தொழில் நடக்கிறது'' என்று கூறிவிட்டு எழுந்தார். தம்முடைய கைக் கடிகாரத்தைப் பார்த்தார். பிறகு, விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டார். அவர் சென்றதும் கமலசாமி, 'போக்கர்' விளையாட எழுந்தார்.

''நீயும் வாயேன்'' என்று முரளியைக் கூப்பிட்டார்.

''நான் போகவேண்டியிருக்கிறது'' என்று அவன் மறுத்து விட்டான். அவனை அங்கேயே விட்டு விட்டுப் 'போக்கர்' விளையாட்டு நடக்கும் மேஜையை நோக்கி நடந்தார் பேராசிரியர் கமலசாமி.

தனிமையில் விடப்பட்ட முரளியின் சிந்தனை குழம்பியது. காலையில் ஆடிட்டர் கூறிய எச்சரிக்கை அவனைக் கவலையில் ஆழ்த்தியது. இதே நிலை நீடித்தால், 'பாரத மணி', அதிக காலம் பிழைத்திருக்க முடியாது என்பது தெளிவாகி விட்டது. விற்பனையை உயர்த்த வழி தேட வேண்டும்.

எப்படி உயர்த்துவது? தரத்துக்கும், விற்பனைக்கும் உள்ள உறவு, எதிரிடை

யானது. தரம் உயர்ந்தால், விற்பனை தாழும்! தரம் தாழ்ந்தால், விற்பனை உயரும்! இதுதான் தமிழ் நாட்டின் இன்றைய நிலை. இதற்காக லட்சியத்தை ஏலம் விட்டுவிடவும் முரளியால் முடியாது. சிக்கலைத் தீர்க்க வழி தெரியாமல் குழம்பித் தவித்தான்.

ராஜரத்தினத்தின் சொற்கள் நினைவில் ஒலமிட்டன —

''..... இந்த வேகத்தை நீங்களோ நானோ கட்டுப்படுத்தித் திசை மாற்றிவிட முடியும் என்று நினைக்கிறீர்களா?''

அவர் கேட்ட கேள்வி, நினைவில் விசுவரூபம் எடுத்துப் பயங்கரமாக இரைந்து கொண்டிருந்தது.

''.... எதிர்நீச்சல் போட முடியுமா? தண்ணீரோடு நாமும் போக வேண்டும். அப்போதுதான் பிழைக்க முடியும்....''

உலகத்தை அப்பட்டமாக, எவ்வளவு தெளிவாகக் காட்டிவிட்டார் ராஜரத்தினம்! முரளியால் அவரை எதிர்த்து வாதாட முடியவில்லையே தவிர அவர் கூற்றை அவன் ஏற்கத் தயாராயில்லை. கடவுள் இல்லை என்று அடித்துப் பேசும் நாஸ்திகனுக்கு எதிராக வாதாட முடியாத ஆஸ்திகன், நம்பிக்கையின் அஸ்திவாரத்தில் நின்று கொண்டு விழிப்பது போல்தான் முரளி திணறினான்.

சிக்கலிலிருந்து விடுபடச் சுலபமான வழி இருக்கிறது. 'காலைக் குரலி'ன் தரத்துக்குப் 'பாரதமணி' தாழ்ந்துவிட்டால் போதும். ஆனால், சிங்கத்தை ஊளையிட வைக்க முடியுமா? அதற்கு, கர்ஜிக்கத்தானே தெரியும்!

இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஒருவித படாடோபமும் இல்லாமல் மிகுந்த அடக்கத்துடன் ஒரு பழைய கட்டடத்தில் 'பாரதமணி' பிறந்தது. அதை ஆரம்பிக்க அவனை மிகவும் உற்சாகப்படுத்தித் தூண்டியவர் பேராசிரியர் கமலசாமி. சொந்த ஊரில் அவனுக்கென்றிருந்த இரண்டு வீடுகளில் ஒன்றையும், நிலங்களில் பாதியையும் விற்று அந்தப் பணத்தில் பத்திரிகையை ஆரம்பித்து விட்டான்.

முரளி, அவனுடைய பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. பிரசவ அறையிலேயே தாயை இழந்து விட்டான். எட்டாவது வயதில் தந்தையையும் இழந்தான். தாய் தந்தையற்ற அவனை அவனுடைய மாமாதான் வளர்த்து ஆளாக்கினார். அவனுடைய தாயாரின் சகோதரர் அவர். அவனுடைய சொத்துக்களையும் அவரேதாம் மேற்பார்த்து வந்தார். முரளி, பத்திரிகை நடத்துவதற்காகப் பாதிக்கு மேற்பட்ட சொத்துக்களை விற்க முயல்வதைத் தடுத்துப் பார்த்தார். ஆனால் முரளி பிடிவாதமாக இருக்கவே, அவனுடைய போக்கில் விட்டு விட்டார். 'பாரதமணி' பத்திரிகை வெகு சீக்கிரத்திலேயே புகழும் பணமும் பெறத் தொடங்கி விட்டது. ஆனால் அதை ஒரு கருமேகம் இப்போது மறைக்க வந்திருக்கிறதே.

காசுக்காகக் 'காலைக் குரலி'ன் தரத்துக்குப் 'பாரதமணி'யைத் தாழ்த்தவா?

ஒரு லட்சியத்தின் அஸ்திவாரத்தில்தான் 'பாரதமணி' எழுந்தது. மக்களின் மனத்தில் உயர்ந்த இடத்தையும் பெற்று விட்டது. இனி, முயன்றாலும் அதனால் தாழ முடியாது... தாழக் கூடாது. ஆனால் விற்பனை,...?

முரளியின் நெஞ்சில் வலி எடுத்தது. என்ன செய்வதென்று தெரியாமல் புழுங்கினான். உள்ளத்தில் வீசும் புயலை வெளிக் காட்டாமல் உள்ளே அடக்கித் திணறினான். எந்தச் சலனமும் இல்லாமல் எங்கோ வெறிக்கப் பார்த்தபடியே அமர்ந்திருந்தான்.

அப்போது பணியாள் விரைந்து வந்து 'பாரத மணி' காரியாலயத்திலிருந்து ஃபோனில் யாரோ கூப்பிடுவதாகச் சொல்லவே, எழுந்து போய்ப் பேசினான்.

''சாமிநாதன் பேசுகிறேன் சார்...''

போனின் மறுபக்கத்திலிருந்து பதில் வந்தது. சாமிநாதனின் குரலிலிருந்து மிகுந்த பதற்றத்துடன் இருக்கிறான் என்பது புரிந்தது.

''என்ன.....?''

''யாரோ நாலைந்து பேர் தெருவில் நின்று கொண்டு கட்டடத்தின்மீது கற்களை வீசினார்கள்... போலீசுக்குத் தகவல் கொடுத்தேன். கொஞ்ச நேரம் கற்களை வீசிவிட்டுப் போய்விட்டார்கள்.''

''ஆபத்து ஒன்றுமில்லையே?''—கவலையுடன் கேட்டான் முரளி.

''ஒன்பது கண்ணாடி சன்னல்கள் உடைந்து விட்டன. ஐந்து டியூப் லைட்டுகள், நாலு பல்புகள்....''

''இதையா நான் கேட்டேன்? ஆட்களுக்கு அடி ஏதாவது உண்டா?'' முரளி கோபத்தில் இரைந்தான்.

''இல்லை, சார்.''

''போலீஸ் வந்ததா?''

''இன்னும் வரவில்லை.''

''சரி, நான் அங்கு வருகிறேன்...'' என்று கூறிவிட்டு, ஃபோனை வைத்தான் முரளி. மிகுந்த ஆயாசத்துடன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பதரை.

காரில் ஏறிக்கொண்டு காரியாலயத்தை நோக்கி விரைந்தான். (தொடரும்)



Criterion JL 2421TM

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன

இந்திரா பார்த்தசாரதி

ஆபீசில் ஜாயிண்ட் செகரட்டரி, அமிர்தத்தின் மனம் வேலையில் ஈடுபடாததைக் கண்டு, ''வேண்டுமென்றால் நாளை இதைப் பற்றிப் பேசுவோம். இந்த வாரக் கடைசியில்தான் முடிவு எடுக்க வேண்டும்...'' என்றார்.

அமிர்தம் பதில் சொல்லவில்லை. பேசாமல் இருந்தான். அவர் எதற்காக விவாதத்துக்குக் கூப்பிட்டாரோ அந்த ஃபைலைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. மூன்று நாட்களாக அது அவன் மேஜையில் தூங்குகிறது. நாளை அவருடன் இதைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் இன்றைக்காவது அதைப் படித்தாக வேண்டும். பானுவுக்கும் ஃபைலுக்கும் மனத்தில் ஒரே சமயத்தில் இடமிருக்க இயலாது... அவன் தன் இருப்பிடத்துக்குச் சென்று அந்த ஃபைலைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

சாயந்திரம் ஐந்தே முக்கால் வரை அவனுக்குச் சரியான வேலை. அண்டர் செக்ரடரி, செக்ஷன் அதிகாரிகளுடன் அந்த ஃபைலைப் பற்றிய கேள்விகள், விவாதங்கள்... அவன் ஆபீஸை விட்டு வெளியே வரும்போது மணி ஆறு.

'பாலஸ் ஹைட்ஸ்' வாசலில் பானு நின்று கொண்டிருந்தாள். காலையில்



பார்த்தபடியே அவள் முகம் அதே பொலிவுடன் களைப்புத் தோன்றுமல் விளங்கியது.

''நான் திரும்பிப் போறதா யிருந்தேன். எனக்குக் காத்திருக்கிறதுன்னு ஒரே வெறுப்பு!'' என்றுள் பானு.

''நீயாவது பதினைந்து நிமிஷங்கள் காத்திண்டிருந்திருப்பே. ஆனல் நான் உனக்காக இருபத்தி நாலு மணி நேரமாக் காத்துக்கிட்டிருக்கேன்...'' என்றுன் அமிர்தம்.

''அப்படியானல் மறுபடியும் நான்தான் மன்னிப்புக் கேட்கவேண்டியவள் ஆகிறேன்!'' என்று தலையை ஒருபுறமாகச் சற்றுச் சாய்த்துப் புன்னகை செய்தாள் பானு. அந்த இளநகையின் வசீகரம் அவனைப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் தள்ளியது....இதே 'பாலஸ் ஹைட்ஸ்' ஹோட்டலுக்குத்தான் அவன் நித்யாவோடு முதன் முதலில் வந்தான். நித்யா சல்வார் கம்மீஸ் அணிந்து வந்தாள். புடைவையில் ஸ்தம்பிக்கச் செய்யும் அதே அழகு. அவன் அவளைக் கண் கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்.

''என்ன பார்க்கிறீங்க?'' என்று கேட்டாள் நித்யா.

''இவ்வளவுக்கு நான் தகுதி உடையவனுன்னு தெரியல்லே...'' என்றுன் அமிர்தம்.

'' சரித்திரகாலத்து கதாநாயகன் மாதிரி பேசறீங்களே ! இந்தக் காலத்திலே இருக்க நீங்க தகுதி இல்லே, அதான் சொல்ல முடியும்.''

''அப்படின்னு?...''

'' உணர்ச்சிகளை வார்த்தையிலே விரயமாக்கிறது இந்தக் காலத்து வழக்கமில்லே... 'அது இருக்கட்டும்! நாம மேலே போகலாம்!''

நித்யா 'லிஃப்ட்'டில் ஏறுவதற்காகப் போய் நின்றுள். அமிர்தம் சொன்னுன்: ''லிஃப்டிலா?... வேண்டாம்!...''



''ஏன்?''

''சொர்க்கத்துக்கு முண்டியடிச்சுக்கிட்டு அவசரம் அவசரமா லிஃப்டில் போகக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமா படி ஏறிப் போனுத்தான் சுவாரஸ்யமா இருக்கும்...''

''சொர்க்கத்திலேயே இருக்கப் போறதில்லேயே, இறங்கித்தானே வரணும்?''

''சொர்க்கங்கறது வேறேயா, நீ அருகில் இருக்கிறப்போ?''



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனல்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GP/5 Tam

அவள் தன் கையிலிருந்த ரோஸ் நிறக் கைக்குட்டையினால் அவன் முகத்தில் இலேசாகத் தட்டினாள். உயர்ரக செண்டின் மணம்............ பானு லிஃப்டில் ஏறுவதற்காகப் போய் நின்றாள்.

''லிஃப்டில் வேண்டாம், படி ஏறிப் போவோம்...'' என்றான் அமிர்தம்.

''ஏன்?''

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு அவன் சொன்ன அவ்வார்த்தைகளை அவனால் இப்பொழுது சொல்ல முடியவில்லை. தயக்கம் ஏற்பட்டது. நித்யா கூறியது போல் தான் சொர்க்கத்திலிருந்தும் கீழே இறங்கி வந்தாகி விட்டதா? மறுபடியும் ஏறுவதென்பது இயலாத காரியமா?....

''படி ஏறிப் போனால் உடல் பயிற்சி. அப்படித்தானே?''

''ஒருவேளை நீ சொல்றது சரியாக இருக்கலாம்!''

திலகம் அவனிடம் அடிக்கடி கூறுவதுண்டு... ''உங்களுக்கு முப்பத்தைஞ்சு வயசுக்கு மேலே ஆயிடுச்சு. காலையிலே எழுந்திருந்து கொஞ்ச தூரம் நடங்க. உடற்பயிற்சி செய்தா நல்லதுங்கறாங்க...''

''கவலைப்படாதே! நான் எண்பது வயசுமட்டும் இருப்பேன்...''

''ஏதானும் சொன்னா குதர்க்கமா இப்படிப் பேசுங்க. நல்லது சொன்னா ஏன் கேட்க மாட்டேங்கிறீங்க?''

மூன்று மாடி ஏறிச் செல்வது என்பது சாதாரண விஷயமல்ல. அவனுக்கு மூச்சு வாங்கியது.

''லிஃப்டிலே வந்திருக்கலாம், உங்களுக்கு இப்படி இரைக்கிறதே!''

நித்யாவுடன் அவன் எவ்வளவு தடவை இந்த ஹோட்டலுக்குப் படி ஏறி வந்திருக்கிறான்!.... அது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால்... சந்திர மண்டலத்துக்கும், சுக்கிர மண்டலத்துக்கும் விஞ்ஞானிகள் வழி வகுக்கின்றார்களே, அவர்களால் காலத்தை ஏன் நிறுத்தி வைக்க முடியவில்லை?....

அவர்கள் உள்ளே நுழைந்தபோது ஹால் நிறைந்திருக்கவில்லை. சுமாரான கூட்டம். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவன் இங்கு வருகிறான். பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. 'கவுண்டரில்' முன்பு நரைத்த தலையோடு ஒருவன் உட்கார்ந்திருப்பது வழக்கம். இப்பொழுது ஓர் இளைஞன்.

அமிர்தம் இளைஞனைக் கேட்டான்: ''எனி டேபிள் ஃப்ரீ?''

''ஓ எஸ்...'' அவன் கோடியிலிருந்த மேஜையைச் சுட்டிக் காட்டினான்.

''பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் இங்கு நான் வருவது வழக்கம். அப்பொழுது வயதான ஒருவர் இருந்தார்....''

''நீங்க மாத்தூரைச் சொல் றீங்களா?''

''பேர் தெரியாது.''

''அவர் போய் விட்டார்...இரண்டு வருஷமாகிறது.''

அமிர்தத்துக்கு என்னவோபோலிருந்தது. பன்னிரண்டு வருஷங்கள் என்றால் இவ்வளவா அர்த்தம்?—

அவன் சிந்தித்துக் கொண்டே அவ்விளைஞன் சுட்டிக்காட்டிய இடத்தில் போய் உட்கார்ந்தான். ஃப்ளோர் மியூஸிக், ஏதோ 'பாப்' சங்கீதம்...

அங்கு உட்கார்ந்திருந்தவர்களில் அநேகமாக எல்லோரும் இளைஞர்கள், யுவதிகள். அவன் வயது என்று மதிப்பிடத் தக்க ஒருவர் மட்டும் தம் மனைவி குழந்தைகளுடன் வந்திருந்தார். நாலைந்து குழந்தைகள். இரட்டை நாடி சரீரமுள்ள அவர் மனைவி தடித்த குரலில், அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்த குழந்தைகளை அதட்டிக்கொண்டிருந்தாள். அவளுடைய கணவர் எதிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அவர் வாயில் நீண்ட சுருட்டு. முகத்தில் 'திருப்தி' எழுதி ஒட்டியிருந்தது.

பானுவின் உடம்பு இசைக்குத் தகுந்தவாறு இலேசாக ஆடிக்கொண்டிருந்தது. முதலில் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவள், எழுந்து அவன் எதிரே போய் அமர்ந்து கொண்டாள்.

''இந்தச் சங்கீதம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றாள் பானு.

''உனக்குப் பிடிச்சிருந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷம்!'' என்றான் அமிர்தம்.

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி ஓர் இளஞ் ஜோடி அமர்ந்திருந்தது. அவனுக்கு இருபத்திரண்டு வயதிருக்கலாம். சிவப்படாமல் கழுத்தில் சிலிர்த்து நின்ற பழுப்பு நிற மயிர். கிருதா. முதுகுப்புறம் பித்தான் வைத்த வானவில் சட்டை. முகம் பால் வெள்ளையாக இருந்தது. அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணுக்கு இருபது வயதிருக்கலாம். அவனைப் பின்னால் வாலை ஆட்டிக் கொண்டு வரச் செய்யக் கூடிய புன்னகை. அவன் கையைத் தன் கையில் தாங்கியவாறு அவள் சோபாவில் பின்புறமாகச் சாய்ந்திருந்தாள். அவன் அவளிடம் குனிந்து காதருகே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவள் கண்களை மூடிக் கொண்டிருந்தாள்.


முகத்தில் புன்னகை. அவன் சொல்வது எதையும் அவள் கவனித்ததாகத் தெரியவில்லை.

அப்பொழுது குடும்பத்தோடு வந்திருந்தவர் எழுந்து போனார். அமிர்தத்துக்கு, தான் தனியாக விடப்பட்டது போல் இருந்தது.

சங்கீதத்துக்கு வெறி பிடித்து விட்டாற்போல் வாத்தியக் கருவிகள் இசைக்கத் தொடங்கின.

''அட கடவுளே! இது என்ன சத்தம்!'' என்றான் அமிர்தம்.

''அபாரம்! பிரமாதம்'' என்றாள் பானு.



''தனிக்கொடி கோரிக்கை விட்டிலும் ஆரம்பமாகி விட்டது. என் மனைவி தனக்குத் தனிக் கொடி வேணுங்கிறாள். புடவை உலர்த்தும் போது அவளுக்கும் என் அம்மாவுக்கும் இடையில் சண்டை மூளுகிறதாம்!''

அவனுக்குப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதே இசை சத்தமாகப் படவில்லை. இதோ ஹாலில் இளமை உற்சாகத்துடன் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கிறது. வேறு யார் வீட்டிலேயோ நுழைந்து விட்டோமோ என்ற உணர்வு அவனை அக்கணத்தில் தாக்கிற்று. மாடிப் படிகளில் தடுக்கி விழும்பொழுது பலர் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பது போல மயக்கம். சே!... தன் இளமையை இந்த ஹோட்டலில்தான் எங்கோ பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் தொலைத்து விட்டோம்.....இப்போது வந்து தேடினால் அது கிடைக்குமா?....

பானுவை அங்கேயே விட்டுத் தான் அந்த வினாடியிலேயே அகல வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அதோ கண்களில் கனவுகளையும் தோளில் உலகத்தையும் சுமந்து செல்லும் அவ்விளைஞன் போன்ற ஒருவன் பக்கத்தில் அவள் உட்காருவதுதான் நியாயமானது... தன் பக்கத்தில் வந்து ஏன் உட்கார்ந்திருக்கிறாள்?...

அப்பொழுது கையில் ஒரு சிறிய குறிப்புப் புத்தகத்துடன் கறுப்பு கோட் அணிந்த ஓர் இளைஞன் வந்து நின்றான். அவன் அருகில் 'பாட்ஜ்' அணிந்த சிப்பந்தி. அவன் மேஜையிலிருந்த பூக்கிண்ணத்தை — சற்று ஓரமாக இருந்ததை — நடுமத்தியில் வைத்தான்.

''எஸ் ஸார்?''

''என்ன சாப்பிடறே?'' என்று கேட்டான் அமிர்தம்.

''ஹார்லிக்ஸ், காப்பி'' என்றாள் பானு. அமிர்தம் தனக்கும் அதையே கொண்டு வரச் சொல்லி விட்டுப் பானுவிடம் கூறினான்: ''உனக்கு எது வேண்டும்னு நிச்சயமா உனக்குத் தெரியறது...''

பானு புன்னகை செய்தாள். ''உங்களுக்கு இது தெரியலேங்கறதுதான், உங்க குழப்பமா?...''

அமிர்தம் அவளைக் கூர்ந்து கவனித்தான். நித்யாவும் இந்தச் சந்தர்ப்பத்தில் இதைத்தான் கூறியிருப்பாள்.

''ஏன் இப்படிப் பார்க்கிறீங்க?'' என்றாள் பானு.

''நீ என்கிட்டே நிறையப்பேசணும்னியே, என்ன விஷயம்?''

பானுவின் விரல்கள் மெனு கார்டை இலேசாகத் தட்டின.

''நீங்க இந்த ஹோட்டலுக்கு அடிக்கடி வரதுண்டா?'' என்று கேட்டாள் அவள் சிறிது நேரம் கழித்து.

''நீ நிறையப் பேச வேண்டிய விஷயம் இதுதானா?''

பானு சிரித்தாள். ''எனக்குத் தோணித்து, கேட்டேன்....'' சிறிது நேரம் மௌனம் நிலவியது.

''இன்ஃபாக்ட் பன்னிரண்டு வருஷங்கள் கழித்து இங்கே வரேன்...'' என்றான் அமிர்தம்.

''ஐ ஸீ... பன்னிரண்டு வருஷங்கிறது.....'' அவள் சிறிது தயங்கினாள். அவளே முடிக்கட்டுமென்று அவன் காத்திருந்தான்.

''பன்னிரண்டு வருஷங்கிறது...?'' அவள் பேசாமல் இருக்கக் கண்டு அவன் கேட்டான்.

''அதிலே ஏதாவது உள்ளர்த்தம் தொக்கி நிற்கிறதா?''

மேஜையின் மீது கையை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தவன் சோபாவின் பின்புறமாகச் சாய்ந்தான்.

''அதிருக்கட்டும். நீ என்ன சொல்லணும்னு என்னை இங்கு வரச் சொன்னே?''

''நேத்து உங்களை வரச் சொல்லிட்டு நான் வீட்டைப் பூட்டிண்டு போயிட்டேன்னு உங்களுக்குக் கோபம்தானே?''

''கோபம் இல்லேன்னு சொன்னா உனக்கு ஏமாற்றமா இருக்குமா?''

அவள் முகத்தில் குறுநகையின் கீறல். ''நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியறது.... ஆனா சலன புத்தியுள்ளவள்னு நினைக்காதிங்க..''

அப்பொழுது சிப்பந்தி 'ஹார்லிக்ஸ்' கையும் தண்ணீர்த் தம்ளரையும் மேஜையின் மீது கொண்டு வந்து வைத்தான்.

அதிகமான இழுக்கும் சக்தி
எந்த மண்ணிலும்...எப்பருவத்திலும்
எஸ்கார்ட் 37

கடினமான மண்ணோ, உலர்ந்த அல்லது ஈரமண்ணோ எதுவாக இருந்தாலும் சரி, வெயில், குளிர் அல்லது புழுக்கமான காலத்திலும் கூட, தனது 35 ஹெச் பி. இழு திறனை உங்களுக்கு முழுமையாக வழங்குவதற்கென்றே உருவாக்கப் பட்டது எஸ்கார்ட் 37. எனவே தன்வகையில் உள்ள மற்றெந்த டிராக்டர்களையும் விட அதிகமான இழுப்புச் சக்தியை சீராக வழங்குகிறது எஸ்கார்ட் 37.

உன்னதமான எஸ்கார்ட் சேவை

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு எஸ்கார்ட் 37 டிராக்டருக்கும் நாடெங்கிலும் உள்ள விற்பனையாளர்களின் உன்னத சேவை கிடைக்கிறது. இந்த விற்பனையாளர்களிடம் எஸ்கார்ட்ஸ் தொழிற்சாலைகளில் பயிற்சிபெற்ற என்ஜினியர்கள் உள்ளனர். நாட்டின் எப்பகுதியிலும் எஸ்கார்ட்ஸ் விற்பனையாளர்கள் இருப்பதால், உங்களுக்கு உதவி தேவைப்படும் போது, அது விரைவிலே கிட்டுகிறது.

மறவாதீர்க சக்தி மிகுந்த என்ஜினையுடைய எஸ்கார்ட் 37 டிராக்டருக்கு இவ்வளவு வசதிகளும் கூடவே கிடைக்கின்றன!


ESCORT 37



எஸ்கார்ட்ஸ் லிமிடெட்
விவசாய இலாகா,
18/4, மதுரா ரோடு, ஃபரிதாபாத் (ஹரியானா)

அசல் **எஸ்கார்ட்** மாற்றுப்பகுதிகளையே உபயோகியுங்கள்.

EST 1641-A TM


பெண்கள் என்றாலே
குறிப்பிட்ட சில
நாட்களில் அசௌ
கரியமும் வேதனையும்
இருக்கக்கூடும்.
ஸாரிடான் அவற்றி
லிருந்து விடுதலை
அளித்து அவர்களைப்
புத்துணர்வோடும்
மகிழ்வோடும்
இருக்கச் செய்கிறது.
ஸாரிடான்

HTA-VT-8433

பானு தண்ணீரை எடுத்துக் கொஞ்சம் குடித்தாள். ஒரு தட்டில் தக்காளி 'ஜூஸை' ஊற்றி, 'ஹாட் டாக்'கைக் காகிதத்தில் சுற்றி எடுத்துக் கொண்டாள். அவள் அதை நிதானமாகச் சாப்பிடத் தொடங்கினாள்.

''உன்னைச் சலன புத்தியுள்ளவள்னு யார் சொன்னாங்க? நீயா அப்படி நினைச்சுக்கிட்டியா?''

''இல்லே... என் வயசிலே யாரும் சலனபுத்தியுடன் இருக்கிறதுதான் நியாயம். அதனாலே அப்படி ஏதாவது தப்புக் கணக்குப் போடாதீங்கன்னு எச்சரிக்கை செய்தேன்....''

''எச்சரிக்கையா?''

''ஆமாம்.... எச்சரிக்கைதான்.... எனக்கு என்ன வேணும்னு நான் சுலபமா முடிவு செய்யறதில்லே. முடிவு செஞ்சப்புறம் எனக்கு அதைப் பத்தி ஏதாவது தயக்கமோ அல்லது குழப்பமோ கிடையாது...''

''நிறையப் பேசறது முடிஞ்சாச்சா, இல்லாட்டி இன்னும் இருக்குதா?''

பானு சிரித்தாள்... ''இன்னும் ஆரம்பிக்கவே இல்லே நான்...''

''நோ, நோ....'' என்ற சத்தம் கேட்டு அமிர்தம் திரும்பிப் பார்த்தான். பக்கத்திலிருந்த இளஞ் ஜோடிக்கிடையே ஏதோ வாக்குவாதம். அந்தப் பெண்ணின் குரல் சற்று ஓங்கி ஒலித்தது.

''காதலர்கள் சண்டை!'' என்றாள் பானு கீழ்க் குரலில்.

அப்பொழுது அந்தப் பெண் எழுந்திருந்து வெளியே போகப் புறப்பட்டாள். அந்தப் பையன் அவள் கையைப் பற்றிக் கீழே உட்கார வைத்தான்.... அவள் திமிறிக் கொண்டு எழுந்து வாசலை நோக்கிச் சென்றாள். மேஜையிலிருந்த தட்டில் ஒரு பத்து ரூபாய் நோட்டை வைத்துவிட்டு, 'பில்'லைக் கூடக் கவனிக்காமல் அந்தப் பையன் அவளைப் பின்தொடர்ந்தான்.

''அந்தப் பையன் அவளோட 'பெட்' போல இருக்குது.... வாலை ஆட்டிக்கிட்டுப் போறான்....'' என்றான் அமிர்தம்.

''இந்தப் பையனென்ன, இந்தக் காலத்துப் பையன்களே 'பெட்'தான். பந்தை விட்டெறிஞ்சா கவ்விண்டு வர சாகஸத்தைத் தவிர வேறொண்ணும் தெரியாது.... அமெரிக்காவிலே கிருதாவோட சடை மயிர் தொங்கத் தொங்க இருந்தான்னு, அதைப் பார்த்துட்டுத் தாங்களும் குரங்குத்தனமா காப்பி அடிக்கிற இவங்களைப் பார்த்தா வேடிக்கையாகத்தான் இருக்கு....''

'இளைஞர்களைக் கண்டால் இவளுக்கு ஏன் இவ்வளவு கோபம்?' உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறாள் என்பது அவள் குரலினின்றும் தெரிந்தது. நித்யா நிச்சயம் இப்படிப் பேசியிருக்க மாட்டாள். வயதுக்கு மீறிய ஒரு முதிர்ந்த அறிவுதான் இவளை இப்படிச் சிந்திக்கத் தூண்டியிருக்க வேண்டும்.... அல்லது இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்குமா? இளைஞர்களைக் கண்டால் வெறுப்புக் கொள்ளும்படியான அநுபவம்?.... நிறையப் பேச வேண்டுமென்றாளே, அதுவும் இதைப் பற்றித்தான் இருக்குமோ ? —

அவள் 'ஹாட் டாக்'கைச் சாப்பிட்டு விட்டுக் காகிதத்தினால் கையைத் துடைத்துக் கொண்டாள்.

அப்பொழுது சிப்பந்தி காப்பியைக் கொண்டு வந்து வைத்தான். அவள் சதுரமான சர்க்கரை வில்லையைச் சிறிய எவர்சில்வர் இடுக்கியினால் எடுத்து அமிர்தத்தைப் பார்த்துக் கேட்டாள்:

''எவ்வளவு ?''

''இரண்டு....''

அவனுக்கு இரண்டு வில்லைகளை எடுத்துப் போட்டு விட்டுத் தனக்கு ஒரு வில்லையைப் போட்டுக் கொண்டாள்.

''பெருக்கக் கூடாதுன்னு அதிகமாகச் சர்க்கரை சேர்த்துக்கிறதில்லையா?'' என்று கேட்டான் அமிர்தம்.

''இல்லே! எனக்கு இனிப்பே பிடிக்காது......''

''புரியறது.... இளமை ஒரு இனிப்பான விஷயம். அதுவே உனக்குப் பிடிக்கலே....''

''ஒவ்வொரு பருவத்திலிருந்தும் இன்னொரு பருவத்துக்குப் போறதுங்கிறது, 'ஐ மீன்,' குழந்தையிலிருந்து பையனு மாறுகிறது, பையனிலிருந்து இளைஞனு மாறுகிறது, இளைஞனிலிருந்து நடுத்தர வயசு... இவையெல்லாம் 'கிரேஸ்ஃபுல்'லா நடக்க வேண்டியவை. இப்பொப் போனுனே வாலைக் குழைச்சுண்டு இவங்களைப் பார்த்தா இளமை இனிப்பாவா இருக்கு? நான் அவர்களை மனதார வெறுக்கிறேன்...வெறுக்கிறேன்!''

''நீ இந்த மாதிரிப் பேசறதுக்கு ஒரு வலுவான காரணம் இருக்கும்னு எனக்குப் படறது...'' என்றுன் அமிர்தம்.

''நான் இதுவரையிலும் சொல்லிண்டிருக்கேனே, இந்தக் காரணம் போதாதா?''

''போதாது.''

அவள் காப்பியை உறிஞ்சிவிட்டுக் கீழே வைத்தாள். ''இதுக்கு மேலே என்ன வேணும்?''

''சொன்னுல் கேட்கத் தயாரா இருக்கேன்...''

''நேத்திக்குச் சாயந்திரம் நீங்க வந்தபோது நான் ஏன் வீட்டிலே இல்லைங்கிறதைப் பத்தியே இன்னமும் சொல்லலே, அதுக்குள்ளே வேறே ஏதேதோ பேசிண்டிருக்கோம்...'' என்று சொல்லியவாறு கைப்பையைத் திறந்து கைக்குட்டையை எடுத்து வாயைத் துடைத்துக்கொண்டாள் பானு.

''சொன்னுல் கேக்கத் தயாரா இருக்கேன்...''

''ஒரு டேப்-ரிகார்டரை வாங்கி வைச்சுக்கோங்கோ. சௌகரியமாயிருக்கும்''. என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் பானு.

''நான் வேறே என்ன சொல்ல முடியும்? நிறைய விஷயம் பேசணும்னு சொன்னவள் நீ... நான் கேட்கத்தான் வந்தேன். அறைக்குள்ளே போறேமா வெளியிலே வர்றேமான்னு புரியாமெ இருக்கிறப்பலே, இத்தனை நாழியாப் பேசிக்கிட்டே இருக்கோம்...''

''நல்ல உவமைதான்... அப்படித்தான் பேசிண்டிருக்கோம். இதுக்குக் காரணம் என்ன?''

''சொல்லட்டுமா?''

''சொல்லுங்கோ. ஏன் பயமுறுத்தறப்பலே பேசறீங்க?''

''யூகங்கள்தான்...சரியாக இருக்கலாம், அல்லது தப்பாகவும் இருக்கலாம்... ஒண்ணு என்னைப் பார்க்கிறதா வேண்டாமான்னு நேத்துச் சாயந்திரம் வரையிலும் நீ முடிவு பண்ணலே, அதனாலே வேறே எங்கேயாவது புறப்பட்டுப் போயிருக்கலாம்; இரண்டு, உங்கம்மாவுக்கு என்னை நீ பார்க்கிறது பிடிக்காமே இருக்கலாம், அதனாலே நான் உங்க வீட்டுக்கு வந்தால் ஏற்படக்கூடிய தர்மசங்கடமான நிலைமையிலேருந்து தப்பிச்சுக்க நீ வீட்டை விட்டுப் போய் இன்னொரு இடத்திலேருந்து ஃபோன் செய்திருக்கே... மூணு.. என்கிட்டே என்ன காரணம் சொல்லலாம்னு நீ யோசிச்சிக்கிட்டு இருக்கிறதினாலே இன்னும் சரியான தீர்மானத்துக்கு வராமே இப்படிப் பேசிக்கிட்டிருக்கே...''

பானு தலையை இலேசாகப் பின்புறமாகச் சாய்த்துச் சிரித்தாள். ''நீங்க சொன்னது எல்லாமே தப்பு...''

''தப்பாக இருக்காதுன்னு நான் சொல்லல்லே...''

அவள் அப்பொழுது அந்தப் பக்கமாகப் போன சிப்பந்தியைக் கூப்பிட்டுச் சொன்னாள். ''ஒன் மோர் கப் காப்பி ப்ளீஸ்...''

அமிர்தம் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''பேச்சே இனிமேல்தான் ஆரம்பிக்கிறது...'' என்றுள் பானு.


பானு சொல்லப் போவதைக் கேட்கத் தயாரானுன் அமிர்தம். அவன் சோபாவில் பின்புறமாகச் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டான்.

பானு தொண்டையை இலேசாகக் கனைத்துக் கொண்டாள். பிறகு பேச ஆரம்பித்தாள்: ''நான் நேத்திக்கு எங்கேயும் போகலே. நீங்க வந்ததைப் பார்த்தேன். வாசல்லே கொஞ்ச நேரம் நின்னுண்டிருந்தீங்க. அம்மாவுக்கும் எனக்கும் வாக்குவாதம். நான் உங்களோடு பழகக் கூடாது, பேசக் கூடாது. வெளியிலே போகக் கூடாது என்று ஒரே சண்டை. என்னை உள்ளே வைச்சு வீட்டைப் பூட்டிட்டுப் போயிட்டாள். அம்மா திரும்பி வந்தப்புறம், இன்னொரு வீட்டுக்குப் போய் உங்களுக்குப் போன் பண்ணினேன்.''

அமிர்தம் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பிறகு கேட்டான்: ''நீ சொல்றது ஆச்சரியமா இருக்குது. உங்கம்மாவுக்கு என் பேரிலே ஏன் அவ்வளவு கோபம்?''

''கல்யாணமாகாத ஒரு பெண், கல்யாணம் ஆன ஒருத்தரோட வெளியிலே போகறது எந்த அம்மாவுக்குச் சம்மதமா இருக்கும்?''

இதற்கு அமிர்தத்தால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. (தொடரும்)



இவற்றிற்கு விலங்கு மாட்டாதீர்கள்!

இந்திய ஜவுளித் தொழில் உலகிலேயே மிகப் பெரியவற்றில் ஒன்றாக வளர உதவியுள்ளன, ஆர்வம் மிக்க இக்கரங்கள்.

நிபுணர்கள்: கச்சாப் பருத்தியைத் தரம்பிரித்து, இணைத்து, விற்பனைக்கு அனுப்புவதில் திறமைமிக்க, இந்தியாவின் பருத்தி வியாபாரிகள்.

அவர்களுடைய குறிக்கோள்: சர்வதேச கச்சாப் பருத்தியின் விலைகளை மிகக் குறைவாக வைத்திருப்பது, மற்றும் இந்திய பருத்தித் தொழில் துறைக்கு அது ஒழுங்காக சப்ளை செய்யப்படுவதை உறுதிசெய்வது.

எதிரி: கச்சாப் பருத்தியின் இறக்குமதியை ஒருமுகப்படுத்துதல்.

ஆபத்து: தொழில் அனுபவம் அற்றவர்களால் நிர்வாகம். இதன் விளைவாக விலை ஏற்றம்.

இதற்குப் பலி: 650 பஞ்சாலைகள்.

பாதுகாப்பு: பருத்தி வியாபாரம் மட்டுமின்றி, பருத்தி, உணவுதானியங்கள், எண்ணெய் விதைகள் ஆகிய விவசாயப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள வாணிபத்துறை முழுவதுமே நாசமாக்கப்பட இருக்கின்றது. இது ஜனத்தொகையின் கணிசமான பாகமாகும்—குடும்பத்தினர் உள்பட 6½ கோடி வோட்டு பலம் கொண்ட பாகம் இது.

பிரேரேபிக்கப்பட்டுள்ள ஆல் இந்தியா காட்டன் :பெடரேஷனின் அட்ஹாக் கமிட்டி.

ஜனநாயகமான வியாபாரத்தின் பாதுகாப்பாளர்களுடன் சேருங்கள்.
ஏற்கெனவே 6½ கோடி வோட்டு பலம் உள்ளது.

eic8/ tam.

டிரேயான்ஸ் டிரேயோபேன் மிகச் சிறந்தது ரேயான் டிரேடர்ஸ் அளிப்பதால் இன்னும் சிறந்தது

TRAYONS

இடைவிடா ஆராய்ச்சி, உற்பத்திக் கண்காணிப்பு, இவற்றின் விளைவாக உருவாகும் டிரேயான்ஸ் டிரேயோபேன் உங்கள் விற்பனைப் பொருள்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்புப் பொருளாக விளங்குகிறது. அரிய உயிர் காக்கும் மருந்துகள், சிகரெட்டுகள், வாசனைச் சாமான்கள், ஜவுளிகள், மிட்டாய்கள் போன்ற பல விதமான பொருள்களை, ஈரம், தூசி, பூச்சி, புழுக்கள், எண்ணெய், அழுக்கு, வபு போன்ற எவையும் பாதிக்காமல் காக்கின்றது. டிரேயான்ஸ் டிரேயோபேனால் பாக் செய்யப்பட்ட உங்கள் பொருள்களின் பெயர், விற்பனை வாசகங்கள், ஆகியவை வாங்குவோரின் கவனத்தைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் அழகுற பளிச்சென்று வெளியே தெரிகின்றன. உங்கள் தேவைக்கேற்றபடி ஈரம் கசியாத ஒளி ஊடுருவும், பல வண்ண ரகங்களில் டிரேயான்ஸ் டிரேயோபேன் கிடைக்கிறது.



ரேயான் டிரேடர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1
தந்தி: CELYARN
தபால்பெட்டி நிர் 1736 போன் 21641
கிளைகள்:
தபால் பெட்டி நிர் 253 சேலம்,
தபால் பெட்டி நிர் 154 மதுரை
தபால்பெட்டி நிர் 1372 கோயமுத்தூர்

இன்றைய இல்லத்தரசிகள் டிரேயான்ஸ் டிரேயோபேனால் பாக் செய்யப்பட்ட பொருள்களையே விரும்பி வாங்குவதில் ஆச்சரியமென்ன இருக்கிறது.

NAS-120TM

'கஸ்டம்ஸிலிருந்து' வெளியே வந்தபோது பிரபாகரனின் முகத்திலே ஒரு விசித்திரப் புன்சிரிப்பு ஒருகணம் தோன்றி மறைந்தது.

ரேணுகா ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள். இப்போது அவன் ஏதோ சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான். கப்பல் கிளம்பும் வரையில் இருவரும் பேசிக் கொள்ளவேயில்லை. கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டு ரேணுகா நாலாபுறமும் பார்த்தாள்.

கடலின் வயிற்றைக் கீறிக் கொண்டு கப்பல் சென்று கொண்டிருந்தது. இதமான குளிர் காற்று. முகத்திலே பன்னீரின் சிதறல்களாய்த் தெளிக்கும் கடலின் நீர் முத்துக்கள்....

ரேணுகாவின் கண்களிலும் நீர் முத்துக்கள் தெறித்தன! இந்தியாவின் எல்லை மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்து விட்டது...கடற்கரை மறைந்து விட்டது.... பசுமையான மரங்கள் மறைந்து விட்டன.... சத்தியத்தின் உயர் விளக்கமான இராமேசுவரத்தின் கோபுரம்கூட மெல்ல மெல்ல மறைந்து விட்டது.

பிரபாகரை முதன் முதலாகச் சந்தித்தது நினைவுக்கு வந்தது ரேணுகாவுக்கு. அப்போது ரேணுகா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் சிநேகிதிகள் எல்லாரும் 'காண்டாக்ட் லென்ஸ்' வைத்துக் கொண்டிருந்தனர் கண்களுக்கு! கண்ணாடியே போட வேண்டாம்! கருவிழிகளில் பொருந்தக்கூடிய கண்ணாடி! கண்ணாடி போட்டிருப்பதே வெளியில் தெரியாது!

ரேணுகாவுக்கு அதைக் கேட்டது முதல் தானும் அது மாதிரிக் கண்ணாடி அணிய வேண்டும் என்கிற ஆர்வம் எழுந்தது. அவள் அழகு விழிகளை, அதன் கவர்ச்சியை இந்தக் 'கண்ணாடி பிரேம்' தடுப்பதாக எண்ணிக் கொண்டாள்.

சிநேகிதிகள் கேலி செய்தனர்....

"ஜாக்கிரதை ரேணு...நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய்..... கண்ணுக்கு மட்டும் கண்ணாடி போட்டுக் கொள். இதயத்துக்கும் ஏதாவது போட்டுக் கொண்டு வந்து விடாதே!"

சிநேகிதிகளின் கேலியை அலட்சியமாக மதித்துத்தான் அவள் அவனை நாடிப் போனாள். ஆனால்....ஆனால் முதல் சந்திப்பிலேயே... ஏதோ தடுமாறிய உணர்வு.

அந்த இளம் டாக்டர் ஏன்... ஏன் அவ்வளவு அழகாக இருக்கிறான்? அது மட்டும் தானா?



அந்தக் கண்கள் ! அவற்றிலே கண்ணுடிக்குப் பதிலாகக் காந்தத்தைப் போட்டுக் கொண்டிருப்பாரோ?

''என் கண்களைப் பார்த்தீர்களா? 'ஜஸ்ட் நேச்சுரல் ஐய்ஸ்' மாதிரித்தான் இருக்கும்...''

அவள் அவனைப் பார்த்தாள். கண்களைப் பார்த்தாள். கண்ணுடியை மட்டுமா தேடினாள்? அந்தக் காந்தக் கண்களின் வழியே எதையோ ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு. ஏன்? ஏன்?

அவனும் தனக்காகத் துடிப்பது மாதிரி ஒரு பாவிப்பு, அவன் தனக்காகத்தான் காத்திருப்பது போன்ற ஒரு நினைப்பு, அவன் அவளுக்காகவே வாழ்வது போன்ற பிரமிப்பு—இவைகளைத் தனக்குள் தானே உருவாக்கிக்கொண்டு அவள் அவனைப் பற்றிக் கற்பனை செய்த உணர்வுகளின் சங்கமமாக அவளே திகழ்ந்தாள் !

'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்தப்பட வேண்டிய நாள். பயிற்சிக்காக இரண்டு நாட்கள் வரச் சொல்லியிருந்தான்.

பயிற்சிக்கு அவளுக்கு நான்கு நாட்கள் தேவைப்பட்டன ! அடிக்கடி சந்தேகம் !

அவன் சிரித்துக் கொண்டே சளைக்காமல் பதில் தந்தான்.

''இப்போது சந்தேகம் இல்லையே?'' என்று அவன் அன்று முடிவாகக் கேட்டபோது, அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

சற்றே சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்த அவள் அவன் கண்களின் துடிப்பின் வேகத்தை உணர்ந்தவளாய் நிமிர நினைத்த போது, அவன் கரங்கள் அவளை இருக்கையில் அமரச் செய்தன ! அவள் திடுக்கிட்டாள்.

அவன் தோள்களை இறுகப் பிடித்திருந்த அந்தக் கரங்களை விலக்குவதா வேண்டாமா என்ற பிரமிப்பு, அதே சமயம் அவன் கூறிய அந்த வார்த்தைகள்.... ''மிஸ் ரேணுகா.... எல்லோரையும் போல்தான் உங்களை முதலில் என் 'பேஷண்டா'க நினைத்திருந்தேன். நான்...நான் 'காண்டாக்ட் லென்ஸ்' மட்டும் பொருத்தியதாகத் தெரியவில்லை... என் மனம்.... அதையும் அதையும் சேர்த்துத்தான் பொருத்தி விட்டேனோ என்கிற சந்தேகம். நானே தற்போது உங்கள் 'பேஷண்டா'க இருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?''

சொல்லற்றுப் போன அந்த உணர்ச்சி மயமான வேளையில் துடிக்கின்ற தன் உதடுகளைத்தான் அந்தக் கரத்தில் அவளால் பதிக்க முடிந்தது !

*   *   *

''**எ**ன்ன ரேணு, சிந்தனை?''

'சட்டெனத் திரும்பிப் பார்த்தாள் ரேணு. பிரபாகர் !

''இந்த இருட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறாய் ?''

இருட்டி விட்டதா என்ன ? அதற்குள்ளா? உண்மைதான்..... ஆகாயமும், கடற்கன்னியும் தொடுவானத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். ஒரே நீல நிறம்! இரண்டும் இரண்டறக் கலந்தது போன்ற நிறம்.!

''எப்போது தமிழ்மன்னூர் வரும்?'' கரத்தின்றிக் கேட்டாள் ரேணு.

''இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து விடும்.... உள்ளே வா. இந்தச் 'சில்' காற்று உடம்புக்கு ஆகாது....''

அவன் என்றும் அப்படித்தான்.... அவள் உள்ளத்தைவிட உடம்பைப் பற்றி அதிகம் கவலைப்பட்டான்.

அவள் அவனிடம் ஈர்க்கப்பட்டது ஒரு விதக் 'கவர்ச்சி'யின் அடிப்படையில்தான் என்றாலும் தன் ஈடுபாட்டில் உள்ளத்தின் பிணைப்பும் இருப்பதாக அவள் கருதினாள். அவன்....அவன்....?

பழகப் பழகத்தான் அவனைப் பற்றி அவள் புரிந்து கொண்டாள். இதற்குமுன் தான் கண்டது அவனின் ஒரு பாதிதான் என்பதும், மற்றொரு பாதியில் இருளும், நாற்றமும் குடிகொண்டிருந்தன என்ற உண்மையும் பிற்பாடுதான் புரிந்தது... என்ன செய்வது? அவள் அவசரப்பட்டு விட்டாளே !

''என்ன ரேணு? அப்படி என்னையே பார்க்கிறாய்? உன்னுடைய இந்தப் பார்வை எனக்கு அந்தப் பழைய சம்பவத்தை நினைவூட்டுகிறது.'' அவன் கவர்ச்சியாகச் சிரித்தான்.

அந்தச் சம்பவம்....!

வெளியூரிலிருந்து அன்றுதான் திரும்பி இருந்தாள் அவள். கடந்த ஒரு வார காலமாக அவனைக் காணாத பரபரப்பு அவள் பிடரியை உந்தித் தள்ளியது. அவனை அப்போதே கண்டு பேசிவிட வேண்டுமென்ற துடிப்பு.

கல்லூரியும், சிநேகிதிகளின் பெயர்களும், நோட்ஸும் இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் எவ்வளவு உதவியாக இருக்கின்றன !

தந்தையற்ற அவளுக்குத் தன் தாயை ஏமாற்றுவது கஷ்டமாக இல்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் அவள் ஏதாவது ஒரு காரணம் சொல்லிக் கொண்டு, வயதான தன் தாயை ஏமாற்றிக் கொண்டு அவனைச் சந்திக்க வேண்டும் என்கிற துடிப்பில் இளம் பும் போதெல்லாம் உள்ளத்திலிருந்து ஏதோ ஒன்று வந்து தொண்டையை அடைத்துக் கொள்ளும் !

அன்று அவனைக் காண வேண்டிப் போன அவள் திகைப்பைக் கண்டு திரும்பினாள் !

தன் நண்பர்கள் நாலைந்து பேர்களுடன் 'தன்னை மறந்து' அவன் இருந்த நிலை!

அவளைக் கண்டு அரைகுறை மயக்கத்தில் இருந்த அவன் எழுந்து அவளிடம் வந்து....

''ரேணுகா... ஏன் அப்படிப் பார்க்கிறே? நான்.... நான்... ரொம்ப நல்லவன்.... உன்னைத் தவிர.... நான்... நான்....''

அவள் உடனே திரும்பி விட்டாள். அன்று இரவு வெகு நேரம் வரை அவள் தூங்கவில்லை. முன்புகூடத்தான் காதலின் சித்திரவதையால் கண் இமைக்காது விழித்திருந்த நினைவு வந்தது ! ஆனால் அதற்கும் இதற்கும் எத்துணை வேறுபாடு !

அவனை மானசிகமாகக் காதலனாக, கணவனாக ஏற்றுக் கொண்டுவிட்ட பின் அவள் பெண்மை அவன் நலனுக்காக, அவன் நல்ல எதிர்காலத்துக்காக எப்படித் துடித்தது ?... அதை அவன் அறிந்தானா ?

இந்த உடைந்து போன மனத்தை எப்படிச் சரி செய்வது? முன்னைத் திருப்பித் கட்டாரத்

மனமகிழும் காலைப் புத்துணர்வு மணிக்கணக்கில் நிலைத்திருக்க...

குளித்த பிறகு பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்!
பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர்
டால்க்கின் நீங்காத
நறுமணம்... ஈரத்தை இழுக்கும்
தன்மை... நாள் முழுவதும்
காலைப் புத்துணர்வின் சுகம்.
இவை யாவரையும் உங்களிடம்
ஈர்க்கும்.

கோடையானாலும் இருக்க
மாலும் நறுமணத்துடன்
புதுமைப் பொலிவில், குளுமை
உணர்வில் உங்களை திகழ
வைக்கும். எக்காலத்துக்கும்
ஏற்ற பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்.
இந்தியாவிலேயே அதிக
விற்பனையாகும் டால்க்.

மூன்று அளவுகளில்
கிடைக்கிறது.
ஃபாமிலி, பெரியது,
மத்திமம்.



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃபிளவர் டால்க்

சொகுசான சுகமளிக்கும் மிருதுவான டால்க்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏயில் இணைக்கப்பட்டது)


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்



இக்கரைச் சிரிப்பு

அக்கரையில்!

'பஞ்ச்' என்பது ஓர் ஆங்கில நகைச்சுவை வார ஏடு. அதன் ஆசிரியர் திரு வில்லியம் டேவிஸ் சமீபத்தில் இந்தியா வந்திருந்தார். அவர் வந்ததின் நோக்கம்: இந்திய நகைச்சுவைத் துணுக்குகளைச் சேகரிப்பது. அவருக்குக் கிடைத்தவற்றில் இதோ ஒன்று:

டெலிபோன் மணி ஒலிக்கிறது. தலைமை ஆசிரியர் டெலிபோனை எடுத்துப் பேசுகிறார்-

குரல்: ''தலைமை ஆசிரியர் அவர்களே இன்று ராமு பள்ளிக்கு வரமாட்டான். அவனுக்கு உடம்பு சரியில்லை....''

தலைமை ஆசிரியர்: ''யார் பேசுவது அங்கு?''

குரல்: ''என்னுடைய அப்பா பேசுகிறார்!''

- பி. வி. கிரி, 'ரெயில் கோச்'லிருந்து

தைக்கட்டச் சரி செய்து விடலாம்! ஆனால்... ஆனால்...

மறுநாள் அவனை அவள் சந்தித்தபோது...

''ரேணு.... நான் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். என் பெற்றோர் என்னை டாக்டருக்குப் படிக்க வைத்தனர். சமூக சேவைக்காக இல்லை.... பிறர் தங்களைப் பற்றிப் பெருமையாகப் பேச வேண்டுமே என்பதற்காக.... தாய் தந்தையரின் ஆதரவின்றியே ஊட்டியில் பெயர் பெற்ற 'கான்வென்டில்' என் பள்ளிப் பருவம் கழிந்தது. டாக்டர் படிப்பு என்கிற பெயரில் ஏதோ ஒரு மருத்துவக் கல்லூரியின் ஹாஸ்டலில் என் வாலிபம் தேய்ந்தது. நண்பர்களாக எனக்குக் கிடைத்தவர்கள்.... எனக்குப் புத்தி சொல்லக்கூடிய அளவு புத்திசாலிகள் அல்ல. பாவம்.... அவர்களைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை.... நான் எத்தனை இழிவானவன் என்று எனக்கே புரிகிறது ரேணுகா. ஆனால்.... ஆனால் நான் வந்த வழி அப்படி.... உன் உயர்ந்த எண்ணங்களின் பிரதிபலிப்பு, பாரதப் பண்பாட்டின் முறை வழுவாத உன் நடத்தையின் உயிர்ப்பு.... நான்... நான் பேச முடியாதவனாகி நிற்கிறேன்.... என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொண்டு வருகிறேன்...என்னை நம்பு.....''

சிறு குழந்தைபோல் அவன் தோள்களில் முகம் புதைத்து அழுத அந்த 'டாக்டரை'ப் பச்சாத்தாபத்துடன் பார்த்தாள் ரேணுகா.

அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

டாக்டர் தழுதழுத்த குரலில் கூறினார். ''ரேணு.... உன்னை நான் முதன் முறையாகப் பார்த்த போது மற்றப் பெண்களைப் போல்தான் உன்னையும் பற்றி நினைத்துவிட்டேன். காரணம் நான் சந்தித்த பெண்கள் அப்படி. ஒரு தூய்மையான பெண்மையை, ஒரு பவித்திர வஸ்துவை - உன்னை முதல் முதலாகப் பார்த்த போதுதான் — தரிசித்த உணர்வு என்னுள் ஏற்பட்டது. போதைப் பொருளால்தான் மயக்கம் ஏற்படுமா என்ன? இல்லை ரேணு.... உன்னோடு பேசிக் கொண்டிருந்தாலே, உன் உயர்ந்த உள்ளத்தின் தூய்மையிலே எனக்கு மயக்கம் ஏற்பட்டது. இந்த மயக்கம் போதை மயக்கம் அல்ல.... மல்லிகை மணத்தின் நறுமணத்தால் உண்டான மயக்கம்.... உனக்குத் தெரியுமல்லவா நான் 'பர்மிட் ஹோல்டர்'. மாதம் 'இரண்டு யூனிட்' — எனக்குத் தந்திருக்கிறார்கள். அவ்வளவையும் பாதிக்கு மேல் என் நண்பர்கள் தான் குடிக்கிறார்கள். எதை எதையெல்லாமோ என் நண்பர்களுக்காக நான் தந்திருக்கிறேன்..... ஆனால் உன்னை மட்டும்..... எனக்கே எனக்குக் கிடைத்துவிட்ட உன்னை மட்டும் நான் இழக்க மாட்டேன்.... மாட்டவே மாட்டேன்......''

தன் உள் மனத்தின் அடித்தளம் வரையில் முழுகி எழுந்தவனாய் விம்மி விம்மி அழுதான் அவன். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கீழே விழுந்துவிட்டுத் தரையை ஓங்கி அடிக்கும் சிறு குழந்தை போல் எதன்மீதோ உள்ள கோபத்தை யார் மீதோ காட்ட நினைக்கும் பரிதாபம்.... இந்தப் பொல்லாத சமூகம் இது போன்ற நல்லவர்களை, இடமற்ற கோழைகளை, பலவீனமான உள்ளமுடையவர்களை எப்படித் தீய சக்திகளுக்குப் பயன் படுத்திக் கொள்கிறது!

அவள் அன்றே தீர்மானித்து விட்டாள். அவனுக்கு வாழ்வு தர வேண்டும்; அவன் ஏங்கித் தவிக்கும் அன்பினை அவனுக்கு வாரி வாரி வழங்க வேண்டும்!

இந்த நிலையில்தான் இலங்கைப் பயணம் வகுக்கப்பட்டது. கொழும்பில் நடக்கும் ஏதோ ஒரு மகாநாட்டுக்காக அவனுக்கு அழைப்பு! தானும் ஏனோ கூடப் போக வேண்டும் என அவளுக்குத் தோன்றியது.

தன்னுடைய நெஞ்சுறுதியில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

'எக்ஸ்கர்ஷன்' என்று ஏதோ காரணம் சொல்லிவிட்டுத் தாயை ஏமாற்றிவிட்டு வந்து விட்டாள். ஆனால்... ஆனால் இப்போதுதான் தோன்றுகிறது.... இப்படி வந்தது தவறோ?

அவள் மீது அவன் வைத்திருந்த அன்பில், மரியாதையில் நம்பிக்கை இருந்தது. ஆனால்... கிளம்பும்போது அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. ''ரேணு! நீ சின்னக் குழந்தை இல்லை. உன்னைக் காத்துக் கொள்ள உனக்குத் தெரியும். இருந்தாலும் காலம் கெட்டுக் கிடக்கிறதம்மா.... ஜாக்கிரதையாகப் போய் வா.... சந்தர்ப்பச் சூழ்நிலை மனிதர்களை ஏமாற்றிவிடும். நினைவிருக்கட்டும்....''

ஏன் எல்லோரும் ஒரே மாதிரியாகப் பேசுகிறார்கள்?

* * *

''நீ உள்ளே வருகிறாயா இல்லையா?'' பிரபாகரனின் குரல் கொஞ்சம் பலமாகவே கேட்டது. அருகில் நெருங்கி நின்ற அவனை உற்றுப் பார்த்தாள்; அவன் கண்களில்?...

கண்ணீருடன் கலந்த மயக்கம்!

அவள் பயப்படவேயில்லை.

தடை இருந்தபோதே தடையின்றிக் குடித்தவன். சட்டத்தையும், காவலையும் மீறியபின்.... அந்த எல்லையைத் தாண்டிய பின் தடையாவது ஒன்றுவது! உணர்ச்சி களுக்கு மனம்தான் காவலாகுமே அன்றிச் சட்டம் காவலாக முடியுமா என்ன?

''ரேணு.....'' –

நடுங்கிய அவன் கரங்களை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள் அவள். அன்பின் அந்த நெருக்கம் ஆவேசமான முரட்டுத்தனமாக மாறியபோது – அவனைத் தள்ளிவிட்டாள் வெறுப்புடன்.

''பிரபு.... எளிதில் உணர்ச்சி வசப்பட்டு விடுகிறீர்கள்.... உங்கள் உணர்ச்சிகளை வெல்லக்கூடிய சக்தி முதலில் உங்களுக்கு வேண்டும்.... இந்த ரேணு எங்கும் போய் விட மாட்டாள்.....''

கோபத்தாலும், அவமானத்தாலும் அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருப்பதை அந்த மங்கிய வெளிச்சத்திலும் அவளால் காண முடிந்தது.

''நீ ஏன் வந்தாய்? நீ ஏன் என்னுடன் வந்தாய் ?''

''உங்களுக்குக் காவலாக.... உங்கள் உணர்வுகளுக்கு ஒரு பாதுகாப்பாக...அதைத் தூண்டிவிடக்கூடிய தூண்டுகோலாக அல்ல.''

அவன் சோர்ந்து போய் 'கேபி'னுக்குள் போய் விட்டான். அவள் வெகுநேரம் வரையில் அந்த இருளை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

அப்போது....

அந்தப் பக்கமாக வந்த அந்த ஆங்கிலேயத் தம்பதிகளைப் பார்த்து அவள் வியந்து போனாள்.

அவள் கையிலிருந்த அந்தப் புடவை.... அந்தப் புடவை....?

பிரபாகரன் அவளிடம் தந்திருந்த அதே புடவையைப் போல் அல்லவா இருக்கிறது? இந்தியாவின் கரையிலே 'கஸ்டம்ஸு'க்காகக் காத்து நின்ற போது அவர்களுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பரிச்சயத்தில் அவர்களை நெருங்கினாள்.

''ஹலோ யூ ஆர் ஹியர்....'' என்று அவளை விசாரித்தாள் அந்த ஆங்கிலேய மாது.

''உன் ஹப்பி ரொம்ப நல்லவன். இந்தியன் பட்டு ஸாரி வேண்டும் என்றேன். இந்த 'நைஸ் ஸாரி'யைத் தந்துவிட்டான். ஒன்லி ஃபைவ் ஹண்ட்ரட் ருபீஸ். ஹௌ நைஸ்'' என்ற போது ரேணுவின் உலகமே சுற்றியது.

'பிளாஸ்டிக்' ஜரிகை போட்ட சாதாரண 'ஆர்ட் ஸில்க்' புடவை.... ஐம்பது ரூபாய் புடவைக்கு ஐந்நூறு ரூபாயா?

பிரபாகர் ஏன் இப்படிச் செய்கிறான் ? தன் சமூகத்தை, தன் மக்களை ஏமாற்றுவது தன் கண்களை இழப்பதைப் போல்.... ஆனால் பாரதத்தின் பழம் பெரும் கலைகளை, அதன் புராதனப் பண்பாட்டை, அதன் நேர்மையைப் பற்றிக் கனவு கண்டு அதை நம்பி வரும் அன்னியர்களை ஏமாற்றுவது தன்னைத் தானே கொன்று கொள்ளும் தற்கொலைக்கு ஒப்பாகாதோ ?

தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவனுக்கொரு குணமுண்டு – எனப் பாடிய கவியைப் பிரபாகர் போன்றவர்கள் பொய்யாக்கி விடுவார்களோ? சமூகத்தின் நாற் பரப்பிலும் நாக்குகளை, தன் செந்தீ நாக்குகளைச் சுழற்றிக் கொண்டு சமூகத்தையே செல்லரித்துக் கொண்டிருக்கிற இந்தத் தீய உணர்வுகள் பிரபாகரைப் போன்ற படித்தவர்களிடமே சுரக்குமானால்....

அவள் மேலே சிந்திக்கவில்லை. 'சட்'டென்று ஒரு முடிவுக்கு வந்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ... இந்த 'ஸாரி'யை எனக்கே திருப்பித் தந்து விடுங்கள். உங்கள் விலாசத்தைத் தாருங்கள். அந்த ரூபாயை நான் அனுப்பி விடுகிறேன். அவர் எனக்காகப் பிறந்த நாள் பரிசாக வாங்கித் தந்த புடவை இது. இந்தியர்களுக்கு 'ஸெண்டிமெண்டல்' உணர்வுகள் அதிகம் உண்டென்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஐ திங்க் யூ டோண்ட் மிஸ்டேக் மீ....''

அந்தத் தம்பதிகள் வாயடைத்துப் போயினர். பிரபாகரின் நேர்மை உள்ளத்தையும், ரேணுகாவின் கருணை உள்ளத்தையும் பாராட்


மழை வந்தவுடன்......



கோட்ஸ் இலவசமாக அளிக்கும் பூத்தையல், பின்னல் வேலை, மற்றும் நிட்டிங் டிசைன்கள் கொண்ட வண்ணக் காட்லாக்.

பூத் தையல், டாட்டிங் மற்றும் பின்-னல் வேலை பிரியர்களுக்கு எங்களுடைய அன்பழைப்பு: கவர்ச்சியான இந்த இலவச காட்லாக்கிற்கு எழுதுங்கள். எங்களிடம் கிடைக்கும் கோட்ஸ் ⚓ ஆங்கர் டிசைன் புத்தகங்கள் மற்றும் ⚓ ஆங்கர் நிட்டிங் காட்டன் விவர மடல்களின் பெயர்களோடு கூடிய முழுப்பட்டியல் இதில் அடங்கியுள்ளன.





Bensons/4732 Tam

இன்றே இக்கூப்பனை எங்களுக்குத் தபாலில் அனுப்புங்கள்.

பின்னல் வேலை, நிட்டிங், டாட்டிங் மற்றும் பூத்தையல் டிசைன் நூல்-கள், விவரமடல்கள் ஆகியவற்றின் பட்டியலோடு கூடிய படங்கள் நிறைந்த கோட்ஸ் ⚓ ஆங்கர் காட்-லாக்கை எனக்கு இலவசமாக அனுப்ப வேண்டுகிறேன்

பெயர் ....

முகவரி ....

....

ஜே & பி. கோட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
மார்கெடிங் செக்ஷன்,
81, பால்டன் ரோடு, பம்பாய் 1.

கோட்ஸ்
நூல் தயாரிப்பாளர்கள்.

டினர். இந்தியர்களின் பண்பாட்டை, புராதனத்தை, சிலத்தைப் புகழ்ந்தனர். கண்கள் நிரம்ப, பேச வேண்டிய எதையுமே இனி பேசமுடியாது; பேசிப் புரிய வைக்க முடியாது என்கிற தீவிரத்தில், உணர்ச்சிகளின் உத்வேகத்தில் அந்தப் புத்தம் புதுப் புடவையை, போலிப் புடவையைக் கட்டிக் கொண்டு ஆவேசமாகப் பிரபாகரைத் தேடி வந்தாள் ரேணுகா.

அவன் குடித்த போதுகூட அவனைப் பற்றிக் குறைகூறாத ரேணு, 'காண்டாக்ட் லென்ஸ்' வரவழைக்கிறேன் என்ற பெயரில் நண்பர்களுக்குக் கள்ளக் கடத்தல் செய்ய உதவி புரிந்த பிரபாகரைப் புரிந்து கொண்ட போதுங்கூட அவனைப் பற்றி இழிவாக நினைக்காத ரேணு, மதுப் புட்டிகளிலிருந்து அசல் 'சரக்கை' இன்செக்ஷன் டியூப் மூலம் உறிஞ்சி விட்டு வேறு 'சரக்கை'க் கலந்து சில 'பார்' நண்பர்களுக்கு 'உதவி' புரிந்த பிரபாகரைப் பற்றி அறிந்திருந்தும் அவன் அப்பாவித்தனத்தைக் கண்டு மனத்துள் வேதனைப்பட்டாலும் அதை வெளியே காட்டாத ரேணுகா, புயலாகச் சீறியபடி அவன் இருந்த இடத்தை நோக்கி ஓடினாள் இந்த அற்ப ஏமாற்றுக்காக!

இந்த ஏமாற்று அவன் தன்னைத் தான் மட்டும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் அற்ப ஏமாற்றல்ல !

தன்னைப் போன்ற தன் சமூகத்தை மட்டுமே ஏமாற்றும் விளையாட்டுஏமாற்றல்ல!

தன் நாட்டைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கிற இன்னொரு நாட்டின் முன் தன் சொந்த நாட்டின் அத்தனை பிரஜைகளின் ஒருமித்த வாரிசாகத் தன்னை எண்ணிக் கொண்டு.... இந்தியாவே தன்னைத் தாழ்த்திக் கொண்டு சனியாக, அவமானியாக, அற்பத்திலும் அற்பமாக.... பாரதத்தின் ஒருமித்த வடிவாக அவன் தன்னை ஆக்கிக் கொண்டு நிற்கிறானே.... இது விளையாட்டா? பிறரை ஏமாற்றுவதையே தன் பொழுது போக்காக வைத்துக் கொண்டு விட்டான் அவன். இரத்தத்தில் ஊறிய இந்த வியாதிக்கு மருந்து ?....

அவள் அவன் இருப்பிடத்தை அடைந்த போது....? தன் நினைவின்றி மயக்கமாகக் கிடக்கும் அவன் அருகில் அவனை ஆராய்ந்தபடி இருக்கும் அந்தப் புதியவன்....?

அவளுக்குத் 'திக்'கென்றது.

அவன் நண்பர்களில் ஒருவன் அவன்.

புதுப் புடவை 'சரசர'க்க அவசரமாக வந்த அவளை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தான் அந்தப் புதியவன்.

''மன்னிக்க வேண்டும். மிஸ்டர் பிரபாகரைக் கைது செய்ய வேண்டும்.''

அவள் செயலிழந்து நின்றாள்.

''நீங்கள் யார் ?'' — அவள் தடுமாற்றத்துடன் கேட்டாள்.

''ஸி. ஐ. டி. இலாகா. ரொம்ப நாட்களாகப் பிரபாகரைக் கண்காணித்துவருகிறேன்.''

''ஐ.....ஸீ....''

''அவர் செய்த குற்றங்கள்....''

''எனக்குத் தேவையில்லை....''

சிறிது நேரம் மௌனத்தில் கரைந்தது.

எந்த நாட்டில், மக்கள் குருட்டுப் பழக்கங்களிலும், மயக்கும் அறிவிலும் ஈடுபட்டு, அறம் குன்றியிருக்கிறதோ,

--- எந்த நாட்டு மக்கள் தமது நாட்டில் விளையாத உணவை உண்கிறார்களோ, தமது நாட்டில் நெய்யாத உடையை அணிகிறார்களோ;

--- எந்த நாட்டில் போக்கிரிக் குண்டனை வீரன் என்று மதிக்கிறார்களோ,

--- எந்த நாட்டு மக்கள் பழங்காலப் பெருமையைப் பாடிக் களித்து, இப்போது தம் நாட்டில் உள்ள இடுக்கண்களைக் களைய முற்படாமல் இருக்கிறார்களோ,



--- எந்த நாட்டில் அரசியல்வாதிகள் தந்திரக்காரக் குள்ளநரிகளாகவும், தத்துவ ஞானிகள் கண்ணாம்பூச்சி விளையாடுவதில் நிபுணர்களாகவும் இருக்கிறார்களோ, எந்த நாட்டின் கலை மக்களின் தாழ்ந்த உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதில் தான் மேன்மை பெற்றதாகக் கருதுகிறதோ,

--- எந்த நாட்டில் பல பகுதிகள் பிரிவுபட்டு, ஒவ்வொரு பகுதியும் தானே நாடு என்று திமிருடன் நடந்து கொள்கிறதோ,

--- அந்த நாட்டுக்கு இரங்குங்கள்.

-- கலீல் கிப்ரான், நன்றி: ''எழுதுவது எப்படி?''

தலைமன்னாரின் கலங்கரை விளக்கம் சுற்றிச் சுற்றி வந்தபடி வெளிச்சம் போட்டது.

திடீரென....

அவன் அவள் அருகில் மிக நெருங்கி....

''யூ ஆர்.... ரியலி வெரி ப்யூட்டி புல்!'' என்றான் !

அவள் திகைத்து ஓரடி பின்வாங்கினாள்.

''நீங்கள் விரும்பினால்... விரும்பினால்... பிரபாகரைக் கைது செய்வதிலிருந்து காப்பாற்ற முடியும். அவன் ஒரு கோழை..ஸ்திரமற்றவன். மயக்கத்திலிருந்து விடுபட்டபின் செய்தி தெரிந்தால்.... தற்கொலைக்குக்கூட அஞ்ச மாட்டான்.... பைத்தியக்காரன்.... நீங்கள் அவன் மீது அன்பு கொண்டிருக்கிறீர்கள்.... எனக்கு அதிகாரம் இருக்கிறது. உங்களுக்காக.... நீங்கள் விரும்பினால்......''

ரேணுகாவுக்குத் தலை சுற்றியது.

சந்தர்ப்பம், சூழ்நிலை....

அன்புக்கு ஒரு சந்தர்ப்பம், அதிகார வெறிக்கு ஒரு சூழ்நிலை...

அன்புக்கு அவள் பலியாகவில்லை....

அதிகாரத்தின் துர் உபயோகம் எதிரே பல்லிளித்துப் பரிதாபமாகச் சிரித்தது!

அன்பு அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது ! பாரதத்தின் புராதனப் பண்பாடுகள் எங்கோ தூரத்தில் கைகொட்டிச் சிரிப்பது போன்ற பிரமை!

புத்தாடை உடுத்திப் புதுமணப் பெண்ணாக நின்று கொண்டிருந்த அவளை அவன் நெருங்கிக் கொண்டிருந்தான்.



குழந்தையும் சிரித்தது!

சாரஸன்

பொருத்தங்கள் எத்தனை உண்டோ, அத்தனையும் பார்த்துத்தான் நடந்தது பங்காரு — பண்டரிநாதன் திருமணம். பொருத்தம் பார்த்து ஆகும் சதிபதிகள் எல்லோருமே மன ஒற்றுமையுடன் குடித்தனம் நடத்துகிறார்களா ?

ஏன்? பங்காரு — பண்டரிநாதன் குடும்பத்தையே உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாமே !

பண்டரிநாதன் தெற்கு என்றால் பங்காரு வடக்கு என்பாள். பங்காரு தண்ணீர் என்று கூறுவாளாகில் பண்டரிநாதன் வெந்நீர் என்று கூறுவான்.

சுமாரான வருவாயுள்ள பண்டரி, தன் குடும்ப பட்ஜெட்டை ஈடு செய்ய முடியாமல் திணறினான். ஆயினும் மனைவியிடம் ஏதும் யோசனை கலப்பது கிடையாது. அவள் ஏதேனும் கூற வாயெடுத்தாலும் போதும், ''நிறுத்திக்கொள். எனக்குத் தெரியும்!'' என்று ஒரே போடாய்ப் போட்டு விடுவான்.

அன்றைக்குப் பண்டரிக்கு ஆபீஸுக்குச் செல்ல பஸ் சார்ஜ்கூட இல்லை. அதைப் புரிந்து கொண்டாள் பங்காரு. அவளிடம் சில்லறை இருந்தது. என்றாலும், தான் கொடுத்தால் அவன் பெற்றுக் கொள்ள மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்! எனவே, சமயோசிதமாய் ஒரு போடு போட்டுக் கொண்டே ஒரு ரூபாயை அவனிடம் நீட்டினாள்.

'' ஆமாம். நேற்று குளியலறையில் ஞாபகமில்லாமல் ஒரு ரூபாயை வைத்துவிட்டீர்களே! நான் எடுத்து வைத்திருந்தேன்!''

''ஓ! மறதி! மறதி !'' என்று ரூபாயைப் பெற்றுக் கொண்டே புறப்பட்டான் பண்டரிநாதன்.

''பாவம்! பஸ் சார்ஜ் இல்லாமல் திண்டாடுகிறீர்களே! இந்தாருங்கள், நான் தருகிறேன்!'' என்று பங்காரு கூறியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

''வேண்டாம். நான் நடந்தே போய்க் கொள்கிறேன்!'' என்று முகத்திலே அடித்தாற் போல் பேசியிருப்பான்.

பங்காரு குளிக்காமல் இருந்தாள். அடுத்த மாசம் பிரசவ காலம். அவளுக்கு முதல் பிரசவம் தன் பிறந்த வீட்டில் தான் நடக்க வேண்டும் என்று விருப்பம். அதுதான் நியாயமும்கூட அல்லவா? ஆனால் பண்டரி ஆரம்பத்திலிருந்தே, ''பிரசவம் இங்குதான் நடக்கணும். ஊருக்கு உன்னை அனுப்பப்போவதில்லை'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஏன்? அவனுடைய மாமனார் வந்து கேட்ட போதும், ''அதெல்லாம் முடியாது. சார் ! எனக்குப் பிறக்கும் முதல் குழந்தை என் வீட்டில்தான் ஜனனம் ஆக வேண்டும்!'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி விட்டான்.

பார்த்தாள் பங்காரு. தன் தகப்பனார் முகம் கடுகாய்ச் சிறுத்து விட்டது கண்டு வேதனைப்பட்டாள்.

''அப்பா ! நீங்கள் போய் வாருங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன்!'' என்று கூறி அனுப்பினாள்.

பிறகு ஒரு நாள் பண்டரியிடம், ''எனக்கும் ஆரம்பத்திலே பிறந்தகத்திலேதான் முதல் பிரசவம் ஆக வேண்டும் என்று ஆசை. ஆனால் அப்பாவுக்கு ஏகப்பட்ட தொல்லை. ஏதோ ஒப்புக்காக என்னை அழைக்க வந்தாரே தவிர உண்மையில் என்னை மனப்பூர்வமாக அழைத்துக் கொண்டு போகும் எண்ணம் அவருக்குக் கிடையாது. ஆகையால், முதல் பிரசவம் இங்குதான் நடக்கட்டும். நல்ல நர்ஸிங் ஹோமாகப் பாருங்கள் !'' என்றாள்.

அவள் கூறி முடிக்கவில்லை. ''என்ன சொன்னாய்? இங்கேயா முதல் பிரசவம் ? நடக்காது. நடக்கவும் கூடாது. உன் பிறந்த வீட்டில்தான். நான் தந்தி அடித்து உன் அப்பாவை உடனே வரவழைக்கிறேன்!'' என்று பாய்ந்தான்.

''பாவம், அப்பா கஷ்டப்படுகிறார்!''

'' படட்டுமே ! பெண்ணைப் பெற்றால் சும்மாவா? உலக வழக்கம் எப்படி? கேட்கிறேன் !''

''வழக்கம் சரி! நீங்கள் முதலில் மறுத்தீர்களே !''

''அது வேறு விஷயம். அப்பாவுக்கு மிச்சம் பிடித்து வைக்கிறாயோ? முடியாது!''

சமையலறையிலே இருந்த பங்காரு தனக்குத்தானே வெற்றிப் புன்னகை புரிந்து கொண்டாள்.

பங்காரு கணவன் வீட்டுக்குக் குழந்தையுடன் திரும்பி விட்டாள். குழந்தையையும் கவனித்துக் கொண்டு, சமையலறை வேலைகளையும் அவளால் பார்த்துக் கொள்வது அவளுக்குச் சிரமமாய்த்தான் இருந்தது. உதவிக்காக யாராவது இருந்தால் தேவலை என்று எண்ணினாள். தன் வீட்டிலே யாரும் தோதாக இல்லாததால், தன் கணவனுடைய அக்காவை ஊரிலிருந்து வரவழைக்க ஆசைப்பட்டாள். அந்த நேரிடையாகக் கூறினால் அவன் சம்மதிக்க மாட்டானே. ஆகவே, நேர்மாறாக அக்காவை வரவழைக்க வேண்டாம் என்று கூறவே அவனையே வரவழைத்து விட்டான் பண்டரி.

தன் நாத்தனார் வந்ததிலிருந்து ஒரே ஓய்வுதான் ! அவளை எந்த வேலையும் செய்ய விடுவதில்லை கமலம்மாள்.

''அக்கா! உங்களை என் நாத்தனாராக அடைந்தது என் பெரிய பாக்யம்!'' என்பாள் பங்காரு.

ஆனால் தன் கணவனின் முன்னிலையிலே தன் நாத்தனார் மீது தனக்குள்ள அன்பைக் காட்டவே மாட்டாள் பங்காரு.

அன்று பங்காருவும் கமலம்மாளும் சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள்:

''ஏண்டி பங்காரு! இவன் ரொம்பப் பிடிவாதக்காரன் ஆயிற்றே! எது சொன்னாலும் மாறாகச் சொல்வானே! எப்படி நீ சமாளிக்கிறாயோ !'' என்று கேட்டாள் கமலம்மாள்.

''அதை ஏன் கேட்கிறீர்கள் போங்கள், அக்கா ! ஒவ்வொன்றுக்கும் எதிர் நீச்சல் போட்டுச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்துக்கு ஒன்று சொல்லட்டுமா ? எனக்குக் குழந்தையைப் பார்த்துக் கொண்டு வீட்டு வேலைகளையும் செய்யச் சிரமமாயிருந்தது. அதனால் உங்களை வரவழைக்க வேண்டும் உதவிக்காக என்று விரும்பினேன். ஆனால் நான் அப்படிச் சொன்னால் கேட்க மாட்டார் என்று தெரியுமாதலால், உங்களை வரவழைக்க வேண்டாம் என்று கூறினேன். என் கருத்துக்கு மாறாகவே எதையும் செய்யக் கூடியவரானபடியால், என் அந்தரங்கக் கருத்துக்கு எதிராக நானே கூறி என் எண்ணத்தைச் சமாளித்துக் கொண்டேன்.''

கமலாம்பாள் ஊருக்குத் திரும்ப வேண்டியிருந்தது. ஆனால் நாத்தனாரைப் பிரிய மனமில்லாமல் ''அக்கா! நீங்கள் இன்னும் ஒரு ஆறு மாசம் இங்கேயே இருக்க வேண்டும் என்று இருக்கிறது'' என்றாள் உணர்ச்சியுடன். ''அதற்கென்ன? இன்னொரு சமயம் வரமாட்டேனா?'' என்று ஆறுதல் கூறினாள் கமலம்மாள்.

அன்றைக்குப் பங்காருவுக்கு ஊரிலிருந்து கடிதம் வந்தது. அவளுடைய தாயார் எழுதியிருந்தாள். குழந்தையைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது என்றும் இன்னும் ஒரு வாரத்தில் வருவதாகவும் எழுதியிருந்தாள். நல்ல வேளை! கடிதம் வந்த சமயம், பண்டரி அலுவலகத்தில் இருந்தான். விஷயத்தைச் சொன்னால் என்ன நடக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

கணவன் அலுவலகத்திலிருந்து மாலை திரும்பியதும், ''உங்கள் அக்கா ஊருக்குப் போகும் போது ஒரு விஷயம் சொல்லி விட்டுப் போனார்....'' என்று ஆரம்பித்தாள், பங்காரு.

''என்ன சொன்னாள் அக்கா?''

'' 'நீ ஒண்டியாகக் கஷ்டப்படாதே. உன் அம்மாவை உதவிக்கு அழைத்துக் கொள்' என்றார்.''

'' உம் !''

''ஆனால் எனக்கு இஷ்டமில்லை. 'வேண்டாம் அக்கா ! நான் ஒண்டியாக எப்படியோ சமாளித்துக் கொள்கிறேன்' என்று கூறிவிட்டேன் !'' என்று சொன்னாள் பங்காரு.

வேட்டை நாய் போலப் பாய்ந்தான். பண்டரி. ''அது எப்படி வேண்டாம் என்று நீ சொல்லலாம்? கைக் குழந்தைக்காரி நீ ! ஒண்டியாக எப்படி வேலை செய்ய முடியும்? என் அக்கா கூறியதுதான் சரியான யோசனை! பெரியவர்கள் சொன்னால் ஏற்றுக் கொள்ளாமல் இப்படியா மீறிச் சொல்வது? நான் இப்போதே தந்தி அடித்து உன் தாயாரை வரவழைக்கிறேன்!'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு தபாலாபீசுக்கு வேகமாக ஓடினான் பண்டரி !

பங்காருவால் தனக்கு வந்த சிரிப்பை அடக்கவே முடியவில்லை ! தரையிலே படுக்க வைத்திருக்கும் குழந்தையும் தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தது! அதுவும் நகைச் சுவையில் கலந்து கொண்டதோ ?

படித்துப் பாருங்கள்

கிளிஞ்சல் கோபுரம்

"**கி**ளிஞ்சல் கோபுரம்'' சம்பிரதாயச் சங்கடத்துக்கு உள்ளாகாமல், சற்று மாறுபட்ட கதாபாத்திரங்களுடன் பீடு நடை போட்டுச் செல்கிறது. அதுவே இந்த நவீனத்தின் தனிச் சிறப்பு.

முத்துசிவன் நியாய உணர்வும், குடும்பப் பொறுப்பும் கொண்ட வாலிபன்; அவனுக்கு இரண்டு தம்பிகள்; இரண்டு தங்கைகள். அவர்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கிப் படிக்க வைத்து, தங்கைகளை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைத்து, தம்பிகளுக்கும் மணம் முடித்த பிறகுதான் தன்னைப் பற்றிச் சிந்திப்பது, தனக்கென்று தனி வாழ்க்கை ஒன்றை அமைத்துக் கொள்வது என்று ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்து விட்டவன். தன் எண்ணப்படியே தன் கடமைகளைச் செய்து முடித்தும் விட்டான் முத்துசிவன்.

இனி முத்துசிவன் தன்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதுதான். அவனுக்கு ஏற்ற பெண் சகுணாதான். அவன் மேற்கொண்ட லட்சியங்களெல்லாம் வெற்றி பெறும் வரையில் அவனுக்காகக் காத்திருக்கும் குணக்கொடி அவள். அவர்களது உள்ளார்ந்த காதல், தொலைதூரத்திலிருந்து வந்து செவிப்புலன் வழியாக உட்புகுந்து, இதயத்தில் இடம் பிடித்து ஆன்ம லயிப்பில் சிலிர்த்து நிற்கும் சிறந்த நாதகர இசையைப் போன்றது; புற உலகக் கண்களுக்கு எளிதில் புலனாகாதது.

இப்படியொரு லட்சியவாதியைப் படைத்து விட்டுக் கடைசியில் அவனைத் தடம் புரள விட்டிருப்பது சரியா என்று பலர் கேட்கக் கூடும். லட்சியவாதியும் ஒரு மானிடன் தானே ! மனித உள்ளங்களின் விசித்திரமான ஓட்டங்களை வாசகர்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்த நவீனம்.

''கல்கி''யில் தொடர்கதையாக வெளிவந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்ட இந்நவீனம் இப்பொழுது நூல் வடிவில் வந்திருக்கிறது.

ஆசிரியர்: ஜெகசிற்பியன், பிரசுரம் : வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 6-00.

சுதா விடிந்தும் விடியாமல் இருக்கிற வேளையில் வராந்தா விளக்கைப் போட்டுக் காலண்டரில் அன்றையத் தேதித் தாளைப் பரபரவென்று கிழித்தவாறே ''அம்மா! அம்மா!'' என்று ஓடி வந்தாள்.

துள்ளலும் துடிப்புமாக அதிகாலையில் தன் மகள் ஓடி வருவதைக் கண்ட சீதாவுக்கு எரிச்சலாக வந்தது. வெறுப்புக் கலந்த பார்வை ஒன்றைத் தன் மகள் பக்கம் வீசியவாறே ''ஏண்டி அப்படிக் காலையில் இரைச்சல் போடுகிறாய்?'' என்று அவள் மகள் குரலுக்கு ஒரு படி கூடுதலாக இரைந்தாள்.

தூங்கி வழிந்த நிலையில் சாய்வு நாற்காலியிலிருந்த அவள் கணவர் நாராயணன், ''ஏண்டி சீதா, உனக்கு எத்தனைதரம் சொல்வது? குழந்தையிடம் உன் அனல் கக்கும் விழிகளைக் காட்டிக் கோட்டான் போல் கத்துவதை விட்டுவிடு என்று'' எனப் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு போர்வைக்குள் அடைந்து கிடந்த கைகள் இரண்டையும் ஒரே தூக்காகத் தூக்கி ஓங்கியவாறு சீதாவை நோக்கி வந்தார்.

அம்மாவும் அப்பாவும் தன் பொருட்டுப் போடும் சண்டையைக் காணப் பொறாமல் தன் தாயைத் தனது தந்தை அடிக்க வருகிறாரே என்ற கைப்புணர்ச்சியில் ''ஒண்ணுமில்லேப்பா. சும்மா தேதித் தாளைக் கிழித்தேன்'' எனத் தாழ்ந்து போனாள் சுதா.

அதற்குள் அவள் தந்தை, ''சுதாம்மா! நீ சொல்ல வந்தது எனக்குத் தெரியாமலில்லே. இன்னும் உன்னுடைய பிறந்த நாளைக்கு இரண்டு தினங்கள்தான் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட வந்தால், வீட்டிலுள்ள கொள்ளிவாய்ப் பிசாசு அதை அறிந்து கொண்டுதான் அப்படி விழிக்கிறது'' என்றார்.

''ஆமாம், ஆமாம்! இங்கு இருக்கிற இருப்பிலே பிறந்த நாள் கொண்டாட்டம் இல்லாமல்தான் வாழுது'' என்றாள் சீதா.

''நீ இப்படியே சொல்லிச் சொல்லி என்னை மட்டம் தட்டினது காணாது என்று என் பிள்ளைகள் உற்சாகத்தையும் கெடுக்க வந்தியா?'' என்று சீதாவின் தலையில் ஓங்கி நறுக்கென்று ஒரு குட்டுக் குட்டினார், நாராயணன்.

குட்டப்பட்ட இடத்தைத் தடவியவாறே ''இல்லாத ராஜ போகம் இருக்குன்னு ஏமாறுகிற புத்தி பிள்ளைக்கு வரவேண்டாம்னு பார்த்தால், பெரிசா ஏதோ பெரிய மலையைப் புரட்டுகிற மாதிரி குதிக்கிறீங்க. எனக்கென்ன வந்தது?'' என்று சமையலறைக்குள் புகுந்து கொண்டாள் சீதா.

பொழுது விடிந்து அடையும் வரை இந்த மாதிரி நிம்மதியற்ற வாழ்வுதான் சுதாவைப் பொறுத்த வரைக்கும். தொட்டதுக்கு எடுத்ததுக்கெல்லாம் பெரிய ஞானி போல் வேதாந்தம் பேசுவதுதான் சுதாவின் அம்மா வேலையாக இருந்தது.

சுதா, ஆசையும் ஆவலுமாக எதிர்பார்த்த பிறந்த நாளைக்கு முந்திய தினமும் வந்தது. தனது கருத்தை வெளியிடப் பயந்து, தந்தை ஆபீஸ் விட்டு வரும் வரைக்கும் காத்திருந்து தந்தை வந்தவுடன், ''அப்பா! அப்பா! எனக்கு நைலான் கவுன் வேண்டும்'' என்றாள்.

கைக் காரியமாக இருந்த சுதாவின் அம்மா மாவுக் கையோடு ''என்ன? நைலான் கவுனா? வேண்டியதுதான். ஒரு கவுனுக்கே ஐம்பது அறுபது ரூபாய் ஆகுமே! அதற்கு எங்கே போவது?'' என்றாள்.

நாராயணன் சுதாவைப் பார்த்தவாறே, ''நைலான் கவுன் ஒண்ணும் வாங்க முடியாது. வேணுமின்னா காதி போர்டில் ஒரு கதர்க் கவுன் ஒன்று ஆறு ஏழு ரூபாய்க்குள் எடுத்துத் தருகிறேன்'' என்றார்.

''ஐய! எனக்கு ஒண்ணும் அந்தக் கதர்த் துணி வேண்டாம்'' என்று தன் தந்தைக்கு அழுகு காண்பித்தவாறு, தகப்பனார் சட்டையைப் பிடித்து வழக்கம்போல் சிரித்துக்கொண்டே இழுத்தாள் சுதா.

சுதாவின் தந்தை பாய்ந்து வந்து படாரென்று அவள் முதுகில் இரண்டு அடி பலமாகக் கொடுத்துவிட்டு, ''சீதா! இந்தக் கழுதையைப் பிடித்துக் கொண்டு அந்தத் தூணில் கட்டி வைத்து நாலு அறை கொடு. அப்போதுதான் சரியாக வரும்'' என்றார். தந்தையின் கோபத்தை அறியா வண்ணம் எப்படியாவது தனக்கு நைலான் கவுன்தான் வேண்டும் என்று அடம் பிடித்தாள் சுதா.

அடம் பிடித்தவளைத் தரதர வென்று இழுத்தவாறே கடைத் தெருவுக்கு அழைத்துப் போய் முப்பது ரூபாய்க்கு ஒரு கவுனும் எடுத்து வந்தார்கள்.

வீட்டில் வந்து சரிப் பார்க்கும்போது பின்னால் உள்ள கொக்கியைக் கழற்றாமலே கவுனைப் பரபரவென்று இழுத்தாள் சுதா. ஓடி வந்து சுதாவின் தலையில் ஒரு குட்டு வைத்தார் அவள் தந்தை.

வழக்கத்துக்கு மாறாகக் கணவனின் கொடூரத்தைக் கண்ட சீதாவுக்கு மகள் மேல் அனுதாபமாக இருந்தது. ஓடியே வந்து சட்டைக்குப் பின்புறமுள்ள கொக்கியைக் கழற்றி விட்டாள்.

பொழுது விடிந்தது. பிறந்த நாளுக்கு வழங்கும் இனிப்பாக வீட்டில் வாங்கி வைக்கப்பட்டிருந்த சாக்லேட் அத்தனையையும் டப்பாவோடு பள்ளிக்கு எடுத்துச் செல்ல



ஆயத்தமானாள், சுதா. துணி மாற்றிக்கொண்டிருந்த அவள் தந்தை விரைந்து வந்து, ''அட சனியனே! நீயும் வெறும் ஓட்டைக் கையாகத்தான் இருப்பாய் போலிருக்கிறதே! அவ்வளவையும் இங்கே வைத்து விட்டுக் கையில் கொஞ்சம் எடுத்துப் போ'' என்றார்.

மற்ற நாளானால், 'எவ்வளவு அம்மா வேண்டும்?' என்று மகளிடம் தாஜா பண்ணும் கணவனைக் கண்டிருந்த சீதாவுக்கு, அன்றைய நடப்பு ஆச்சரியமாகவும் இருந்தது; அதே நேரத்தில் வேதனையாகவும் இருந்தது.

மத்தியானம் சாப்பாட்டு வேளையில் பாயசத்தைப் புதுச் சட்டையில் கொட்டிக் கொண்டாள் சுதா. அதற்கும் சுதாவின் தந்தை கைகளை ஆட்டியவாறு ''ஏய்! கழுதே! உனக்குப் புத்தி இல்லியா? எருமை மாதிரி எட்டு வருஷங்களை விழுங்கிவிட்டு ஒன்பதாவது வருஷத்துக்கு வந்திருக்கிறயே?'' என்று அவரும் பழைய வேதாந்தம் ஓத ஆரம்பித்தார்.

பிறந்த நாள் பொழுது முழுதும் வெடுக் வெடுக்கென்று கணவன் மகளிடம் பட்ட கோபத்தைக் கண்ட கீதாவின் மனம் கிளர்ச்சியுற்றது.

''சீ! என்ன மனுஷன்! ஓயாது ஒழியாது ஒரு நல்ல நாள் தீய நாள் என்றில்லாமல் கோபப் படுகிறரே என்று அவளுக்கு அளவு கடந்த வருத்தம். கணவனைத் தட்டிக் கேட்கவும் பயம்; கோபம் என்ற இசைத் தட்டைத் திருப்பிப் போட்ட நிலைதான் அவளைப் பொறுத்த வரைக்கும். இவ்வளவு நாள் அவள் சுதாவினிடம் காட்டிய கொடூரத்தை அவள் கணவன் காட்டுகிறர். அவ்வளவுதான் வித்தியாசம்.''

கீதாவுக்கு அவள் நிலையைத் தெற்றெனக் கண்ணுடியில் காண்பது போலிருந்தது. அறிவானது அவளை இடித்துரைத்தது.

வீட்டில் தாயாரும் தந்தையும் ஒருமிக்கக் கோபப்பட்டால் குழந்தையின் கதி என்ன ஆவது என்ற நினைப்பில், ''வாம்மா, சுதா! ரெண்டு பேரும் ஒண்ணுச் சேர்ந்து ஏதாவது படிக்கலாம்'' என்று மகளை ஆதுரத்துடன் அழைத்துச் சென்றுள் கீதா.

மனைவியும் மகளும் ஒன்றுகச் செல்வதைக் கண்ட நாராயணனின் மனம் களிப்பால் துள்ளியது. சரிதான்; அவர் போட்ட புள்ளி இம்மியும் பிசகவில்லை என்ற இறுமாப்பில் ஒரு படி முன்னே வந்து, ''சுதா! இங்கே வா!'' என்று கட்டளையிட்டார்.

என்றுமில்லாத இருநாளாக அன்று தன் தாயின் கனிவைக் கண்ட சுதாவின் மனம் அன்றையப் பொழுதில் தந்தையின் கொடூரத்தைத் தாங்காது. ''நான் ஒண்ணும் நீங்க கூப்பிட்டா வரமாட்டேன், அம்மாகூடத் தான் இருப்பேன்'' என்றுள் சுதா.

''அட கழுதை, நான் கூப்பிடுகிறேன்; போய்க் கொண்டே யிருக்கிறயா?'' என்று அருகில் கிடந்த பேப்பரை எடுத்து மகளைப் பார்த்தவாறே வீசினர். அது செங்குத்தாக வந்து சுதாவின் கண்களில் ஒன்றைப் பதம் பார்த்தது. அவ்வளவு நேரம் வாய் மூடி மௌனியாக இருந்த அவர் மனைவி கீதா ''நானும் பார்க்கிறேன். எதற்கும் ஓர் அளவு வேண்டாம்? அவளும் என்ன, பிள்ளையா பேயாங்கிறேன், உங்க பாட்டுக்கு உங்க மனம் போல் உங்களுக்குத்தான் தெரியு மென்று அடிக்கவும் பிடிக்கவுமா யிருக்கிறீங்களே! பிறந்த நாளைக்குக் கவுன் எடுக்க வசதிப் படலேன்னு சாதாரணமாக் கோபப்படாம விளக்கிச் சொல்றது. அதை விட்டுட்டுக் கம்பெடு தடியெடுன்னு மடத்தனமாப் பேசினீங்கன்னு அவள் மனம் என்னத்துக்கு ஆகும்? எனக்கு மட்டும் போதிப்பீங்களே. எப்பப் பார்த்தாலும் நீங்க கோபப்படுறீங்களே! உங்களுக்கே நல்லா இருக்கா?'' என்று பொங்கி வந்த அழுகையை அடக்கியவாறு மெலிந்த குரலில் கேட்டாள்.

''இப்போ உன்னே என்ன சொன்னேன்? அதற்குள் பெரிசாக் கண்ணீர் வடிக்கிறியே?''

''என் மேல் கோபப்பட்டீங்கன்னு சொல்லலியே. நம்ம குழந்தையிடம் நீங்க கோபப்படுவதைப் பார்த்தாத்தான் ஒரேயடியா மனசு சங்கடப்படுது என்றுள் கீதா.

''அப்படி வா, வழிக்கு!'' என்றார் நாராயணன். ''இந்த நாலு நாள் கோபத்தை உன்னுலே தாங்க முடியலையே! நீ இவ்வளவு நாளும் அவளிடம் பட்ட கோபத்தைக் கண்டு என் மனம் எவ்வளவு நொந்திருக்கும்? அதை விட்டு விடு. இப்ப என்னவோ பிஞ்சு மனம்னு சொன்னுயே, உன்சொல் பிரகாரமே சுதாவின் மனம் நீ கோபித்துக் கொண்ட நேரங்களில் என்ன பாடு பட்டிருக்கும்? அதைக் கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தாயா? உன்னைக் கண்டித்துக் கண்டித்து என் நாக்கும் தழும்பேறிப் போச்சு. அந்த வேதனை பொறுக்க மாட்டாமல் தான் உனக்காக இந்த நாலு நாளும் சுதா கிட்ட கோபப்படுகிற மாதிரி நடித்துக் காட்டினேன். அந்த நடிப்பு இவ்வளவு விரைவில் பலனைக் கொடுக்கும்னு நினைக்கலே.

''எதுக்கும் உன் நடையைப் பின்னே தள்ளி விடாதே! தாயே, பரமேசுவரி! தயவுசெய்து வேண்டிக் கொள்கிறேன். இந்த நாலு நாளும்போல் எந்த நாளும் தேவி திருக்கோலம் கொண்டருளக் கடவீர்களாக!''— என்று விஷமமாகத் தலையைக் குனிந்து தம் இரு கைகளையும் கூப்பி நின்றார்.


நாராயணன் ஆடிய நாடகம் பயன் அடைந்ததில் சுதாக் கண்ணுக்குக் கொள்ளை லாபம் என்று சொல்லவும் வேண்டுமோ?

நாடகம்

மங்களம் காசிராஜன்




MARS



பிளாஸ்டிக் வீடு

இது பிளாஸ்டிக் யுகம் அல்லவா ?

பிளாஸ்டிக்கினால் ஒரு வீட்டையே அமைத்திருக்கிறது லண்டனில் ஒரு பிளாஸ்டிக் நிறுவனம். நோக்கம்: பிளாஸ்டிக் எவ்வளவு பயனுள்ளது எவ்வளவு மலிவானது என்பதை நிரூபிப்பது.

சாதாரணமாக இன்று வீடு கட்டும் போது 200 பவுண்டு எடையுள்ள பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துகின்றனர் என்றால் இந்த விசேஷ வீட்டில் இரண்டரை டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

சுவர்கள், தரைகள், மேஜை நாற்காலிகள், மின்சார உபகரணங்கள் சகலமும் பிளாஸ்டிக் மயம்.

— பி.ஐ.எஸ்.

புதுக் கரடி

டாக்டர் லூகி அமென்டோல (Dr. Lugi Ammen-dola) என்ற அறிவியல் அறிஞர் மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்பதைவிடக் கரடியிலிருந்து வந்தவன் என்று கூறச் சான்றுகள் பல துணை செய்வதாக ரோமில் கூறியுள்ளார்.

குரங்கினிடம் காணப்படாத ஆனால் கரடியிடம் காணப்படும் கீழ்க்காணும் மனித அநுபவங்களே அதற்கு அவர் காட்டும் காரணங்கள்.

கரடிகள் வேட்டையாடும்போது மனிதனைப் போலவே தங்களுக்குள் வேலைகளைப் பங்கிட்டு செய்து கொள்கின்றன.

காதல் செய்யும்போது குட்டிகளைத் தூர அனுப்பி விடுவது கரடிகளின் பழக்கம்.

எதிர்காலத் தேவைகளைப் பற்றிக் குரங்குகள் கவலைப்படுவதில்லை.

குரங்குகள் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து சிந்திப்பதில்லை. மேற்போக்காகவே எதையும் செய்கின்றன. கரடிகள் அமைதியாக இருந்து ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கமுடையன.

குரங்குகள் மரத்தில் வாழ்ந்து பெரும்பாலும் மரக்கறி உணவு உண்பவை. ஆதி மனிதன் கரடிகளைப் போல் குகைகளில் விரும்பி வாழ்ந்திருக்கிறான்.

ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா
தகவல்: ஆர். எம்.



ரஷ்யாவில் 'வோட்கா'வின் விலை நான்கு டாலர். குடித்து விட்டுக் கலாட்டா செய்பவர்களைப் பிடித்து ஓர் அறையில் தள்ளி விடுவார்கள். அங்கே படுக்கவும் காலையில் மயக்கம் தெளிந்து குளிக்கவும் வசதி உண்டு. அந்த அறைக்கு வாடகை எட்டு டாலர் !

''டைம்'' -- ''பாபு''



சமயோசிதம் !



நீதிபதிக்கு முன்னால் ஒரு டாக்ஸிடிரைவர் விசாரணைக்காகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

விசாரணையின் போது டிரைவர் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லலாம் என்றார் நீதிபதி.

டிரைவர் சொன்னான்: ''நீதிபதி அவர்களே ! உங்கள் பின்னால் காரை ஓட்டி வந்ததால் நான் வேகமாகத்தான் போனேன். என் பின்னாலும் ஒரு கார் வந்து கொண்டிருந்தது. அதை ஓட்டி வந்தவருக்குத் தெரியும், நான் உங்களுக்குப் பின்னாலேயே தொடர்ந்து வந்து கொண்டிருந்தேன் என்பது. நீங்கள் நிறுத்தும்போது நான் வண்டியை நிறுத்தினேன். நீங்கள் போகும் போது நானும் விடாமல் பின்தொடர்ந்தேன். எனக்கு ஒரே மகிழ்ச்சி. உங்கள் மாதிரி நானும் கார் ஓட்டுகிறேனே, ஆகவே நான் ஒரு நல்ல டிரைவராகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்...''

வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது ! — பி. எஸ். எம்.

அமெரிக்காவில் இந்த ஆண்டு பாஷன் 'மினி'அல்ல. 'மிடி'. 'மிடி' என்பது கவுனை முழங்காலுக்குக் கீழே கணுக்காலுக்கு மேலே வரும்படி தைத்து அணிந்து கொள்வது.

- நியூஸ் வீக் —'முத்து'

உஷ்ஷ்! ரகசியம் !



டிஸ்ரேலி பிரிட்டிஷ் பிரதமர் ஆனதும் அவரது அலுவலகத்தில் கறுப்புநிற பிளாட்டிங் பேப்பர்தான் உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். ரகசியச் செய்திகளை எழுதி அதை ஒற்றிய பிறகு பிளாட்டிங் பேப்பரைக்கொண்டு அதை யாரும் கண்டுபிடித்து விடாமல் இருக்க இந்த ஏற்பாடு! - விக்கெண்ட் — 'பாலி'



பாலியம் திரும்புகிறது

ரா. வேங்கடேசுவரன்

யில்லே. சாதாரண ரீதியில், எளிய முறையில் பேசப் பார்க்கிறேன். அசாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்லவே, நானும் 'இவரும்?'

எல்லோரையும் அனுப்பி விட்டு அவர் உள்ளே வந்தார், வலது தொடையைப் பிடித்து ஒரு மாதிரி வீசி நடந்துகொண்டே. என் கண்களிலே ஒரு கலக்கம். அவர் தம் வலது காலை வீசி வீசி நடப்பதைப் பார்க்கும் போதே எனக்கு வயிற்றைக் கலக்கும். பழைய நினைவுகள் நிரடும். ஆனாலும் அவர் முகத்திலே ஒரு சிரிப்பு. வலியை மறைப்பதற்குத்தானே அந்தச் சிரிப்பு!

''காதலியாக எப்பொழுதுதான் வாழ்ந்து இன்பம் துய்ப்பது என்று கேட்பாயல்லவா? இன்று தொட்டு உன் இஷ்டப்படி செய்யலாம். கேட்பாரில்லே!''

என் முகம் என்ன பாவத்தைக் காட்டியதோ, எனக்குத் தெரியாது. அவர் பேசினார்: ''இந்த முகபாவத்தைப் பார்த்து ரசிப்பதற்கு அறுபது வயதென்ன — அறு நூறு ஆண்டுகள் கூட வாழலாம்'' என்றார்.

''பாலியம் திரும்புகிறது!'' என்றேன் நான்.

''பாலியம் திரும்பாமல் என்ன செய்யும்? உன் பிள்ளையும் பெண்ணும் என்னை என்ன செய்தார்கள், தெரியுமல்லவா? என்னைச் செல்லப் பிள்ளையாக்கி விட்டார்கள். காலுக்கு வேலையே கொடுக்காமல் ஆளைக் கொலுவில் வைத்துக் கெடுத்து விட்டார்கள். அவயவங்கள் மாத்துப்போன பிறகு நடந்தால் எப்படி இருக்கும்? அப்படியிருக்கிறது, என் உடம்பு இப்போது!'' என்று சொல்லிச் சிரித்தார்.

பிரமாதமான வைபவந்தான். அகத்தில் தான் பெரியவர்களும் குழந்தைகளும் குட்டிகளுமாக எத்தனை பேர் 'ஜே ஜே' என்று! ''இவ்வளவு செலவும் ஆர்ப்பாட்டமும் எதற்காக?'' என்றார் இவர் ஸ்ரீராமிடம். அவன் கேட்கவில்லே. அவன் அக்கா — என் மூத்த பெண் கோமதியும் அவனுடன் சேர்ந்து கொண்டாள். போட்டி போட்டுக் கொண்டு விழாவில் உற்சாகம் காட்டினாள்.

ஸ்ரீராமுடைய குழந்தை ஒன்று; கோமதியுடைய குழந்தை ஒன்று. பெற்றோர்களை அடிக்கடி ஊர் மாற்றுகிறார்கள் என்று அவர்களை எங்களிடம் விட்டிருந்தார்கள். அவர்களை எங்களிடம் வைத்துக் கொண்டு படிக்க வைத்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது அவர்களையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள், சஷ்டியப்த பூர்த்தி விழாவுக்காக வந்த பெண்ணும் பிள்ளையும்.

வீடு 'வெறிச்'சென்று போய்விட்டது. இப்பொழுது — நான் ஒரு காலத்தில் விரும்பிய விடுமுறை — ஓய்வு — கிடைத்துவிட்டது. பதினாறாவது வயதில் குடித்தனம் பண்ண வந்தேன். 'வேலே வேலே' என்ற ஓலம்தான் எப்பொழுதும். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கல்யாணம் செய்தோம்; இவை இரண்டும் மகத்தான சாதனைகள் இல்லையா? செல்வச் செருக்கிலோ, அறிவின் செருக்கிலோ பேச

*　　*　　*

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. 'இவர்' அடிக்கடி வெளியூருக்கு 'டூர்' போய்விட்டுத் திரும்பி வருவார். அப்பொழுதெல்லாம் இவருக்குச் சிறிய உத்தியோகம்தான். ஏதோ மாதிரி காலட்சேபம் பண்ணிக் கொண்டு வந்தோம். 'டூரி'லிருந்து திரும்பிய பின் அவருடைய பெட்டியையும் படுக்கையையும் நான்தான் பிரிப்பேன். மண்ணும் எஞ்சின் கரியும் கலந்து அழுக்கான துணிகள்தான் விழும்! அப்பப்பா! அந்தத் தலையணை உறை இப்படியும் கருமையாக ஆகுமா? மாடு மாதிரி எல்லாவற்றையும் சேர்த்து நானல்லவா துவைக்க வேண்டும்? ஒவ்வொன்றாகப் பிரிக்கும்போது என் கண்களில் நீர் துளிர்க்கும். நீரை 'இவரு'க்குத் தெரியாமல் சுண்டி விடுவேன். குழந்தைகளுக்குக் கூட ஏதாவது இருக்கும், பலூன் பம்பரம் என்று. ஏதாவது வாங்கிக் கொண்டு வந்திருப்பார். எனக்கு ஒன்றுமே இராது. என்னைப் பற்றி நினைக்கும்போது அவருடைய மன உணர்வு மரத்து விடுகிறதோ? கணவ

ருக்கு எது செய்தால் பிடிக்கும் என்றெல்லாம் கொடித்து நான் செயல்படுவதில்லையா? இவருக்கு மட்டும் ஏன் இப்படி?

அப்பொழுதெல்லாம் எங்கள் அகத்தில், வெளுப்பதற்கு ஆள் கிடையாது. அவருடைய சம்பளத்தில் அவ்வளவுதான் முடியும். பின் வீட்டில் நான் எதற்காக இருக்கிறேன்?

இந்தக் காலத்தில் பார்க்கிறேன். பெண் காதலியாகத் தொடங்கி, கல்யாணம் முடிந்து மனைவியாகிறாள்! எங்கும் காதல் கல்யாணம் தான். திருமணத்துக்கு முன்னரே ஒருவர்க்கொருவர் அறிமுகமாகி விடவேண்டும். சமூகம் இப்பொழுது அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் இந்தச் சமூகம் இவ்வளவு முற்போக்குடனும் பரபரப்புடனும், ஏன் இருக்கவில்லை? திருமணமாகிக் கூட நாங்கள் பேசியதில்லை. ஒரு கடிதம் கூடக் கிடையாது அவரிடமிருந்து 'ஆருயிர்க் காதலி' என்று! எழுதத் தைரியமும் இல்லை. எழுதத் தெரிந்திருக்கவுமில்லை. என்னை விட்டு விடுங்கள்; அவருக்குந்தான்.

ஒருவாறாக மனைவியாகத் தொடங்கி நான் காதலியாக வாழ முனைந்தேன். இவரை விட்டுப் பிரிந்திருக்க வேணும்; அவர் என்னை நினைத்துக் கொண்டு கடிதம் போட வேணும் என்றெல்லாம் எண்ணுவேன். அது எப்படி ஈடேறும்? குடித்தனம் என்று ஆரம்பித்த பிறகு இவரை விட்டுப் பிரிந்தால்தானே? எங்காவது கண் காணாத இடத்துக்குப் போக வேணும். அவர் என்னைத் தேடிக் கொண்டு வரவேணும். இருட்டில் தட்டித் தடவிக் கொண்டு என்னைத் தேடிக் கண்டு பிடித்துத் தோளைத் தொட்டு... ஐயே.... போதும் வெட்கக் கேடு! ஆம், இப்பொழுது அப்படித் தோன்றுகிறது.

எங்காவது தொலையலாம் என்றால் போக்கிடம் எங்கிருக்கிறது? திருமணம் ஆனதும் பெற்றோர்களை இழந்து விட்டேன். அண்ணனுக்காகக் கனுப்பிடி வைப்பதோடு சரி, அவனைப் பற்றி நினைப்பதற்கே எனக்குத் தோன்றாது. அப்படி ஒரு சிரமமான காலட்சேபம் அவனுடையது. அவனும் நல்லவன்தான். மன்னியும் நல்லவள்தான். அவனிடம் பசையிருந்தால் சும்மா யிருந்திருப்பானா? என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்க் கொஞ்ச நாள் வைத்துக் கொள்வான். கார்த்திகைக்கும் பொங்கலுக்கும் அவனிடமிருந்து இரண்டு ரூபாய் மணியார்டர் வரும்: என் பிறந்தகத்துப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அந்த மணியார்டர் போதாதா? ஒரு இரகசியம் இங்கு முக்கியம். அந்த மணியார்டர் பணத்தை இவர் திரும்பத் தன் தங்கைக்குத் திருப்பிவதும் எங்கள் வீட்டில் சர்வ சாதாரணமாகச் சில வேளை நடந்த நிகழ்ச்சி. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நாங்களும் என் அண்ணனைப் போல்தான் திண்டாடிக் கொண்டிருந்தோம். இவர் தங்கை எங்கள் வீட்டுக்கு வந்து எங்களுடன் சீராடினாளா? அப்படி யிருக்க நான் மட்டும் என் அண்ணன் வீடு சென்று எப்படிச் சீராட முடியும்?

சிலவேளை இவருடைய பேச்சின் தோரணை நூதனமாக இருக்கும்.

''குற்றாலத்தில் என் நண்பனும் அவன் மனைவியும் இருக்கிறார்கள். அவன் அங்கு, டெலிபோன் ஆபரேட்டராகப் பணிபுரிகிறான். அவனுக்கு அரசிலிருந்து வீடு கொடுத்திருக்கிறார்கள். அவன் தென்காசி ரயில் நிலையத்துக்கு வந்து உன்னை அழைத்துக் கொண்டு போவான். நான் அவனுக்கு எழுதுகிறேன். பத்து நாட்கள் குஷாலாக இருந்துவிட்டு வா; அதற்கப்புறமும்....''

''நீங்கள் எப்பொழுது வருவீர்கள்?''

அவர் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார்.. ''நான் எதற்காக வரவேண்டும்? அங்கேயும் இங்கே நடக்கும் நாடகத்தை நடத்துவதற்கா? நீ ஓய்வுக்குப் போகிறாயா அல்லது...''

''அதற்கில்லை; நீங்களில்லாமல்...''

''நீ இல்லாமல் நான் இருக்கலாமென்றால் நான் இல்லாமல் நீ அங்கிருக்கக் கூடாதா?''

அந்த ''நீ''யையும் ''நானை''யும் அவர் அழுத்திப் பேசியபோது அதில்தான் எவ்வளவு அனுதாப உணர்ச்சி? அதில் மயங்கிப்போய் நான் மீண்டும் பழையபடி ஆகிவிடுவேன், அவருடைய பதி(ல்) சொல் மீறாத பாவையாக — தர்மபத்தினியாக!

என்னைப் பெண் பார்க்க வந்தபோது அவரை நான் ''குடமிளகாய் மூக்கும் தாறு



மாய்'' என்று அம்மாவிடம் கேலி செய்தது நன்றாக நினைவிலிருக்கிறது!

''காணி நிலம் கிடையாது, கலப்பை சாத்த இடம் கிடையாது, வாயைப் பார் வாயை; ஆனாலும் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு வாய் கூடாது'' என்று என் வாயில் போட்டாள் அம்மா!

''ரொம்பத் துள்ளாதே; அவனே உனக்கு வந்து வாய்த்தால்...?'' — இது என் அண்ணா. அவரேதான் எனக்கு வந்து வாய்த்தார். இப்பொழுது என்னுடைய 'இவர்' ஆகிவிட்டார்! இப்பொழுது இவருடைய மூக்கைப் பார்த்தால் குடமிளகாய் போலவா இருக்கிறது? கத்தி போல் தீர்க்கமாக முகத்துக்கே அலங்காரம் போல் எனக்குத் தோன்றுகிறது! கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழுந்து இரண்டு குழந்தைகளும் பிறந்து விட்டன அல்லவா? அப்படித்தான் தோன்றும் என்று நீங்கள் நினைக்கலாம். அதை விட்டுத் விடுங்கள். இவரிடம் எப்படி ஈடுபட்டுப் போய்விட்டேன், தெரியுமா? ஜன்மாந்தரத்தில் செய்த புண்ணியமே காரணமாக இவர் எனக்கு வந்து வாய்த்தார் என்று நான் எண்ணத் தலைப்பட்டேன்.

இவர் இப்பொழுதுதான் ஒரு 'ரிடையர்டு ஆபீஸர்'. எனக்குக் கல்யாணம் ஆன புதிதில் ஒரு குமாஸ்தா தான்.

அலுவலகத்திலிருந்து வருவார். ஆடைகளைக்கூடக் களையாமல் அப்படியே சமையல் கட்டுக்கு வருவார். நான் 'மாவு' சலித்துக் கொண்டிருப்பேன். சல்லடையைப் பிடுங்கிக் கொண்டு, தாமே வாங்கிச் சலிக்க ஆரம்பிப்பார்!

''இந்த வேலை யெல்லாம் உங்களுக்கு எதற்கு? சொல்வதைக் கேளுங்கள். உடுப்பெல்லாம் அழுக்காய் விடும். அதோடு உங்களுக்குத்தான் ஆபீஸ் வேலையே கதியாயிற்றே. போங்கள், உங்கள் அறைக்கு!''

''அறைக்குப் போகாவிட்டால் என்னை அறைந்தே விடுவாய் போலிருக்கிறதே!'' என்பார்:

அந்தக் காலத்தில் 'குமாஸ்தாவின் பெண்' என்று ஒரு நாடகம் பார்த்தேன். 'குமாஸ்தாவின் மனைவி' என்று ஒரு நாடகம் எழுதி எந்தப் படாதிபதியிடமாவது அனுப்பிப் படம் எடுக்கச் சொன்னால் கொஞ்சம் பணமாவது வராதா? எனக்கு இப்படிச் சிலவேளை தோன்றும். இவர் ஏன் குமாஸ்தாவாகச் சேர வேணும்? படிப்பில்லையா? சாமர்த்தியம் இல்லையா? ஆபீஸ் ஆபீஸ் என்று கட்டி அழுகிறாரே. அப்படி அங்கேயாவது இவருக்குப் பிரத்தியேகச் சிறப்புண்டா? வேலை வேலை என்று பாத்தி கட்டித் தயார் செய்து வைத்திருப்பார். உத்தியோக உயர்வு என்று வரும் போது இன்னொருவருக்குப் போய்விடும். அவர் சமாதானம் செய்து கொள்ளுவார். வேலை யெல்லாம் நன்றாகத்தான் செய்கிறாராம். ஆனால் போடுகிற 'டிரஸ்'தான் போதாதாம். இதை அவருடன் கூட வேலை செய்யும் அக்கௌன்டென்டு சொன்னார். 'ஆள் பாதி ஆடை பாதி' இல்லையா? ஆடை காரணமாக ஒரு தாழ்ச்சி! இப்படி அவருடைய ஆடைக்கே தகராறாயிருக்கும்போது நல்ல புடவைகளுக்கு நான் எங்கே போவேன்?

காலையில் எழுந்திருந்தால் காப்பிக் கடை: காப்பிக் கடையா? கஞ்சிக் கடை! எல்லாருக்கும் கஞ்சிதான். இவர் ஒருவருக்குத்தான் காப்பி. குழந்தைகளுக்கு மறைத்துக்கொண்டு போய் நான்தான் கொடுப்பேன். குழந்தைகள் கேட்பார்கள் என்பதல்ல. குழந்தைகளைக் கண்டவுடன் பாதி காப்பியை அவர்களுக்குப் பங்கு போட்டு விடுவார் இவர். ஸ்ரீராம் என்னை ஒரு பார்வை பார்ப்பான், வாங்கிக் கொள்வதற்கு முன்னால். ''குழந்தை முழிக்கிறதைப் பாரு. உன்னுடைய பர்மிஷன் வேணுமாம், வாங்கிக்கொள்வதற்கு!'' என்பார் இவர். இதைத் தவிர்க்கத்தான் அந்த ஏற்பாடு!

காப்பிக்கு அப்புறம் குழந்தைகள் துணிகளை யெல்லாம் துவைக்கும் படலம். அப்பால் சமையல், பற்றுத் தேய்த்தல் இத்யாதி. இதோடு வரவு செலவுக் கணக்கும் என் தலையில்தான். மாதம் முதலில் என்னிடம் சம்பளத்தைக் கொண்டு வந்து கொடுத்து விடுவார். வீட்டு வாடகை, பலசரக்கு, பால், காய்கறி என்று சரிக்கட்டுவதற்குள், அப்பப்பா! உயிரே போய்விடும்!

''இந்த வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டுகிற தொல்லையை நீங்களே படுங்கள்; நான் எங்கேயாவது தொலைகிறேன்.''

''எங்கே தொலைவாய்? சரி, என் தம்பியிடம் போகலாமா? — அவர் முகத்தில் சிரிப்பு!


''தம்பியிடம்தானே? தாராளமாகப் போகலாம். தம்பி அலுவலகம் போவார்; தம்பி அகமுடையாளும் ஆபீஸ் போவாள். 'மன்னி கொஞ்சம் தோசைக்கு அரைத்து வைத்து விடுகிறீர்களா? மத்தியானம் குட்டிப் பட்டைகள் வந்தால் வார்த்துக் கொடுக்கலாம். அப்படி வார்த்துக் கொடுப்பதற்கு முன்னால் கொஞ்சம் அவர்களுக்குத் தலையில் எண்ணெய் வைத்து ரெண்டு செம்பு வெந்நீர் போட்டுக் குளிப்பாட்டி விட்டீர்களானால் நன்றாக இருக்கும்! மன்னி, நீங்கள்தான் கொஞ்சம் ஆசாரமாயிற்றே, அப்படியே சமைத்து வைத்து விட்டீர்களானால் எல்லோருக்கும் ஆயிற்று!' — இங்கு நாலு பேருக்குச் சமையற்காரி. உங்கள் தம்பி வீட்டுக்குப் போனால் எட்டுப் பேருக்குச் சமையற்காரி. இங்கே உங்கள் கெடுபிடியோடு சரி. அங்கே உங்கள் கெடுபிடி, உங்கள் தம்பி கெடுபிடி, தம்பி அகமுடையாளின் கெடுபிடி. போதாததற்கு அவர்கள் குழந்தைகளின் கெடுபிடி— இவ்வளவையும் சமாளித்தாக வேண்டும். வேறென்ன, ஓய்வெடுத்துக் கொள்ள உங்கள் வாழ்க்கைத் துணைவி ஊருக்குப் போயிருக்கிறாள்!''

''நீயும் ஒரு வேலையில் சேர்ந்திருந்தால் இந்தத் தகராறை யெல்லாம் தீர்த்திருக்க முடியுமே?''

''நான் போக மாட்டேன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் சொல்லுகிறீர்கள்! சொல்ல மாட்டீர்களோ பின்னே! — இதோ போகிறேன் — உங்களிடமிருந்தும், உங்கள் பிரச்னைகளிடமிருந்தும்....''

''சவாலா விடுகிறாய்? அப்படி என்ன பிரச்னை உனக்கு?''

வி. ஜி. பி யால் உருவாக்கப்பட்ட தவணைத் திட்டம் ஏராளமான மக்களுக்கு உதவுகிறது.



மேலும் மேலும் அதிகமான மக்கள்
விஜிபியின் சுலபத் தவணைத் திட்டத்தால் பயனடைகிறார்கள்

எல்லோரும் சுலபமாகப் பொருள்கள் வாங்கும் வாய்ப்பு. தயாரிப்பாளர்களின் விலைக்கே தரும் தனிச்சிறப்பு. வசதிக்கேற்றபடி பணம் செலுத்தும் முறை. தேர்ந்தெடுத்து வாங்க ஏராளமான பொருள்கள். உத்திரவாதமுள்ள தரமான பொருள்கள். விற்பனைக்குப் பிறகும் திருப்தியளிக்கும் சேவை.

இத்தனைக்கும் மேலாக வாடிக்கையாளர் பெறும் மன நிறைவு.

வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.

சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333
கிளை : தி.நகர், சென்னை-17. போன் : 440246
புதிய ஷோ-ரூம் :
27, ரத்தன் பஜார், மதராஸ்-3. போன்: 33214

VGP

NAS-127A

இரண்டு லட்சத்துக்கு மேலான மக்களுக்கு சேவை புரியும் தனிச் சிறப்பு.

''பிரச்னைகளா இல்லே? என்ன சமையல் செய்வது? எந்தச் சட்டைக்குப் பித்தான் அறுந்து போயிருக்கிறது. கிடைக்கிற காப்பிக் கொட்டையை வைத்துக் கொண்டு நீங்கள் இஷ்டப்படி நண்பர்களை அழைத்துக்கொண்டு வந்த போதிலும் — மாதம் முழுவதும் சமாளிப்பது எப்படி? இத்யாதி...''

''இந்தப் பிரச்னைகளிடமிருந்தா?''

''ஆம்; இவற்றிலிருந்து தொலையப் போகிறேன். பெண்ணையும் பிள்ளையையும் வைத்துக் கொண்டு எப்படித்தாம் சமாளிக்கிறீர்கள் பார்க்கலாம்.''

''நான் சமாளிக்கிறேனே, சமாளிக்கவில்லையோ, ஒன்றுமட்டும் நிச்சயம். உனக்கு ஒரு 'ஹாலிடே' வேண்டியதுதான்.''

ஒன்றை மட்டும் இங்கு சொல்லியாகவேண்டும். வரவு செலவு என் கையிலல்லவா? கொஞ்சம் சிறுவாடு சேர்க்க ஆரம்பித்தேன்! ஊருக்குப் புறப்படும்போது ஒரு நல்ல புடவை வாங்கிக் கொள்ளலாமே?

என்னுடைய திட்டம் நல்ல முறையில் உருவாயிற்று. சில வழிகளைக் கையாண்டேன். கஞ்சிக்குப் பாதிப் பால்தான். நல்லெண்ணெயைக் குறைத்தேன். பலன் என்ன? பணம் சேராமலா போய்விடும்? சேர்ந்த பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டேன். ஐம்பது ரூபாயா, சும்மாவா? அண்ணா குழந்தைகளுக்கும் மன்னிக்கும் கூட ஏதாவது வாங்கிக் கொண்டு போகலாமே?

அவரை விட்டு இப்பொழுதுதான் முதன் முதல் பிரியப் போகிறேன். அவர் என்ன நினைக்கிறாரோ? மென்மையான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவராயிற்றே? சொல்லப் போனால் அவருடைய மென்மையே எனக்கு எரிச்சலூட்டுகிறது! இந்த மனிதரைக் கொஞ்சம் திண்டாட விட்டு வேடிக்கை பார்த்தால் மகத்தான பாவமாகிவிடுமா என்ன?

ஆயிற்று. புறப்படுவதற்கு இன்னும் நாலு நாட்கள்தான்.

இரவு எட்டு மணி. அவர் இன்னும் வீடு திரும்பவில்லை. வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்தேன். 'இவரை' எதிர்நோக்கிக் கண் பூத்துப் போய்விட்டது! திரும்ப உள்ளே நுழையும்போது வாசலில் சைக்கிள் மணி; யாரது? அவரது அலுவலகத்து அட்டெண்டர் நம்மாழ்வார் போலிருக்கிறதே?


''அம்மா, சீக்கிரம் அம்மா... ஆஸ்பத்திரியில் 'ஆர்த்தோபிடிக்' பகுதிக்குப் போங்கள். பன்னிரண்டாம் நம்பர் படுக்கையில்...''

''என்ன நம்மாழ்வார், என்ன நடந்தது, சீக்கிரம் சொல்லுமேன்...''

''ஒன்னுமில்லீங்கம்மா, ஆபீஸ் ரிக்கார்டு எடுக்கறேன்னு ஐயாவே அவசரமா ஏணி மேலே ஏறினாரு; ஏணி சரியாப் பொருந்தல்லே போலிருக்கு, சாஞ்சிட்டுது; இலேசாகத் தொடையில் அடி!''

நான் ஓடினேன். இலேசாகத் தொடையில் அடி என்றால், பிளாஸ்டர் போடுவானேன்?

அவர் வலியால் துடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதும் அந்த முகத்திலே ஒரு சிரிப்பு! ''சாவித்திரி! உன் பிரயாணத்தை



நீ ஒத்திப் போட வேண்டாம். உனக்கும் கொஞ்சம் விடுதலை வேண்டாமா? என்னைப் பற்றியா கவலைப்படுகிறாய்? இதோ பார், நாலு நாளில் சுருட்டி மடக்கிக் கொண்டு எழுந்துவிட மாட்டேனா?'' என்றார்.

எனக்கு விடுதலையா? என்ன மாதிரி விடுதலை? 'இவரி'டமிருந்து விடுதலை என்று எண்ணுகிறாரா? ஈசுவரா, அந்த விடுதலை வேண்டவே வேண்டாம். எனக்கு விடுதலை என்னிடமிருந்தேயல்லவா — என்னுடைய அசட்டு நினைப்புகளிடமிருந்தே அல்லவா ஏற்பட்டு நான் தப்பிச் செல்ல வேண்டும்? இதை அவரிடம் எப்படிச் சொல்வது?

இதைச் சொல்லத் தெரியாமல் திண்டாடின நான் இன்னொன்றைச் சொல்ல விரும்பினேன். ஆனால் அதையும் சொல்ல முடியாமல் தேம்பினேன். ''போதும், என்னுடைய துர்க்குணத்துக்குப் பகவான் கூலி கொடுத்து விட்டார்!'' என்றுதான் என்னால் சொல்ல முடிந்தது.

'சிறுவாடு' சேர்த்த பணம் என்ன ஆயிற்று என்பதை இங்கு நான் குறிப்பிட வேண்டும். ஆனால் இதைக்கூட அன்று என்னால் அவரிடம் கூற முடியவில்லை.

ஆஸ்பத்திரிச் செலவை யெல்லாம் நான் எப்படிச் சமாளித்தேன் என்ற உண்மை கடைசியில் அவருக்குத் தெரிந்துவிட்டது. அதற்கு அவர் எனக்கு என்ன தண்டனை கொடுத்தார் என்பதை உங்களுக்கு நான் எப்படிச் சொல்வது? அது அந்தரங்கமான விஷயமாயிற்றே?

ஃ ஃ ஃ

''ஷஷ்டியப்த பூர்த்தி ஆக வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தாயா, கனவு காண்பதற்கு?''

''ஆமாம்; ருசியான கனவு; நீங்கள் வந்து கலைத்து விட்டீர்கள்!''

''பட்டப் பகலிலே ருசியான கனவா?''

''ஆமாம், ரொம்பச் சுவையான கனவு! கனவிலாவது உங்களுடன் இன்னும் அறுநூறு ஆண்டுகள் வாழ்ந்து இன்புறுவதாகக் காணக் கூடாதா?'' என்றேன் நான்.

''பாலியம் திரும்புகிறது!'' என்றார் அவர்.



★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

தமிழ் நாட்டில் நூலக ஆணைக் குழுவின் உறுப்பு நூலகங்களின் பரிதாப நிலை குறித்து வருந்தாமல் இருக்க முடியவில்லை. மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவ வேண்டிய இந்த நூலகங்கள் மக்களின் சாதாரண அறிவுப் பெருக்கத்துக்குக்கூட உதவக் கூடியவையாய் இன்று இல்லை என்பது அவற்றை நாடிச் செல்வோர் உணர்ந்துள்ள ஒன்று. பல அநுவலகங்களின் பத்திரிகைப் பகுதியில் பயனுள்ள எந்தச் செய்தித் தாளையுமே காண முடிவதில்லை. வார, மாத ஏடுகளிலும் பொதுமக்கள் விரும்பும் உருப்படியான பத்திரிகைகள், அநேகமாகக் காணப்படுவதே யில்லை. தென்படும் ஒருசில ஏடுகளும் கட்சி, அரசியல் ஏடுகளாகவே இருப்பது குறித்து விசாரித்தால் அவை அன்பளிப்பாகப் போடப் படுகின்றன எனச் சொல்லப்படுகிறது. இவ்வன்பளிப்புப் பத்திரிகைகளும் இல்லாவிட்டால் வெறும் மேசைகள்தான் இருக்கும் போலும்!

பணம் கொடுத்துப் பத்திரிகைகள் வாங்க முடியாத ஏழைகளுக்கும், வேலை வாய்ப்புகள் குறித்துப் பல்வேறு இதழ்களைப் பார்க்கவேண்டியவர்களுக்கும் உற்ற துணையாய் இருக்க வேண்டிய நூலகங்கள் எவ்விதப் பயனுமின்றி இயங்கி வருவது துயர் தருவதொன்றாகும். பொதுமக்கள் அரசிதழ் (கெஜட்) பார்க்கக் கூடிய ஒரே இடமாக நூலகம் இருந்தது. தற்போது அதுகூடப் பல நூலகங்களுக்கு அனுப்பப்படுவதில்லை. புத்தகப் பகுதியைப் பற்றியோ புதிய நூல்கள் சேர்க்கை பற்றியோ கூற வேண்டியதேயில்லை. சென்னை போன்ற ஒருசில பெரிய நகரங்களின் தலைமை நூலகங்களைத் தவிர மாநிலம் முழுதும் நூல் நிலையங்களில் அநேகமாக இதே நிலைமைதான் உள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன் ஏராளமான தமிழ், ஆங்கில ஏடுகள் நூலகங்களில் புழங்கிய நிலை இன்று அடியோடு மாறிவிட்டது. பொறுப்பானவர்கள் சற்றும் கவனிக்காதிருப்பதேன்?

காரைக்குடி—1
22—8—70 கே. எஸ். ராமையா

தமிழ் நாட்டுக்குத் தனிக் கொடி வேண்டும் என்று முதல் அமைச்சர் திரு கருணாநிதி கோருவது விநோதமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. இதை உடனே நிராகரிக்காமல் அங்கீகரித்துவிடுவது போல் இந்தியப் பிரதமர் நடந்துகொள்ளும் விதம் இதயத்தை மேலும் காயப்படுத்தி யிருக்கிறது. தாம் சுற்றுப் பயணம் செய்து வந்த நாடுகளில் உள்ள கொடிகளைச் சுட்டிக்காட்டித் தனிக்கொடி கேட்கத் தெரிந்த அமைச்சருக்கு அந்த நாடுகளில் காணப்படும் தொழில் வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, அனைவருக்கும் வேலை வாய்ப்பு, வறுமை இன்மை ஆகியவையெல்லாம் கண்ணில் படவில்லையா? அவற்றைச் சுட்டிக் காட்டித் தம் மாநிலமும் அவ்வாறு உயர்வெய்த எண்ணி இயன்றவரை செயல்பட முற்பட்டிருக்க வேண்டும். அதை விடுத்து ஒருவருக்கும் பயன்படாததும் ஒருமைப்பாட்டினைச் சீர்குலைப்பதுமான கொடிப் பிரச்னையைப் பெரிதாக அவர் பிடித்துக்கொண்டிருக்க வேண்டாம்.

மதுரை—13
25—8—70 ந. முருகேசன்

★ தற்போது அரசாங்கம் வெளியிட்டுள்ள பத்தாவது வகுப்புக் கணக்குப் புத்தகத்தில் பரிசுச் சீட்டு பற்றிக் கீழ்க்கண்ட கணக்கு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

பக்கம் 9. கணக்கு எண் 6.

இராமு, கோபு என்ற இருவர் முறையே ரூ. 0.25, ரூ. 0.75 கொடுத்து ஒரு தமிழக அரசுப் பரிசுச் சீட்டு வாங்கினர். இச்சீட்டில் பரிசு கிடைத்தால் விதைப்படி பிரித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூட்டணி சேர்ந்து கொண்டனர். அவர்களுடைய பரிசுச் சீட்டு இரண்டாவது பரிசு ரூ. 10,000 அடைந்தால், இராமுவின் பங்கு என்ன?

இம்மாதிரிக் கணக்குகள் மாணவர்களுக்குப் படிக்காமலே, உழைக்காமலே பணக்காரனாவது எப்படி என்ற எண்ணத்தையே உண்டாக்குகின்றன. வீட்டுக்கும் கேடு; நாட்டுக்கும் கேடு. அரசாங்கமே பாடப் புத்தகங்களை வெளியிடுவதால் ஏற்படும் நிலையே இதற்குக் காரணம். 'சூதுவிரும்பேல்' என்று கற்பித்த மாணவர்களிடமே, சூதாட்டம் சம்பந்தமான கணக்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் ஆசிரியர்கள் இருக்க வேண்டியுள்ளது. வருங்காலப் பிரஜைகளின் உள்ளத்தில் விஷவித்தை ஊன்றலாமா? பாடப் புத்தகம் பிரசாரப் புத்தகமாக மாறக்கூடாது.

திருச்செங்கோடு
21—8—70 கே. எஸ். கோவர்த்தனன்


காலை ஒன்பது மணி. ரிசர்வ் பாங்கி வாசலில் ஒரு பெரிய கும்பல் காத்துக் கிடக்கிறது. மணி பத்து. கதவு திறக்கப்படுகிறது. கூட்டம் திமுதிமுவென்று ஓடி, குனிந்து, இறுகி, கருகி, போலீஸ்காரர்களையும் பொருட்படுத்தாமல்—க்யூவில் நிற்கப் பலப் பரீட்சை நடத்துகிறது. ஐந்து நிமிடப் போராட்டத்துக்குப் பிறகு வரிசை ஒழுங்கு பெறுகிறது. எதற்காக இந்தப் போராட்டம்? கிழிந்த கரன்சி நோட்டுக்களை மாற்றுவதற்காகத்தான்! ஒரு டோக்கன் போட்டுக் கொடுத்தால் ஒரு ரூபாய் சேட்டுகாரர்கள் கொடுக்கிறார்கள். வேலை கிடைக்காமல் தவிக்கும் வாலிபர்கள், வயிற்றுக்காக இந்த ஒரு ரூபாய்க்கு இப்படி அவதிப்படுகிறார்கள். சென்னையில் இதுபோல் வேலையில்லாத் திண்டாட்டத்தின் எதிரொலிகள் பல. அந்தக் கூட்டத்தில் நானும் ஒருவன் என்பதைக் கண்ணீர் மல்கத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை—3
25—7—70 எம். வி. ராமச்சந்திரன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

THE BENEFITS OF THE WIDEST RANGE OF PRODUCTS ... TO MATCH A DIVERSE VEHICLE POPULATION



India Pistons manufacture a wide range of piston assemblies, designed and developed to the highest international standards, for all popular types of cars, commercial vehicles, jeeps, tractors, motor cycles, scooters and stationary diesel engines.

Besides Original Equipment, India Pistons produce assemblies to their usual high standards as replacements for a large diversity of current and pre-dated vehicles. The present production range includes 80 types of pistons, 1600 types and sizes of rings and 60 types of cylinder liners.

INDIA PISTONS LTD.
SEMBIAM MADRAS-11

IP-144

